விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 ஆடி 19 செவ்வாய்க்கிழமை (04.08.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 228




# பிரிவினை வாதத்திற்கு இடமளிக்க மாட்டேன்

## 61 சிவில் அமைப்புக்களை இணைத்து மகிந்த பேச்சு

(கொழும்பு)

நாட்டில் பிரிவினைவாதத்திற்கு இடமளிக்கப்பட மாட்டாது என தெரிவித்துள்ள முன்னாள் ஜனாதிபதியும் பொதுத் தேர்தல் வேட்பாளருமான மகிந்த ராஜபக்ஷ, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் ஐக்கிய இலங்கை என்ற கோட்பாட்டுக்கு குந்தகம் ஏற்படும் வகையில் செயற்பட்டு வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)



















நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயலமர்வு ஒத்திவைப்பு

புதியஆசிரியர் பிரமாணக் குறிப்பின் பிரகாரம் ஆசிரியர்களுக்கான வினைத்திறன் தடைதாண்டல் செயலமர்வு ஒன்று எதிர்வரும் 6,7,8 ஆம் திகதிகளில் மத்தியகல்வி அமைச்சின் அறிவுறுத்தல்களுக்கமைய வவுனியா வடக்கு புளியங்குளம் ஆசிரியர் நிலையத்தால் நடைபெறவிருந்தது என்றும்,

இவ்வமர்வு மத்திய கல்வியமைச்சின் அறிவுறுத்தல்களுக்கமைய ஒத்திவைக்கப்பட்டுள்ளது. எனவே குறித்த திகதியில் இவ்வமர்வுக்கு அழைக்கப்பட்ட ஆசிரியர்கள் சமுகமளிக்கத் தேவையில்லை என்பதை வவுனியா வடக்கு புளியங்குளம் ஆசிரியர் நிலைய முகாமையாளர் சு.ஜெயச்சந்திரன் தெரிவித்துள்ளார்.(செ)



இலங்கை நாடாளுமன்ற தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு நேற்றைய தினம் ஆரம்பமாகியுள்ளது.
இந் நிலையில் யாழ்.மாவட்டத்திலும் நேற்றைய தினம் அரசாங்க அலுவலகங்களில் தபால் மூல வாக்களிப்பு நடைபெற்றதை படத்தில் காணலாம்.

# மரண அறிவித்தல்

## செல்வி ரூபராணி சுந்தரலிங்கம் (ரூபி)



ஏழாலை அருள்மிகு கண்ணகை அம்பாள் தேவஸ்தான பூசகர் திரு. கா.சுந்தரலிங்கம் அவர்களின் சிரேஷ்ட புத்திரி

**செல்வி ரூபராணி (ரூபி)**

அவர்கள் சிவபதம் அடைந்துள்ளார்.

அன்னார் பூசகர் சுந்தரலிங்கம் மனோராணி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும் கிருஸ்ணரதன் (UK), சுகிர்தா, ஜெய்தா(UK), றஞ்சித்(UK), றஜீபா, சஜீபா ஆகியோரின் அன்பு சகோதரியும் அமரர்கள் பூசகர் கார்த்திகேசு, தங்கம்மா பூசகர் பொன்னுத்துரை, மற்றும் செல்லமணி ஆகியோரின் அன்பு பேர்த்தியும் குகதாஸ், வசந்தராணி, ஆகியோரின் பெறாமகளும் சிவனேஸ்வரன் (சுவிஸ்), தருமகுலரத்தினசிங்கம், ஜெகநாதன், தனபாலசிங்கம், சிவலிங்கம், பரமேஸ்வரி ஆகியோரின் மருமகளுமாவார்.

அன்னாரது ஈமச்சடங்குகள் 04-08-2015 இன்று செவ்வாய்க்கிழமை பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் (சிவகுருகடையடி நடைபெற்று பூதவுடல் உசத்தியோடை இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

ஏழாலை,
சிவகுருகடையடி.

தகவல்
குடும்பத்தினர்.

(C-1737)

## கண்ணீர் காணிக்கை



கிளி/கிளிநொச்சி மகாவித்தியாலய அதிபர் திரு.பங்கயற்செல்வன் அவர்களின் அன்புத் தந்தையும் எமது இல்லக் குழந்தைகளுக்கு கல்வி புகட்டும் ஆசிரியையான திருமதி கலைச்செல்வி அவர்களின் மாமனாருமான

**அமரர் கணபதிப்பிள்ளை அரசரத்தினம்**

அவர்கள் 01-08-2015 அன்று (சனிக்கிழமை) சிவபதமடைந்தமையினையிட்டு இவரது இழப்பினால் ஆறாத்துயரில் மூழ்கியிருக்கும் குடும்பத்தார் உறவினர்களுடன் நாமும் துயரினைப் பகிர்ந்து கொள்வதோடு விதியின் கணக்கினை வென்றிட எம்மால் இயலாதே. அதனால் அவர்தம் பிரிவுக்காக எங்கள் இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**அன்னாரின் இழப்பு அவரது குடும்பத்தினருக்கும் மட்டுமல்ல; சமூகத்திற்கே பாரிய இழப்பாகும்.**

"ஆண்டாண்டு காலம் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவாரோ மாநிலத்தீர் – வேண்டா!
நமக்கும் அதுவழியே! நாம் போம் அளவும்
எமக்கென்னென் றிட்டுண் டிரும்"

அன்னாரது ஆத்மா எல்லாம்வல்ல உருத்திரபுரீசுவரனது திருவடியில் சங்கமமாகி நித்திய வாழ்வு பெற இறைவனை இறைஞ்சுகின்றோம்.

(C-1738)

தலைவர் - தி.இராசநாயகம், பணிப்பாளர்கள், பணியாளர்கள், இல்லக்குழந்தைகள்
மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம், ஜெயந்திநகர், கிளிநொச்சி.

## சமுக...

மனாஸ் மக்கீன் தெரிவித்துள்ளார். மேலும், நாடளாவிய ரீதியில் தேர்தல் கண்காணிப்பாளர்கள் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (செ-11)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

நம்பிக்கை இழக்காதீர்கள், அக்கறை காட்ட நாங்கள் இருக்கின்றோம்...

எம் மக்களால் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்ட
ஜனாதிபதி மைத்திரியின் வெற்றிலைச் சின்னம்

அரச உத்தியோகத்தர் நிலை மேம்பாடு 180நாட்களுக்குள்......

- ✔ ஜனாதிபதி மைத்திரி பாலா சிறிசேனாவினூடாக அரச உத்தியோகத்தருக்கான சம்பளம் ரூபா 25 ஆயிரமாக உயர்த்துவேன்.
- ✔ அரச உத்தியோகத்தர்களுக்கு வடமாகாணத்தில் நிலவுகின்ற தர உயர்வுகள். சம்பள அதிகரிப்புக்கள். பதவி வெற்றிடங்கள் என்பனவற்றை அரச சுற்று நிருபத்திற்கு ஏற்ப சரியான நேரத்தில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன்.
- ✔ கடந்த காலங்களில் யுத்த பிரதேசங்களில் கடமையாற்றிய அரச உத்தியோகத்தர்களிற்கு புலி முத்திரை குத்தப்பட்டு பதவி உயர்வுகள் இல்லாமலும் பழிவாங்கப்பட்டவர்களிற்கும் கஷ்ட பிரதேசங்களில் மக்களுக்கு சேவையாற்றியவர்களிற்கும் ஜனாதிபதியுடன் கலந்துரையாடியதற்கு ஏதுவாக விசேட அமைச்சரவை பத்திரம் சமர்ப்பித்து அவர்களின் பதவி உயர்வுகளிற்கும் வழி செய்வேன்.
- ✔ பட்டப்படிப்பினை முடித்து கடந்த யுத்த அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டு காலம் கடந்த நியமனத்திகதி இடப்பட்டு வழங்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களின், ஆசிரியர்களின்,அரச உத்தியோகத்தர்களின் நியமனத்திகதியினை 3 வருடங்களிற்கு முன் நகர்த்தி அவர்களின் வருடாந்த தர உயர்விற்கு நடவடிக்கை எடுப்பேன்.

அங்கஜன் இராமநாதன்
(ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய குழு உறுப்பினர் மற்றும்
வடமாகாண சபை உறுப்பினர்)



X 1

(சி-342)

புதிய நாடு – புதிய தலைவர் – புதிய தலைமுறை – புதிய எதிர்பார்ப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a Newspaper in Srilanka


# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com



கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே


# வடக்கு தமிழ் மக்களுக்கு ஜனநாயக உரிமைகளை வழங்கியவர் மகிந்தவே!

## இப்படி கருத்துரைக்கிறார் கோத்தா



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை போல் வடக்கு தமிழ் மக்களுக்கு ஜனநாயக உரிமைகளை வழங்கிய வேறு ஒரு தலைவர் இருக்க முடியாது என முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க....

## தபால் மூலமாக 80 வீத வாக்களிப்பு

(யாழ்ப்பாணம்)

நாடளுமன்ற பொதுத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பில் யாழ்.மாவட்ட தேர்தல் தொகுதியில் 80 வீதமான வாக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ் மாவட்டத்தில் தபால் மூல

23ஆம் பக்கம் பார்க்க....

## அச்சுறுத்தப்பட்டால் வாக்கெடுப்பு ரத்து

(கொழும்பு)

தபால் மூல வாக்களிப்பு நேற்றிலிருந்து நடைபெற்று வரும் நிலையில், வாக்களிப்பு நிலையத்தினருகில் ஏதேனும் அசம்பாவிதங்கள் நேர்ந்தால், வாக்காளர்கள் அச்சுறுத்தப்பட்டு அல்லது வற்புறுத்தப்பட்டால் குறித்த இடத்தின் வாக்கெடுப்பு உடன் ரத்துச் செய்யப்படும் என தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

வாக்களிப்பு நிலையத்திற்கு அருகில் வேட்பாளர்களின் பதாகைகளை காட்சிப்படுத்தல் உள்ளிட்ட செய

23ஆம் பக்கம் பார்க்க....

## தேசிய அரசாங்கத்தை அமைக்கும் திட்டம் கைவிடப்படவில்லை - ஐ.தே.க

(கொழும்பு)

தேசிய அரசாங்கத்தை அமைக்கும் திட்டத்தை கைவிடவில்லை என ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரும அமைச்சருமான லக்ஸ்மன் கிரியல்ல இதனைத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 17-ம் திகதி தேர்தலின் பின்னர் தேசிய அரசாங்கமொன்றை அமைக்க திட்டமிட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

ஒட்டு மொத்த பாராளுமன்றமே அரசாங்கமாக இயங்கக் கூடிய ஓர் பின்னணி உருவாக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

முழுப் பாராளுமன்றமே நாட்டின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கக் கூடிய நிலைமை உருவாக்கப்படும்.

சிறுபான்மை மக்கள் துன்புறுத்தப்பட்டு, தனித் தனியாக பிளவடைந்து பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாது என அவர் குறிப்பிட்டுள்

23ஆம் பக்கம் பார்க்க....

## ஆசிரியர் என்னை அடித்தார்

### ஆனால் என் பெற்றோர் பொலிஸில் முறையிடவில்லை

(கொழும்பு)

பாடசாலையில் தான் கல்வி கற்ற காலத்தில் பாடசாலை அதிபர் ஒரு முறை தன்னை பிரம்பு உடையும் வரையும் அடித்ததாகவும் அதற்கான காரணம் என்னவென்று தான் இன்னும் அறியவில்லை எனவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பு அசேகா கல்லூரியில் நேற்று நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

23ஆம் பக்கம் பார்க்க....



## பிள்ளைகளுக்கு பெற்றோரே சிறந்த வழிகாட்டிகளாக வேண்டும்

### யாழ்.பல்கலை துணைவேந்தர் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

தமது பிள்ளைகளின் வாழ்க்கையை வேறொருவர் வழிநடத்துவாரென நம்பி செயற்படும் பழக்கத்தை பெற்றோர் மாற்றிக் கொள்ள வேண்டும் என யாழ்.பல்கலைக் கழக துணை வேந்தர் வசந்தி அரசரட்ணம் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நல்லூர் ஸ்ரீ துர்க்கா மணி மண்டபத்தில் நடைபெற்ற இந்து ஆராய்ச்சி மாநாட்டின் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,



பிள்ளைகளைநல்லமனிதர்களா

23ஆம் பக்கம் பார்க்க....

## சுமுகமான முறையில் தபால் வாக்களிப்பு

((கொழும்பு)

நாடாளுமன்ற தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு நடவடிக்கைகள் சுமுகமான முறையில் நடைபெற்று வருவதாக நீதியானதும சுதந்திரமானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் கபே அமைப்பு தெரிவித்துள்ளது.

அரசாங்க ஊழியர்களின் தபால மூல வாக்களிப்பு நடவடிக்கைகள் நேற்று ஆரம்பமாகியுள்ள நிலையிலேயே வாக்களிப்பு நடவடிக்கைகள் சுமுகமான முறையில் நடைபெற்று வருவதாக நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் கபே அமைப்பின் தேசிய அமைப்பாளர் அஹமட்

02ஆம் பக்கம் பார்க்க....

## சகோதரியை வல்லுறவுக்கு உட்படுத்திய சகோதரனுக்கு 5 வருட கடூழிய சிறை

### யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

சொந்தச் சகோதரியாகிய 12 வயதுடைய சிறுமியை, 16 வயதுடைய அவரது கூடப்பிறந்த சகோதரன 8 வருடங்களுக்கு முன்னர் வல்லுறவுக்கு உட்படுத்திய வழக்கில், சகோதரனுக்கு யாழ் மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன், 5 வருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளார்.

இந்த வழக்கு நேற்று திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே, இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் கொழும்புத்துறையில் 2007 ஆம் ஆண்டு இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது. இதனையடுத்து, 12 வயது நிரம்பிய கூடப்பிறந்த சகோதரியை பாலியல் வன்புணர்வு புரிந்ததாக அவருடைய சொந்த சகோதரனாகிய 16 வயதுடைய சிறுவனுக்கு எதிராக சட்டமா அதிபரினால் குற்றம் சுமத்தப்பட்டு, யாழ்.மேல் நீதிமன்றத்தில் இந்த வழக்கு விசாரணை நடைபெற்றது.

பாதிக்கப்பட்ட பெண் (இப்போது அவருக்கு 20 வயது, சகோதரனுக்கு வயது 24) 3 ஆம் திகதி திங்கட் கிழமை நீதிமன்றத்தில் சாட்சியமளித்தார்.

அப்போது, எதிரிக் கூண்டில் நின்ற

23ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

ஆன்மீகம் 249

## அஹங்காரத்தை விடுதல்

...அது அவள் உண்மையிலேயே மனிதர்களை அழித்தாள் என்பதல்ல.

அவள் நிஜ மனிதர்களை கொன்றிருந்தால், ஜெயிலுக்குச் சென்றிருப்பாள்; நாமும் அவளை ஸ்தோத்திரங்களின் வாயிலாக வழிபட்டுக் கொண்டிருக்க மாட்டோம்! அவள் குற்றவியல் சட்டத்தின் கீழ் வந்திருப்பாள்!

அசுரர்கள் என்பது மனிதனுக்குள் இருக்கும் பல விதமான தீய குணங்கள் அல்லது அஹங்காரத்தைக் குறிக்கிறது.

இந்த அஹங்காரத்தைத்தான் தேவி அழித்து அவனுக்கு அவற்றிடமிருந்து விடுதலை கொடுக்கிறாள். அதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

மகிஷத் தலையுடன் ஒரு அசுரன்!

அது சிலரது எருமைத் தோலை நமக்குப் புரிய வைக்கத்தான்!

குரு நம்மை எத்தனை முறை எழுப்பி அவரது பாதையில் திருப்பி விட்டாலும் நாம் நமது பாதையை விடாமல் பற்றிக்கொண்டு இருக்கிறோம்!

நாம் குருவின் அழைப்பிற்கு உள்வாங்கும் தன்மையற்றும், உணர்ச்சியற்றும் இருக்கிறோம்.

பாருங்கள், குருவுடன் வாதம் செய்வது, நீங்களே உங்களுக்குக் கொடுத்துக்கொள்ளும் மிகப்பெரிய தண்டனை.

நான் நேர்மையுடன் சொல்ல வேண்டும் என்றால், நீங்கள் குருவுடன் வாதம் செய்வதில் சிக்கிக் கொண்டுவிட்டால், உங்களுக்கு இதை விடப்பெரிய தீங்கை யாராலும் செய்துவிட முடியாது.



நீங்கள் குருவுடன் வாதம் செய்யும்பொழுது உங்களுக்கே போதுமான அளவிற்கு தீங்கு செய்துகொள்கிறீர்கள்.

ஒவ்வொருவரையும் அவரவர்க்கேற்ற வகையில் எவ்வாறு மலர வைக்க வேண்டும் என்பது குருவிற்குத் தெரியும்; நாம் செய்ய வேண்டியதெல்லாம் விசுவாசத்துடனும், தைரியத்துடனும் அவருக்குத் திறந்து இருப்பதே.

சொல்லுங்கள்....

ஸ்வாமிஜி, நீங்கள் தான் என்னுடைய குரு என்பது எனக்குத் தெரிந்தாலும் உங்கள் முன்னிலையில் தயக்கமாகவும் அச்சமாகவுமே இருக்கிறது!

(பரமஹம்சர் சிரிக்கிறார்) நீங்கள் இதைச் சொல்வதில் இருந்தே, இந்த நிலையில் இருந்துவெளியே வர விரும்புகிறீர்கள் என்று அர்த்தமாகிறது.

நீங்கள் ஒரு மிகப்பெரிய அடியை எடுத்து வைக்கத் தீர்மானித்து விட்டீர்கள்.

நான் இதை விளக்குகிறேன்... உங்களுடைய இருப்புத் தன்மை என்னைத் தெளிவாக அடையாளம் கண்டு கொண்டுவிட்டது; ஆனால், உங்கள் மனமோ சண்டையிட்டுக்கொண்டிருக்கிறது.

உங்கள் இருப்புத் தன்மை என்னை அடையாளம் கண்டு கொள்ளாவிடில் நீங்கள் மீண்டும் மீண்டும் இங்கு வந்து கொண்டிருக்க மாட்டீர்கள்.

நீங்கள் இங்கு வருவதற்கு வீட்டில் நிறைய தொல்லைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. இல்லையா?


உங்களுக்கு மிகவும் சுலபமானது என்னவென்றால், பேசாமல் வீட்டிலேயே இருந்து கொண்டு உங்கள் வேலையைப் பார்த்துக் கொண்டிருப்பது. அது உங்கள் குடும்பத்தினரையும் சந்தோஷப்படுத்தியிருக்கும். இல்லையா?

நீங்கள், ஏன் மீண்டும் மீண்டும் ஆசிரமத்திற்கு வந்து என்னைப் பார்க்க விரும்புகிறீர்கள்? என்னிடம் வருவதற்காக ஏன் மீண்டும் மீண்டும் வீட்டில் விவாதங்களை எதிர்கொள்கிறீர்கள்? (தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி




### இங்கிலாந்தில் கணிதம் புரிந்துகொள்ளும் ஆற்றல் கொண்ட விசித்திர நாய்க்குட்டி



என்றென்றும் செல்லமாக நாய்கள் வளர்க்கப்படுவதற்கு அதன் குறும்புகளும், மனிதரோடு அது ஒன்றிப்போகும் விதமும் காரணமாக இருக்கலாம்.

இங்கிலாந்தில் ஒரு செல்ல நாய்க் குட்டி பிறந்து சில மாதங்களிலேயே கிண்டல் செய்யும் 'டங் அவுட்' ஸ்மைலி போல தானாகவே அவ்வப்போது செய்து வந்தது. இதைக் கவனித்த அதன் உரிமையாளர் கட்டளையிட்டால் அவ்வாறு செய்யும்படி அதனை பழக்கினார்.

கணிதத்தை புரிந்துகொள்ளும் இந்த ஷிஹ் ட்சூ வகை நாய்க்குட்டி ஒரு நடக்கத்தெரிந்த குழந்தையை விட இயற்கையிலே புத்திசாலியாக இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இதன் புத்திசாலித்த னத்தை உணர்ந்த உரிமையாளர் தொலைக்காட்சியில் அது தோன்றவும் வழி செய்துள்ளார். வெறும் இரண்டு வயதே ஆகும் இந்த நாய்க்குட்டி 60 வித கட்டளைப்படி நடக்கவல்லது.

ஷிஹ் ட்சூவுக்கு விருப்பமில்லாத எதையும் செய்ய வைக்க மாட்டேன் என உரிமையாளர் தெரிவித்தார். இந்தியாவில் ஷிஹ் ட்சூக்கள் ஒன்றரை லட்சம் ரூபாய் வரை விற்கப்படுவது என்பது குறிப்பிடத்தக்கது.




### மரக்கறிக் கூட்டு



**தே.பொருட்கள்:**

உருளைக்கிழங்கு - 2 (நீளமாக நறுக்கியது), கரட் - 2 (நீளமாக நறுக்கியது), பீன்ஸ் - 100 கிராம், கொத்தவரைக்காய் - 100 கிராம், வெள்ளை பூசணி - 1 பத்தை, சிறிய வாழைக்காய் - 2, கத்தரிக்காய் - 1/4 கிலோ, புடலங்காய் - 1/4 கிலோ, சீரகம் - 2 டீஸ்பூன், பச்சை மிளகாய் - 6, தேங்காய் - 1, தயிர் 2 கப், கறிவேப்பிலை - 1 கொத்து, தேங்காய் எண்ணெய் - 1 டீஸ்பூன்.

**செய்முறை:-**

எல்லாக் காய்கறிகளையும் நீளமாக நறுக்கி, தேவையான உப்பு, மஞ்சள் தூள் போட்டு இரண்டு விசில்கள் வரும் வரை குக்கரில் வைக்கவும். தேங்காய், பச்சை மிளகாய், சீரகம் ஆகியவற்றை அரைத்து தயிருடன் கலந்து வைக்கவும். குக்கரில் வெந்த காய்கறிகளிலிருந்து தண்ணீர் வடித்தபின் அரைத்த விழுது தயிர் கலந்த கலவையை காய்கறிகளுடன் கலந்து கொதிக்கவிடவும். கீழே இறக்கி ஒரு டீஸ்பூன் தேங்காய் எண்ணெய் சேர்த்து இறக்கி, கறிவேப்பிலை போட்டுக் கலக்கவும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கணவனை இழந்தவர்களுக்கு உதவிட வடக்கில் தேசிய நிறுவனம் அமைக்கப்படும்

## பிரதமர் தெரிவிப்பு

கணவனை இழந்த பெண்களுக்கு உதவுவதற்காக வடக்கில் தேசிய நிறுவனம் அமைக்கப்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். வவுனியா வைரவபுளியங்குளம் சிறுவர் பூங்காவில் இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அங்கு கருத்து தெரிவித்த அவர்,

தமிழ், சிங்கள, முஸ்லிம்கள் ஒன்றிணைந்து இந்த வவுனியா பிரதேசத்தை கட்டியெழுப்ப வேண்டும். யுத்தத்தின் காரணமாக அநேகமான கணவனை இழந்தவர்கள் மற்றும் அங்கவீனமானவர்கள் இந்த பிரதேசத்தில் இருக்கிறார்கள். அவர்களுக்கு உதவி செய்யும் முகமாக ஒரு தேசிய நிறுவனத்தை வடக்கிலே அமைக்க இருக்கிறோம்.

காணாமல் போனோர் சம்பந்தமாகவும் நாங்கள் விசாரணை நடத்தி அதற்கான நடவடிக்கைகளை எடுப்போம். அத்துடன் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களுக்கு இந்த பிரதேசத்தில் 13 ஆயிரம் வீடுகள் தேவைப்படுகின்றன. 60 மாதத்தில் அவைகளை பெற்றுக் கொடுப்போம்.

இந்த பிரதேசத்தில் இருக்கின்ற விவசாயிகளுக்கும் மற்றும் பத்து வருடங்கள் தொடர்ச்சியாக குடியிருப்பவர்களுக்கும் காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கப்படும். சிறுநீரக இரத்த சுத்திகரிப்பு இயந்திரங்கள் 60 தற்போது இருக்கின்றன. அவைகள் ஆயிரம் அதிகரிக்கப்படும். போகஸ்வெல, வெலிஓயா, பறங்கியாறு போன்றவற்றிற்கு நீர்ப்பாசன திட்டங்களை மேற்கொண்டு அந்தப் பகுதிகள் அபிவிருத்தி செய்யப்படும். உங்களுடைய அறுவடைகளைசந்தைக்குகொண்டு செல்ல கிராமங்களில் பாதைகள் அமைத்து தரப்படும்.

உங்களுடைய அறுவடைக்கு சிறந்த விலையொன்றை பெற்றுத்தருவதற்கு அதிகாரசபை ஒன்றும் ஏற்படுத்தப்படும். வவுனியாவில் கல்வி மற்றும் பாடசாலைகளை முன்னேற்ற வேண்டியுள்ளது.

சிங்கள, தமிழ் பாடசாலைகள் உயர்தரங்களாக மாற்றப்படும்போது வவுனியாவில் கல்வி மத்திய நிலையம் அமைக்கப்படும். கல்வி விஞ்ஞான பீடம் மற்றும் தொழில் நுட்ப மத்திய நிலையம் ஒன்றும் வவுனியாவில் நிறுவப்படும்.

இவ்வாறாக இந்தப் பிரதேசம் அபிவிருத்தி செய்யப்படும். ஐந்து வருடங்களில் பத்து இலட்சம் தொழில் வாய்ப்புகளை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளோம். அப்பொழுது இளைஞர்களின் எதிர்காலம் செழிப்புறும். அதற்கு வெளிநாட்டு முதலீடுகள் உள்வாங்கப்படும்.

திருகோணமலை மட்டக்களப்பு, பொல நறுவை, அநுராதபுரம் வவுனியா, கிளி நொச்சி போன்ற இடங்களில் முதலீட்டு சபைகள் நிறுவப்படும். அத்துடன் யாழ்ப்பாணத்தில் தொழில் நுட்பவலயம் ஒன்று அமைக்கப்படும்.

அதேபோன்று மன்னாரில் சுற்றுலாத்துறை நிறுவப்படும் நான் இவை களை உங்களுக்கு செய்ய வேண்டுமாயின் நீங்கள் எனக்கு ஒரு உதவி செய்யவேண்டும். வன்னி மாவட்டத்தை எனக்கு வென்று தாருங்கள் என தெரிவித்தார். (2)


பாராளுமன்றத் தேர்தல்
வன்னி மாவட்டம்-2015
இலங்கை தமிழரசுக்கட்சி
(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)

வன்னி மகள்
திருமதி
சி.சாந்தி
7
BA(HONS) DIP IN PLANING MA SLPS-I
ஓய்வு நிலை
திட்டமிடல் பணிப்பாளர்
மக்களின் மறுமலர்ச்சிக்காக....
வாக்களிப்பது உங்கள் உரிமை கடமை
(041)



பாராளுமன்றத் தேர்தல் - 2015
யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்
சுயேட்சைக்குழு - இல 2
முதன்மை வேட்பாளர்
பொதுக்காரியதரிசி அகில இலங்கை
சிறுபான்மை தமிழர் மகா சபை
X 5

P.J.அன்ரனி J.P.U.M
சட்டத்தரணி
(055)


# கோண்டாவில் சிவபூமி பாடசாலை மாணவர்கள் அமெரிக்காவில் வரலாற்று சாதனை

SIVA POOMI

Special Olympics WORLD GAMES LOS ANGELES 2015

எங்கள் பாடசாலை மாணவர்கள் அமெரிக்க லோயஞ்சஸ் மாநிலத்தில் நடைபெற்ற சர்வதேச விசேட ஒலிம்பிக் போட்டியில் பங்குபற்றி பதக்கங்களைப் பெற்றுள்ளனர்.

செல்வன் ஜெயச்சந்திரன் மனோஜன் 100 மீற்றர் ஓட்டப்போட்டியில் வெள்ளிப் பதக்கம் செல்வன் அரசகுலசூரியன் மயூரன் 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் வெங்கலப்பதக்கம் எமது மாணவர்களின் வரலாற்றுச் சாதனை குறித்து மிகவும் ஆனந்தமடைகிறோம்.

பிள்ளைகள் பெற்ற வெற்றிக்கு நல்லருள் வழங்கிய இறைவனுக்கும் நல்லாசி வழங்கிய பெரியோர்களுக்கும் அயராது உழைத்த பாடசாலை அதிபர் திருமதி கலைவாணி குகதாசன் மற்றும் ஆசிரியர்களுக்கும் யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வி விஞ்ஞான அலகு விரிவுரையாளர்களாகிய திரு.ம.இளம்பிறையன், செல்வி. ராதை அருளம்பலம் ஆகியோருக்கும் எமது கொழும்பு இணைப்பாளர் திரு.மு.பாலச்சந்திரன் அவர்களுக்கும் தென்னிலங்கையில் நடைபெற்ற போட்டிகளுக்கு அழைத்துச்சென்ற திரு.க.நவநீதன் (நிர்வாக அலுவலர்) அவர்களுக்கும் எமது சிவபூமி பாடசாலை வளர்ச்சிக்கு உதவிக்கரங்களை நீட்டிய உள்நாட்டு வெளிநாட்டு நல்லுள்ளம் கொண்ட அன்பர்களுக்கும் இதயபூர்வமான நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.


திருமதி.கலைவாணி குகதாசன்
அதிபர் – சிவபூமி பாடசாலை


செல்வி ராதை அருளம்பலம்
(பயிற்சியாளர்)


பயிற்சியாளர் திரு.ம.இளம்பிறையனுடன் வீரர்கள்

**கலாநிதி ஆறு.திருமுருகன், தலைவர்,சிவபூமி அறக்கட்டளை.**
**நிர்வாக சபை, சிவபூமி அறக்கட்டளை.**

(1298)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சேவை நலன் பாராட்டும் மணிவிழாவும் - 04.08.2015

## சைவம் வளர்க்கும் அதிபர்

அருள்மிகு நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பிகையின் திருவருள் வசத்தால் நயினை உயர்திரு நல்லையா தம்பதிகளின் தவப்பயனால் மண்ணில் உதித்த திருவாளர் கலைநாதன் அவர்கள் கலைக்கும் தமிழுக்கும் சமயத்திற்கும் தொண்டாற்றி இளைப்பாறும் வேளையில் ஆசிரிய உலகம் கௌரவித்து விழா எடுப்பதை பாராட்டுகின்றோம். வாழ்த்துக்கூறி ஓய்வுக்காலங்களில் தமிழையும் சைவத்தையும் வளர்க்க சேவை புரிய நலமுடன் வாழ எல்லாம் வல்ல கிராஞ்சியம்பதி முருகப்பெருமான் துணைபுரிவாராக.

**ஸாகித்ய சிரோமணி நயினை குருமணி**
**சிவஸ்ரீ.ப.முத்துக்குமாரசாமி**
**சிவாச்சார்யார், நயினை ஆதீன பிரதம சிவாச்சார்யார், நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் திருக்கோவில்.**

## வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி

அகவை அறுபது கண்டு ஆசிரியராக, அதிபராக பணியாற்றி இன்று சேவை நிறைவு செய்து நிற்கும் **திரு.நல்லையா கலைநாதன்** அவர்களை வாழ்த்தி நிற்பதில் மகிழ்வடைகிறேன்.

கல்வியின் மதிப்பும் கற்றலின் நோக்கங்களும் எவையெனத் தெரியாத தெளிவற்ற சிந்தனையோடு அலைகின்ற வயதில் படிக்கவேண்டும் என்றதோர் ஆவலைத் தூண்டி எம்மைக் கல்வி ஒளிநோக்கி வழிநடத்துபவர்கள் ஆசிரியர்கள்.

இந்த வகையில் திரு.கலைநாதன் அவர்களும் மிகக் கஷ்டப் பிரதேசத்தில் அமைந்துள்ள ஒரு பாடசாலையின் பொறுப்பை ஏற்று அதைச் சிறப்பாக செய்து நின்றதைக் காண்கின்றோம்.

சிறந்த விஞ்ஞான ஆசிரியரான இவர் போக்குவரத்து, மின்சார வசதிகள் இல்லாத காலத்திலும் இப்பிரதேசத்தில் செய்த பணிகள் இன்றும் நினைவு கூரத்தக்கவை. ஓய்வுக்காலம் சிறக்கப் பிரார்த்திக்கின்றேன்.

**தி.ஜோன்குயின்ரஸ், வலயக் கல்விப் பணிப்பாளர்.**

## கிராமத்தின் கல்விப் பணிக்காக அரும்பாடுபட்ட அதிபர்

புங்குடுதீவு ஸ்ரீசித்திவிநாயகர் வித்தியாலய அதிபராக கடந்த 15 ஆண்டுகளாக பல்வேறு சிரமத்தின் மத்தியில் தனது மதிநுட்பத்தினாலும் விடா முயற்சியினாலும் நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலையினால் அழிவடைந்து கொண்டு சென்ற பாடசாலையினை மீள இயக்கி நூற்றாண்டு விழாவை சிறப்பாக நடத்திய அதிபர் திரு.ந.கலைநாதன் அவர்களைப் பாராட்டி வாழ்த்துகிறேன்.

இக்கிராமத்திற்கு தற்போதைய சூழலில் ஆசிரியராகவோ அதிபராகவோ வந்து கடமையாற்ற பின்னிற்கும் இக்காலத்தில் திரு.கலைநாதன் அவர்கள் 15 ஆண்டுகளுக்கு மேலாக இப்பாடசாலையைப் பரிபாலனம் செய்து கிராமத்திற்கு ஆற்றிய சேவையை வாழ்த்தி அவர் எதிர்காலத்தில் சீரும் சிறப்போடும் வாழ எல்லாம் வல்ல பெரியபுலத்தானை வேண்டி நிற்கின்றேன்.

**த.இரத்தினராசா, தலைவர்,**
**சித்திவிநாயகர் வித்தியாலய பழைய மாணவர் சங்கம், கனடா கிளை.**

## வேலணை கோட்டக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

இலங்கைத் தீவின் எழில் கொஞ்சும் தீவகம்
துலங்கிடும் மணிபல்லவமாம் நயினையம்பதி தனில்
இலங்கினன் இங்கிதமாய் நல்லையா கலைநாதன்
விளங்கினன் இருபதாம் அகவையில்
சுங்க இலாகாவிலே சீர்பெறும் சிறாப்பராய்
பங்கமின்றி சேவைதனை பன்னிருவருடம்
புரிந்து
பார்புகழ் பணியாம் பேர்பெறு தகைமையுடை
ஆசிரியராக ஆற்றலுடன் மலர்த்தனன்
கணிதம் விஞ்ஞானமும் சிந்தையுடன் கற்பித்த
விந்தைமிகு நல்லாசான் கலைநாதன்
புங்கையூர் கண்டபெரும் கலையகம்
சித்திவிநாயகர் மகா வித்தியாலயத்தில்
புகழ்மிக்க அதிபராய் முழுமனதுடன்
திகழ்ந்தனன்.
மதிப்புறு பணிதனில் மனிதரை மதித்திடும்
மாண்பது கொண்ட இனிய நல் இதயம்–
என்றுமே!
இயம்புவேன் இதன் சொந்தம்–நீவிரே!
பூண்டநற் பணி பூரிப்புடன் கண்டீர்
புன்னகை மலர அதிபர் தரம் ஒன்று கொண்டீர்
ஒப்புயர்வுடன் பணியாற்றி ஒய்யாரமாகவே
நூற்றாண்டு விழாவினை மெய்மலரக்
கொண்டாடினீர் கொண்ட நின் கடமையை
குறைவின்றி ஆற்றிய தொண்டனே!
நீவிர்! நயினைத் தாயவள் அருளால்
சீரும் பொலியத் திருவொடு சந்தானம் சிறக்க
வாழ்கவென வாழ்த்துகிறேன்

**பொ.சிவானந்தராஜா, கோட்டக்கல்விப் பணிப்பாளர், வேலணை.**



## திரு.நல்லையா கலைநாதன்

SP.Trd.(Sci &Maths), BA. Dip. in. Edu.SLPS-I

பிறப்பு: நயினாதீவு
திருமணம்:புங்குடுதீவு
ஆரம்பக் கல்வி: யா/நயினாதீவு கணேச கனிஷ்ட வித்தியாலயம்
இடைநிலைக்கல்வி: யா/ஸ்ரான்லிக் கல்லூரி
(தரம் 5 புலமைப்பரிசில் சித்தி)
பட்டப்படிப்பு: யாழ்.பல்கலைக்கழகம்

**சேவை விபரம்:**

| | |
|---|---|
| எழுவைதீவு கிராம சபை- T.O - | 1976-1977 |
| பதுளை கச்சேரி சிறாப்பர் சேவை - | 1978-1981 |
| கொழும்பு சுங்கத்திணைக்களம் சிறாப்பர் சேவை- | 1982-1987 |
| வவுனியா கச்சேரி சிறாப்பர் சேவை- | 1988-1988 |
| யா/புங்குடுதீவு இராஜராஜேஸ்வரி வித்தியாலயம் (ஆசிரியர்)- | 1988-1989 |
| யா/புங்குடுதீவு மகா வித்தியாலயம் (பகுதித் தலைவர்)- | 1990-2000 |
| யா/புங்குடுதீவு ஸ்ரீ சித்திவிநாயகர் ம.வி; (அதிபர்)- | 2000-2015 |

நயினைத்தாயவள் தணிந்தருள் மல்கும்
மணிபல்லவ மண்ணில் தோன்றிய மாண்பினன்
கலைஞான நிறைவுடையோன் நிலையான நல்மனிதன்
கலைநாதன் நாமமுடை நற்புகழோன்
குலையாத கல்விதனை குறைவின்றிக் கற்றுத்தேறி
ஆசிரியப் பணிதனையே ஆர்ப்பரிப்பின்றி ஆற்றி
ஆளுமைமிக்க நல் அதிபராய் மலர்ந்தனன்
அறிவொளி பரப்பிடும் திகழ்கலைக்கூடம்
புங்கையூர் மண்ணின் புகழ்மங்காப்புள்ளியாய்
சித்திவிநாயகர் மகா வித்தியாலயத்தில்
முத்தமிழ் முதல்வனாய் முகமலர்வுடன் முகிழ்த்தனன்
ஒப்பரிய சேவைதனை செப்பனுற ஆற்றியே
தார்ப்பரியம் மிக்க தயாள சிந்தை கொண்டோன்
தன்பணியில் உயர்வு கண்டே
அதிபர் தரம் ஒன்றில்
அமைதியுடன் பவனிவந்து– இன்று
வயது அறுபதினைத் தொட்டு
மணிவிழா காணுகின்றார்

## வாழ்த்துச்செய்தி

உலகின் எந்தவொரு நாட்டின் உயர்வுக்கும் ஒளிர்வுக்கும் பண்பாட்டு சிறப்புக்களுக்கும் அளவுகோலாய் அமைவது கல்வியே. கல்வியைக் கண் எனப் போற்றும் யாழ்.மண்ணில் அலை கடல்சூழ் நடுவினிலே அழகிய தீவகமாய் திகழும் பொற்பதியாம் புங்குடுதீவில் இறுப்பிட்டி என்னும் கிராமத்தில் கலை, கல்வி, விளையாட்டுத்துறையென பேரொளியை அள்ளிவழங்கும் கலைக்கூடமாக நிமிர்ந்து நிற்கும் புங்குடுதீவு ஸ்ரீசித்தி விநாயகர் மகா வித்தியாலயத்தின் ஊன்றுகோலாகவும் பெருமையை மேலேற்றும் ஏணியாகவும் திகழ்கின்றார் **திரு.நல்லையா கலைநாதன்** அவர்கள்.

புங்குடுதீவுப் பாடசாலைகளில் பஸ் போக்குவரத்து என்பது இல்லாத நிலையில் பல சவால்களை எதிர்கொண்டு மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் அவதானமாகவும் உறுதியாகவும் நின்று தன்னிலை மாறாத பொறுப்புமிக்க அதிபராக செயற்பட்டவருமாவார்.

கல்வி மட்டுமன்றி சமூகத்தின் வளர்ச்சியிலும் ஆலய நிர்வாகம், வட இலங்கை சர்வோதயம் மற்றும் பொது அமைப்புக்களிலும் தன்னை ஈடுபடுத்தி தன்னாலான பங்களிப்புக்களை வழங்கியவருமாவார். இன்று புங்குடுதீவு ஸ்ரீ சித்திவிநாயகர் மகா வித்தியாலயத்தின் பெயர் மிளிரும் வகையில் மணிவிழா கொண்டாடும் பண்புமிகு அதிபர் அவர்களை எல்லாம்வல்ல சிவயோக சுவாமிகளின் பாதம் பணிந்து வாழ்க வளமுடன் என வாழ்த்தி அவர் பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் வாழ வேண்டும் என வாழ்த்தி நிற்கின்றோம்.

**செல்வி.பொ.ஜமுனாதேவி, அறங்காவலர்,**
**வட இலங்கை சர்வோதயம், புங்குடுதீவு.**

## அமைதியான ஈடுபாட்டாளன்

புங்குடுதீவு ஸ்ரீ சித்திவிநாயகர் மகா வித்தியாலய அதிபர் உயர்திரு. **ந.கலைநாதன்** அவர்களின் மணிவிழா நிகழ்வு அவருக்கு கிடைக்கும் மகத்தான நிகழ்வு.

சொந்த மண்ணிலேயே அற்புத பணியாற்ற அவருக்கு இறைவன் நல்வாய்ப்பைக் கொடுத்திருந்தார். கல்விப் பணியைப் போன்று ஒரு அற்புதமான நிறைவான பணி எதுவும் இல்லை என்று சொல்லலாம். அதுவும் அடிப்படை வசதிகள் அற்ற சூழலில் இப்பணிகளை முன்னெடுத்துச் சென்ற அவர்தம் ஆர்வமும் அர்ப்பணிப்பும் பாராட்டுதற்குரியது. இவரது தோழமையும் ஆலோசனைகளும் உடனிருப்புக்களும் எனது பங்குப் பணியில் நிறைவையும் ஈடுபாட்டையும் அதிகரித்தன என்பதும் உண்மையே. இவரது அமைதியான ஆனால் ஆழமான ஈடுபாடு புங்கை மண்ணின் வளர்ச்சியில் முக்கியமானது.

**தோழமையில் அருட்பணி**
**லீயோ ஆம்ஸ்ரோங், பங்குத் தந்தை பாசையூர்.**

## அழிவு நிலையிலிருந்த பாடசாலையை மீளக்கட்டியெழுப்பிய அதிபர்

புங்குடுதீவு ஸ்ரீ சித்திவிநாயகர் வித்தியாலயம் நிறுவப்பட்டு நூற்றாண்டுகள் கடந்துவிட்டநிலையில் 11 அதிபர்கள் பாடசாலையை நிர்வாகம் செய்திருந்த போதிலும் யுத்த சூழ்நிலையினால் 1991-1999 ஆம் ஆண்டுகளுக்கிடையில் இயங்காமல் பாடசாலை வளங்கள் அழிவுற்றுக்காணப்பட்டிருந்த நிலையில் மீண்டும் பாடசாலையை இயங்கச் செய்வேன் என்ற மனத்தைரியத்துடன் 2000 ஆம் ஆண்டில் அதிபராகப் பொறுப்பேற்று கடந்த 15 வருடங்களாக தான் எடுத்த சபதத்தை நிறைவுசெய்து ஓய்வுபெறும் உயர்திரு ந.கலைநாதன் அவர்களைப் பாராட்டுவதுடன் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு. கலைநாதன் அவர்கள் தான் புகுந்த கிராமத்தினை வளர்த்தெடுக்கப் பல்வேறு அசௌகரியங்களின் மத்தியில் சிறப்பான முறையில் பாடசாலையினை நிர்வகித்து வளங்களைப் பெருக்கி மாணவர்களை கல்விச் சூழலுக்குட்படுத்தி வெற்றி கண்டவர். அவரது அயராத முயற்சியின் விளைவாக பாடசாலையின் நூற்றாண்டு விழாவினை 2014 ஆம் ஆண்டு உள்நாட்டு புலம்பெயர்ந்த பழைய மாணவர்களின் ஒத்துழைப்புடன் வெகுவிமர்சையாகக் கொண்டாடி பாடசாலைக்குப் பெருமை சேர்த்தவர்.

மணிவிழாக்காணும் அதிபர் பல்லாண்டுகள் சுகதேகியாக வாழ்ந்து தொடர்ந்தும் கிராமத்து மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கு பணியாற்றவேண்டும் என வாழ்த்துகின்றேன்.

பேராசிரியர் கா.குகபாலன்,
ஓய்வுநிலைப் புவியியல் பேராசிரியர்,
யாழ்.பல்கலைக்கழகம்.

## வாழ்த்துச்செய்தி

நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக மக்களோடு மக்களாக எமது பாடசாலையும் இடம்பெயர்ந்து பல்வேறு இடங்களில் இயங்கி வந்தது. இந்நிலையில் மீண்டும் 2000 ஆம் ஆண்டு சொந்த இடத்தில் இயங்குவதற்கு எமது அதிபர் **திரு.ந.கலைநாதன்** அவர்கள் ஆற்றிய பணி அளப்பரியது. இறுப்பிட்டி வாழ்மக்களின் கல்விக் கண்ணைத் திறந்து மாணவர் வளத்தோடு பௌதீக வளங்களையும் பெற்று இன்று பாடசாலை தலைநிமிர்ந்து நிற்பதற்கு வழிகோலிய பெருமை எம் அதிபரையே சாரும். எமது பாடசாலையின் நூற்றாண்டு விழா காலப் பகுதியில் அதிபராகக் கடமையாற்றி ஓய்வுபெறும் எமது அதிபரின் ஓய்வுக்காலம் சிறப்புற அமைய சித்திவிநாயகப் பெருமானை வேண்டி நிற்கின்றோம்.

**ஆசிரியர் சமூகம்,**
**யா/புங்குடுதீவு ஸ்ரீ சித்தி விநாயகர் ம.வி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் மாநகர சபை
# ஆதனவரி தொடர்பான அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாநகர சபை நிர்வாக எல்லைக்குட்பட்ட ஆதனங்களுக்குரிய ஆதனவரி நிலுவைகளை 31.12.2015 இற்கு முன்னர் செலுத்துமாறு அறிவுறுத்தப்படுகின்றீர்கள். வெற்றுக்காணிகள், சேதமடைந்த கட்டடங்கள், பராமரிப்பற்ற நிலையிலுள்ள சகல ஆதனங்களின் ஆதன வரியினை 31.12.2015 இற்கு முன்னர் செலுத்தத் தவறும் ஆதனங்களைச் சபை பொறுப்பேற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதனைச் சகல ஆதன உரிமையாளர்களும் கவனத்தில் எடுத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

ஆணையாளர்,
மாநகர சபை,
யாழ்ப்பாணம்.

மாநகர சபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

# மாணிக்ககங்கையில் நீராடச்சென்ற இளைஞன் முதலையிடம் சிக்கிப்பலி

(கொழும்பு)

மாணிக்ககங்கையில் நீராடச் சென்ற இளைஞன் ஒருவர் முதலையிடம் சிக்கி ஆற்றினுள் இழுத்துச் செல்லப்பட்டு கவலைக்கிடமான நிலையில் உயிரிழந்துள்ள சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

மொனராகலை மாவட்டத்தில் அமைந்துள்ள கரந்தெனிய பிரதேசத்தின் கதிர்காமம் கோவில் வளாகத்தின் பின்புறமாக அமைந்துள்ள யானை கட்டுமிடத்தினை அண்மித்துச் செல்லும் மாணிக்ககங்கை ஆற்றில் நேற்று முன்தினம் காலை 6.50 மணியளவில் நீராடச் சென்ற 20 வயது மதிக்கத்தக்க இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த இளைஞன் நேற்று முன்தினம் காலை கோயில் வழிபாடுகளில் ஈடுபடும் முகமாகவே குறித்த கங்கைக்கு நீராடச் சென்றுள்ள நிலையில் யாரும் எதிர்பார்க்காத வண்ணம் அங்கு முதலையொன்றிடம் சிக்குண்டு ஆற்றினுள் இழுத்துச் செல்லப்பட்டுள்ளார்.

தொடர்ந்து 3 மணித்தியால தேடுதலின் பின்னர் 2 கால்களும் இல்லாத நிலையில் சுழியோடிகளினால் குறித்த இளைஞன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். (இ-7)


## கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
கி.பா: 44 3/4
உயரம்: 5'23"
தகைமை/தொழில்: A/L/ சொந்த தொழில்
தொ.இ: B/4801

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 12 சூரிசெவ் 4 ல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: A/L/ லண்டன் PR
தொ.இ: B/4802

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி.பா: 19 செவ் 2 ல்
உயரம்: 5'10"
தகைமை/தொழில்: A/L லண்டன் NOT PR
தொ.இ: B/4803

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 44 செவ் 7 ல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்
தொ.இ: B/4804

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 15 3/4
உயரம்: 5'2"தகைமை/தொழில்: BA/ அரச தொழில்
தொ.இ: G/4807

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: 30
தகைமை/தொழில்: O/L/ அரச தொழில்
எதிர்பார்ப்பு: சைவபோசனம் அசைவமும் ஏற்கப்படும்
தொ.இ: G/4808

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 28
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: O/L
தொ.இ: G/4812

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: 94 செவ் 8 ல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: CIMA, NHDIT
தொ.இ: G/4813

## கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.



## முன்னர் களச் சமராடிய விடுதலைப் புலிகள் ஜனநாயகப் போராளிகளாக

யாழ். மாவட்ட நாடாளுமன்றத் தேர்தலில்
சுயேச்சைக் குழு 4 இல் சிலந்திச் சின்னத்தில்!!
களத்தில் நிற்கும் போராளிகளை ஆதரியுங்கள்....!


1
இராசையா தர்மகுலசிங்கம் (காமினி)


2
கணேசலிங்கம் சந்திரலிங்கம் (துளசி)


3
காளிக்குட்டி சுப்பிரமணியம் (சாள்ஸ்)


4
குமாரவேலு அகிலன் (இயல்)


5
தங்கராசா தேவதாசன் (கங்கை ஆத்மன்)


6
நடேசபிள்ளை வித்தியாதரன்


7
விநாயகசுந்தரம் மோகனசுந்தரம் (கங்கை அழகன்)


8
வீரன் சக்திவேல் (தனியரசன்)


9
சிவகுரு முருகதாஸ் (ரவிராஜ்)


10
சிவநாதன் நவீந்திரா (வேந்தன்)

ந.வித்தியாதரன் தலைமையில்
சுயேச்சைக் குழு 4
வடமராட்சி மக்கள்
(061)


## ராசி பலன்

04.08.2015
(ஆடி 19, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
சதுர்த்தி காலை 8.22 மணிவரை
பஞ்சமி பின்னிரவு 5.57 மணிவரை
உத்தரட்டாதி பின்னிரவு 3.58மணிவரை
இராகுகாலம் 3.04-4.34 மணிவரை
சுபநேரம் 10.34-12.04 மணிவரை
ஆடிச் செவ்வாய்
வளவன்

| | | | |
|---|---|---|---|
| சந் கேது | | | |
| | | | சூரி செவ் |
| | | | குரு சுக் புதன் |
| | | சனி | ராகு |

**மேடம்:** தேகாரோக்கியத்தில் கவனம் தேவை, வழக்கத்தைவிட கூடுதல் நேரம் பணிபுரியும் சூழ்நிலை ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**இடபம்:** உற்றார், உறவினர்களின் வருகையுண்டு, செல்வாக்கு மேலோங்கும் நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும்.

**மிதுனம்:** மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், அரசு வழியில் அனுகூலமுண்டு, உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், எடுத்த காரியங்கள் கைகூடும்.

**கடகம்:** சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும் நாள், மறதியால் விட்டுப் போன காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள்.

**சிம்மம்:** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், நட்பொன்று பகையாகலாம்.

**கன்னி:** குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறலாம், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், புதிய பொருட் சேர்க்கைக்கு அத்திபாரமிடுவீர்கள், போசன சுகமுண்டு.

**துலாம்:** சுபசெய்திகள் வந்து சேரும் நாள், உடல்நலம் சீராகும், செய் தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**விருச்சிகம்:** பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, சுபதகவல்கள் வந்து சேரும் நாள், புண்ணிய காரியங்களில் ஈடுபாடு காட்டுவீர்கள், பிள்ளைகளின் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**தனுசு:** செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது, பெற்றோர் மீது பிரியம் கூடும், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள்.

**மகரம்:** பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமைகள் வந்து சேரும் நாள், இளைய சகோதர வழியில் இனிய செய்தியொன்று வந்து சேரும், பயணங்களால் பலனுண்டு.

**கும்பம்:** கொள்கைப் பிடிப்பை கொஞ்சம் தளர்த்துக் கொள்வீர்கள், கோரிக்கைகள் நிறைவேறும் நாள், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**மீனம்:** திட்டமிட்ட காரியமொன்றில் திடீர் மாற்றங்களைச் செய்யும் எண்ணம் உருவாகும், குடும்பத்தினரிடையே முற்கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துக் கோவில் பராமரிப்பில் அரசாங்கம் தலையிடக்கூடாது

## அமைச்சர் சுவாமிநாதன் தெரிவிப்பு





(யாழ்ப்பாணம்)

**இந்துக்கோவில் பராமரிப்பு பணிகளில் அரசாங்கம் தலையிடக்கூடாது.அப்பணியை கோவில் தர்மகர்த்தாக்கள்,தர்மகர்த்தா சபைகள் தான் மேற்கொள்ள வேண்டும் என இந்து மதம்,மத அலுவல்கள் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.**

நேற்று முன்தினம் நல்லூர் ஸ்ரீ துர்க்காமணி மண்டபத்தில் நடைபெற்ற இந்து ஆராய்ச்சி மாநாட்டின் இறுதி நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது நாட்டில் மிகவும் பிரசித்தி பெற்ற பழம் பெரும் கோவில்கள் பல இருக்கின்றன.அவைகளை எல்லாம் வளர்த்து விடும் சந்தர்ப்பம் எம் கையில்தான் உள்ளது.அதற்கு முக்கியமாக சிரேஷ்ட இந்து குருமார்கள் எமக்கு வழிகாட்ட வேண்டும். அதற்கு ஏற்றாற்போல்இந்து மதத்தினர் வாழவேண்டும்.

எந்த மதத்தினராக இருந்தாலும் இறைவனுடைய சொத்தை நாம் பராமரிக்க வேண்டும்.அப்பராமரிப்பை உங்களால் முடியும் வரை செய்யுங்கள்.

இந்து மதத்தை வளர்க்க வேண்டும் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீரவேண்டும்.அதற்கு நாம் ஒவ் வொருவரும் பணியாற்றவேண்டும்.எம் ஒவ்வொருவருடைய கடமையும் ஆகும்.

தமிழன் என்ற அடிப்படையில் தமிழனுக்காக கடமைகள் செய்ய வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## பலியிடுவதைத் தடுக்க சட்டம் கொண்டுவருவேன்

(யாழ்ப்பாணம்)

இந்து மதத்திற்கு தொடர்ந்து சேவையாற்ற வேண்டிய சந்தர்ப்பம் எனக்கு கிடைத்தால் இந்துக் கோவில்களில் பலி கொடுக்க முடியாது என்பதை அடிப்படையாக வைத்து சட்டம் கொண்டு வருவேன் என இந்து மதம், மத அலுவல்கள் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம்நல்லூர்ஸ்ரீதுர்க்கா மணி மண்டபத்தில் நடைபெற்ற இந்து ஆராய்ச்சி மாநாட்டின் இறுதி நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்து கோயில்களில் ஆடு, மாடு பலி கொடுப்பது தவிர்க்கப்பட வேண்டும் என்பதை முற்று முழுதாக ஏற்றுக் கொள்கிறேன். இது தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பேசிய போது அவர் அதை ஏற்றுக் கொண்டுள்ளார் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## பனை மரக்குற்றிகளுடன் இருவர் பொலிஸாரால் கைது

(கரணவாய்)

சட்டவிரோதமாக பனை மரக் குற்றிகளைஉழவியந்திரத்தில்கொண்டு சென்ற இருவர் வல்வெட்டித்துறைப் பொலிஸாரினால் கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறையில் இருந்து இமையாணன் நோக்கிச் சென்ற உழவியந்திரத்தில் இவ்வாறு உழவியந்திரங்கள் கொண்டு செல்லப்பட்டன.

ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிஸார் உழவியந்திரதோடு பனை மரக்குற்றிகளை கைப்பற்றியதுடன் பனை மரக்குற்றிகளை ஏற்றிச் சென்ற இருவரையும் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவர் மீதும் வழக்குத் தாக்கல் மேற்கொள்ளப்பட்டதாக வல்வெட்டித்துறைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-5-60)

## ஐ.தே.க. வேட்பாளரின் அலுவலகம் மீது தாக்கு



ஐக்கிய தேசியக் கட்சியின் சுன்னாகம் தேர்தல் அலுவலகம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இனந்தெரியாதோரால் தாக்குதலுக்குள்ளாகியுள்ளது.மேற்படி கட்சியின் யாழ். மாவட்ட வேட்பாளர் மருத்துவர் இ.சிவசங்கரின் அலுவலகமே இவ்வாறு தாக்குதலுக்குள்ளாகியுள்ளது. அதனை படத்தில் காணலாம். (படம்:- உசாளின்)

## இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதியதில் இருவர் படுகாயத்துடன் வைத்தியசாலையில்

(கரணவாய்)

இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியதில் இருவர் காயமடைந்த நிலையில் மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்விபத்துச்சம்பவம் நெல்லியடிச் சந்தியில் கடந்த சனிக்கிழமை மாலை 6 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இதில் கரவெட்டியைச் சேர்ந்த செ.யோகேஸ்வரி (வயது-67), ப.விதுசன்(வயது-23) ஆகிய இருவருமே காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறையில் இருந்து நெல்லியடி நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிளும் கொடிகாமத்தில் இருந்து நெல்லியடி நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிள்களே இவ்வாறு விபத்துக்குள்ளாகின.

காயமடைந்த இருவரில் ப.விதுசன் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார் எனவும் தெரியவருகிறது. (இ-5-60)



## மஹோற்சவம் நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

ஊரெழு கிளானைப்பதி மனோன்மணி அம்பாள் ஆலய மஹோற்சவப் பெருவிழா நாளை புதன்கிழமை ஆரம்பமாகிதொடர்ந்து 12 தினங்கள் நடைபெறவுள்ளன.

இதற்கமைய 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு 7மணிக்கு சப்பறத் திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை காலை 8.45மணிக்கு தேர்த்திருவிழாவும் 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்குதீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளன. (இ-5-78)

## விவசாய திணைக்களத்தின் வயல் விழா நிகழ்வு இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வயல் விழா நிகழ்வு இன்று முற்பகல் 10 மணிக்கு திருநெல்வேலியில் அமைந்துள்ள மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இந்த நிகழ்வில் வெங்காய உண்மை விதை உற்பத்தி தொழில் நுட்பம் சேதன விவசாய தொழில்நுட்பம், காளான் உற்பத்தி தொழில்நுட்பம், வீதி முறை பயிர்ச்செய்கை தொழில் நுட்பம், வரட்சி முகாமைத்துவம், வீட்டுத்தோட்டம், செறிவான மாமரச் செய்கை போன்றவை காட்சிப்படுத்தப்படவுள்ளன.

விவசாயிகள், மாணவர்கள், இவற்றை பார்வையிடுவதன் மூலம் பயன்பெற முடியும்.

பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் கி.சிறிபாலசுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார் ; சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் ஆர்.நிசாந்தன், யாழ். விவசாய ஆராய்ச்சி நிலைய பொறுப்பதிகாரி ரி. கருணைநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-9)

## த.தே.கூவின் பிரசாரக் கூட்டம் இன்று யாழ். பண்டத்தரிப்பில்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரக் கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு யாழ்.பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் அமைந்துள்ள பாரத்தனை ஐயனார் ஆலய முன்றிலில் பண்டத்தரிப்பு பரிஷ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் வி.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளருமான மாவை. சேனாதிராசா, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் பிரபல சட்டத்தரணியுமானநா.ஸ்ரீகாந்தா, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிறேமச்சந்திரன், முன்னாள் பாராளுமன்றஉறுப்பினரும்மாகாண சபை உறுப்பினருமான த.சித்தார்த்தன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சி.சிறிதரன், எம்.ஏ. சுமந்திரன். ஈ.சரவணபவன், டிறிபேர்க் கல்லூரி அதிபர் கே. அருந்தவபாலன், வல்வெட்டித்துறை நகரசபை முன்னாள் தவிசாளர் ந.அனந்தராஜ்,வல்வெட்டித்துறை முன்னாள் நகரசபை உறுப்பினர் திருமதி மதினி நெல்சன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதல்நிலை தேசியப் பட்டியல் வேட்பாளர் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் ஆகியோர் பிரதம பேச்சாளர்களாக கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உதவிக் கம்பனிகள் பதிவாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் நிறைவேற்றுச் சேவைகள் வகுதியின் III ஆம் தரத்தில் உதவி கம்பனிகள் பதிவாளர் பதவிக்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் சட்டத்தரணியாக அல்லது கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தில் கம்பனி பரிசோதகராக இருத்தல் வேண்டும். சட்டத்தரணி எனின் கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தில் 5 வருட திருப்திகரமான சேவைக்காலத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும். பட்டம் பெற்ற கம்பனிகள் பரிசோதகர் எனின் 10 வருடத்திற்குக் குறையாத சேவைக் காலத்தினைக் கொண்ட அலுவலராக அனுபவம் இருத்தல் வேண்டும்

விண்ணப்பப்படிவங்கள், செயலாளர், கைத்தொழில் மற்றும் வணிக அலுவல்கள் அமைச்சு, காலி வீதி, கொழும்பு 3 என்ற முகவரிக்கு எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்குமாறு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

மேலதிக விபரங்களை கடந்த வெள்ளிக்கிழமை வெளியான வர்த்தமானி பத்திரிகையில் பார் வையிடலாம். (இ-3-7)

## உதவிக்கப்பல் பிரயாண உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரல்

துறைமுகங்கள், கப்பற்துறை அமைச்சின் வணிக கப்பற்துறை செயலகத்தினால் உதவிக் கப்பல் பிரயாண உத்தியோகத்தர் பதவிக்கு தகைமை பெற்ற இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றில் விஞ்ஞானம், வர்த்தகம், முகாமைத்துவம், பொருளியல் அல்லது சட்டம் பற்றிய பட்டமொன்றைப் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் 21 வயதிற்குக் குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் வணிகக் கப்பற்துறை பணிப்பாளர் அதிபதி, வணிகக் கப்பற்துறை செயலகம், இலக்கம் 43/89, பிறிஸ்ரல் கட்டடம், 1 ஆம் மாடி, யோர்க் வீதி, கொழும்பு 1 என்னும் முகவரிக்கு எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும். மேலதிக விபரங்களை நேற்று முன்தினம் வெளியான வர்த்தமானி பத்திரிகையில் பார்வையிடலாம். (3-7)


பாராளுமன்ற பொதுத் தேர்தல்–2015
யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம்




(056)
காசிப்பிள்ளை குலசேகரம்
B.A. Dip-in Ed, MEd
தமிழர் விடுதலைக் கூட்டணி
X 4
ஏழை மக்களின் வாழ்வு மேம்பாட்டுக்காய்...




பாராளுமன்றத் தேர்தல் – 2015
யாழ்.மாவட்டம்




(சி-338)
ந.மதிஅழகராசா (மதி)
வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினர்
X 5
தமிழர் விடுதலைக் கூட்டணி
வெறும் பேச்சுக்களை நம்புபவன் தமிழன் அல்ல...


# நாமலுக்கு அரசியல் தொடர்பில் எவ்வித விழிப்புணர்வுமில்லை

## அமைச்சர் சஜித் தெரிவிப்பு



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகன் நாமல் ராஜபக்ஷவுக்கு அரசியல் தொடர்பில் எவ்வித விழிப்புணர்வும் இல்லை என அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

நாமல் ராஜபக்ஷவுக்கு அரசியல் விழிப்புணர்வு இல்லாமையினால் அவருக்கு மேலதிக வகுப்புக்களை வழங்குவதற்கு நான் தயாராக இருக்கிறேன்.

பொது மக்களின் பாதுகாப்பு அரசியல்வாதிகளின் பொறுப்பு. நாங்கள் செய்யும் நல்ல வேலைகளினால் பொறாமையில் போலியான குற்றச்சாட்டுக்களை சுமத்தாமல் தங்கள் பாடங்களை மாத்திரம் கற்றுக்கொள்ளுமாறு அரசியல்வாதிகளிடம் கேட்டுக்கொள்கின்றேன்.

சாதாரண மக்களின் வியர்வையினை அறிந்துகொண்டு செயற்பட வேண்டும். மக்களின் தேவைகளை நாங்கள் அறிந்து அதனை தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)


பாராளுமன்றத் தேர்தல் - 2015
(யாழ்ப்பாண மாவட்டம்)
சி. கோகிலவாணி (சுகன்யா)



(இ-341)
மக்களின் மண்ணை மீட்க...
மக்களின் சுதந்திரத்தை உறுதிசெய்ய
மக்களின் வாழ்வுரிமையை வென்றெடுக்க - எமது
மக்களோடு என்றும் இணைந்திருப்போம்!
வெல்வோம்... வாழ்வோம்...
X 9
அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்
(தமிழ் தேசிய மக்கள் முன்னணி)





மக்களின் சேவையில்
மகேஸ்வரன் வழியில்



01. தமிழ் மக்களின் அன்றாட மற்றும் நீண்டகால பிரச்சினைகளை தீர்க்க
02. வேலைவாய்ப்பற்ற இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பினை வழங்க
03. யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த
04. மீள்குடியேற்றத்தை பூரணப்படுத்த
05. எவ்வித விசாரணைகளுமின்றி தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ள இளைஞர், யுவதிகளை மீட்டெடுக்க
06. பெண்கள், சிறுவர்கள் ஆகியோருக்கெதிரான வன்முறைகள் மற்றும் உரிமைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்க
07. ஏழைச் சிறார்களின் கல்வியினை மேம்படுத்த
08. பெண் தலைமைத்துவ குடும்பங்களின் பொருளாதாரத்தை மேம்படுத்த
09. பெண்களின் பிரதிநிதித்துவத்தை நாடாளுமன்றத்தில் அதிகரித்து பெண்களின் நலன்களை பாதுகாக்க, வடபகுதியில் இயங்காத தொழிற்சாலைகளை இயங்க வைக்க
10. நல்லாட்சி அரசின் 100 நாள் வேலைத் திட்டத்தின் கீழ் வடக்கு போக்குவரத்து சபைக்கு நூற்றுக்கு மேற்பட்ட புதிய பேருந்து வண்டிகளை வழங்கி சாரதிகள், நடத்துநர்கள் என சுமார் இருநூறு பேருக்கு வேலைவாய்ப்பினை வழங்கி அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தியமைக்காக "மக்கள் சேவையே மகேஸ்வரன் சேவை" அவரது வழியில் சேவைகளை தொடர ஆற்றல் மிகு கரத்தின் மூலம் அரசியல் பலம் பெற திருமதி **விஜயகலா மகேஸ்வரனை** ஆதரித்து அவரது கரங்களை பலப்படுத்துவோம்



(056)

ஐக்கிய தேசியக் கட்சி



X 3
தேசிய ஊழியர் சங்கம், இ.போ.ச.வடக்கு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

1205

## பழசை மறக்காதீர்கள்!

பூவரசு மரத்தில் ஏராளமான குருவிகள் கூட்டமாக வாழ்ந்து வந்தன. அந்தப் பூவரசு மரத்தில் காகம் ஒன்றும் வசித்து வந்தது.

ஒருநாள் அந்த காகமானது குருவிகளை பார்த்து, "குருவிகளே! நீங்கள் எல்லாரும் எந்த நேரமும் இரைத் தேடிவிட்டு இந்த மரத்தில் அமர்ந்தே பொழுதைக் கழிக்கிறீர்களே! நானும் உங்களைப் போன்று இரைத் தேடிக் கொண்டு எங்கெலலாமோ சுற்றி வருகிறேன். என்னோடு நீங்களும் வந்தால் நான் உங்களுக்கு இயற்கை காட்சிகளை எல்லாம் காட்டுவேன். எனவே, நீங்கள் தாராளமாக என்னோடு வாருங்கள்," என்றது காகம்.

குருவிகள் எல்லாம் ஒன்றை ஒன்று பார்த்துக் கொண்டன. பின்னர் அவைகள் எல்லாம் காகத்தை நோக்கின.

"காகமே! நாங்கள் எல்லாரும் கலந்து பேசி உன்னோடு வரலாமா அல்லது வேண்டாமா என்பதை தெரிவிக்கிறோம்," என்றன குருவிகள்.


"சரி குருவிகளே! நீங்கள் உங்கள் விருப்பப்படியே செய்யுங்கள்! நான் கிளம்புகிறேன். நாம் மாலையில் சந்திக்கலாம்!" என்று கூறியபடியே பறந்து சென்றது காகம்.

காகம் அந்த பூவரசு மரத்தை விட்டுப் பறந்து சென்றதும், குருவிகள் எல்லாம் தங்களுக்குள் உரையாடலைத் தொடர்ந்தன.

ஒரு குருவியானது மற்றொரு குருவியை பார்த்து, "நண்பனே! அந்தக் காகமானது நம்மை அழைக்கிறதே! நாம் அதன் அழைப்புக்கு இணங்கி அதனோடு இயற்கைக் காட்சிகளை பார்க்கச் செல்வதில் எந்தத் தவறும் இல்லையே...!" என்றது.

"நண்பர்களே! நாம் எத்தனை நாட்கள்தான் இரைத் தேடிவிட்டு இந்த பூவரசு மரத்திலேயே அடைந்து கிடைப்பது! எப்படியாவது நாம் இந்தக் காகத்தோடு செல்வோம். அவ்வாறு சென்றால் நம் மனமானது மகிழ்ச்சியடையும் என்று எனக்குத் தோன்றுகிறது," என்றது வேறொரு குருவி.

"எனக்கும், இயற்கைக் காட்சிகளை எல்லாம் காண வேண்டுமென்று ஆவலாகயிருக்கிறது. எனவே, நாம் எல்லாரும் கூடடமாக காகத்தோடு செல்வதால் நமக்கு எந்த ஆபத்துமே ஏற்ப



பது என்று தோன்றுகிறது," என்றது மற்றொரு குருவி.

குருவிகள் எல்லாம் இவ்வாறு கலந்து பேசி, முடிவெடுத்து காகத்திடம் செல்வதற்கு தயாராகின.

மாலையில் பூவரசு மரத்தை வந்தடைந்தது காகம்.

"குருவி நண்பர்களே! நீங்கள் மட்டும் என்னோடு இன்று வந்திருந்தால் விதவிதமான இயற்கை காட்சிகளை எல்லாம் பார்த்து ரசித்திருக்கலாம். அப்படியொரு இயற்கை காட்சியினை நீங்கள் உங்கள் வாழ்நாளில் எங்குமே பார்த் திருக்க முடியாது," என்றது.

"காகமே! நாங்கள் எல் லாரும் கலந்துபேசி இன்று ஓர் முடிவுக்கு வந்து விட்டோம்! அது என்னவென்றால், நாளை நாங்கள் எல்லாரும் உன்னோடு வருகிறோம். நாம் எல்லாருமாக சேர்ந்து இயற்கைக் காட்சிகளைக் கண்டு ரசிக்கலாம்," என்றன குருவிகள்.

"அப்பாடா! இப்போதுதான் எனக்கு மகிழ்ச்சியாகயிருக்கிறது. நீங்கள் இப்படியொரு வார்த்தையினை சொல்ல மாட்டீர்களா என்று எதிர்பாரத்துக் கொண்டிருந்தேன். நாளை நான் உங்களை பல்வேறு இடங்களுக்கு அழைத்துச் செல்கிறேன். அந்த இடங்களை எல்லாம் நீங்கள் பார்த்தால் பரவசமடைவீர்கள்," என் றது காகம். மறுநாள் பொழுது விடிந்ததும், குருவிகளை அழைத் துக் கொண்டு அந்தப் பூவரசு மரத்தை விட்டுப் பறந்து சென்றது காகம்.

காகமும், குருவிகளும் ஓர் கடற்கரையை வந்தடைந்தன. அந்தக் கடற்கரையினைக் கண்டதும் குருவிகள் எல்லாம் மிகவும் மகிழ்ச்சியடைந்தன. "காகமே! காகமே! இத்தனை அழகான இயற்கை காட்சிகளை எல்லாம் நாங்கள் இத்தனை நாட்களும் பார்க்காமல் இருந்து விட்டோமே என்பதற்காக வெட்கப்படுகிறோம்!" என்றன குருவிகள்.

"நண்பர்களே நீங்கள் இதற்கே வெட்கப்பட்டால் எப்படி? இன்னும் ஏராளமான காட்சிகளைப் பார்த்திட வேண்டுமே!" என்றது காகம்.

அதன் பின்னர் அந்த காகமானது குருவிகளை அழைத்துக் கொண்டு கடற்கரையை விட்டுப் பறந்தது.

சிறிது நேரத்தில் காகமும், குருவிகளும் மலையடிவாரத்தை வந்தடைந்தன.

அங்கிருக்கும் உயர்ந்த மலையினைப் பார்த்த காகமானது, குருவிகளையும் உயரத்தில் பார்க்கச் சொன்னது.

அந்த மலை உச்சியைப் பார்த்த குருவிகளோ, "ஆ"வென வாயைப் பிளந்தன. (தொடரும்)

## 04.08.2015 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 70 - உரோமர்களால் ஜெருசலேம் நகரில் இரண்டாவது கோயில் அழிக்கப்பட்டது.
- 1578 - மொரோக்கர்கள் போர்த்துக்கீசரை போரில் வென்றனர். போர்த்துக்கல் மன்னன் செபஸ்டியான் போரில் கொல்லப்பட்டான்.
- 1693 - சம்பைன் வைன் கண்டுபிடிக்கப்பட்டது.
- 1704 - ஆங்கில, டச்சுக் கூட்டுப்படைகளினால் கிப்ராலட்டர் கைப்பற்றப்பட்டது.
- 1789 - பிரான்சில் நிலமானிய முறையை ஒழிக்க அந்நாட்டு சட்டசபை உறுப்பினர்கள் உறுதி மொழி எடுத்தனர்.
- 1824 - ஒட்டோமான் பேரரசுக்கும் கிரேக்கர்களுக்கும் இடையில் கொஸ் என்ற இடத்தில் போர் இடம்பெற்றது.
- 1860 - இலங்கையின் கவர்னராக சேர் சார்ல்ஸ் மக்கார்த்தி நியமிக்கப்பட்டார்.
- 1902 - தேம்ஸ் ஆற்றின் கீழாக கிரீனிச் நடை சுரங்கம் அமைக்கப்பட்டது.
- 1906 - சிட்னியில் மத்திய தொடருந்து நிலையம் திறக்கப்பட்டது.
- 1914 - முதலாம் உலகப் போர்: ஜேர்மன் பெல்ஜியத்தின் மீது படையெடுத்தது. இதன் காரணமாக ஐக்கிய இராச்சியம் ஜேர்மனியின் மீது போரை அறிவித்து உலகப் போரில் முதன் முறையாகக் குதித்தது.
- 1916 - முதலாம் உலகப் போர்: ஜேர்மனியுடன் லைபீரியா போர் தொடுத்தது.
- 1936 - கிரேக்கத் தளபதி இயோனிஸ் மெட்டாக்சஸ் நாட்டின் நாடாளுமன்றத்தைக் கலைத்து தன்னை நாட்டின் தலைவனாக அறிவித்தான்.
- 1984 - அப்பர் வோல்ட்டா ஆபிரிக்கக் குடியரசு புர்கினா பாசோ எனப் பெயர் மாற்றம் பெற்றது.
- 1987 - விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் யாழ்ப்பாணம் சுதுமலையில் முதன் முதலில் மக்கள் முன் தோன்றி உரையாற்றினார்.
- 1991 - "ஓசியானோஸ்" என்ற கிரேக்க கப்பல் தென்னாபிரிக்காவில் மூழ்கியது. அனைத்து 571 பயணிகளும் காப்பாற்றப்பட்டனர்.
- 2006 - நியூசிலாந்தின் ஆளுநராக ஆனந்த் சத்தியானந்த் அறிவிக்கப்பட்டார். இவர் ஆகஸ்ட் 23 இல் பதவியேற்றார்.
- 2006 - ஈழத்துக் கலைஞர் பொன். கணேசமூர்த்தி யாழ்ப்பாணத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார்.
- 2006 - வறுமைக்கு எதிரான அமைப்பு (Action Fiam) என்ற அரச சார்பற்ற அமைப்பின் 15 பணியாளர்கள் மூதூரில் இலங்கை இராணுவம் எனச் சந்தேகிக்கப்படுபவர்களால் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டனர்.
- 2007 - நாசாவின் பீனிக்ஸ் விண்கலம் செவ்வாய்க் கோளை நோக்கி ஏவப்பட்டது.


### பிறப்புக்கள்

- 1908 - ரீ. உருத்திரா, முன்னாள் கொழும்பு நகரத் தந்தை (இ. 1960)
- 1929 - கிஷோர் குமார், இந்தியாப் பாடகர், நடிகர் (இ. 1987)
- 1961 - பராக் ஒபாமா, அமெரிக்க அரசியல்வாதி

### இறப்புகள்

- 2006 - பொன். கணேசமூர்த்தி, ஈழத்துக் கலைஞர்
- 2008 - ச. அகத்தியலிங்கம், தமிழக மொழியியல் அறிஞர் (பி. 1929)

### பராக் ஒபாமா



பராக் உசேன் ஒபாமா ஆகஸ்ட், 4, 1961 ஆம் ஆண்டு பிறந்தார். இவர் ஐக்கிய அமெரிக்காவின் தற்போதைய குடியரசுத் தலைவரா வார். 2008 குடியரசுத் தலைவர் தேர்தலில் மக்களாட்சிக் கட்சி வேட் பாளராகப் போட்டியியிட்டு வெற்றி பெற்றார், நவம்பர் 6, 2012 அன்று நடந்த ஜனாதிபதித் தேர்தலில் குடியரசு கட்சி சார்பாக நின்ற மிட் ராம்னியை தோற்கடித்து மீண்டும் ஜனாதிபதி ஆனார்.

ஜனாதிபதியாவதற்கு முன் இவர அமெரிக்க நாடாளுமன்ற மேல வையில் (செனட்) இலினொய் மாநிலத்தின் சார்பில் இளைய உறுப்பினராகப் பணியாற்றினார். அமெரிக்க வரலாற்றில் ஆபிரிக்க அமெரிக்க இனத்தை சேர்ந்த முதலாவது குடியரசுத் தலைவர் என்ற பெருமையும், மற்றும் செனட் அவையின் உறுப்பினரான ஐந்தாவது ஆப்பிரிக்க-அமெரிக்க இனத்தவர் என்ற பெருமையும் இவருக்கு உண்டு.

கொலம்பியா பல்கலைக்கழகத்திலிருந்தும் ஹார்வர்ட் சட்டக் கல்லூரியிலிருந்தும் பட்டங்களை பெற்ற ஒபாமா அரசியல் உலகத்தை சேர்வதற்கு முன்பு சிக்காகோவின் தெற்கு பகுதியில் சமுதாய ஒருங்கிணைப்பாளராகவும் பொதுச் சட்ட வழக்கறிஞராகவும் பணியாற்றினார்.

1989 இல் ஒபாமா வேலை பார்த்துக்கொண்டிருந்த சட்ட நிறுவனத்தில் முதலாக தனது மனைவி மிசெல் ராபின்சனை முதலாக சந்தித்து அக்டோபர் 3, 1992 திருமணம் செய்தனர். அவர்களின் முதல் பெண் குழந்தை மலியா 1998 இல் பிறந்தார். இரண்டாவது பெண் குழந்தை சாஷா 2001 இல் பிறந்தார். ஒபாமாவின் விரிவுபட்ட குடும்பத்தில் கென்யர்கள், இந்தோனேசியர்கள், வெள்ளை இன அமெரிக்கர்கள், மற்றும் சீனர்கள் உள்ளனர். தனது தாயாரின் முன்னோர்கள் அமெரிக்க பழங்குடி மக்கள் இருக்கலாம் என்று கூறியுள்ளார்.

ஒபாமா கிறிஸ்தவ மதத்தை சேர்ந்தவர். தனது தாயார் கிறிஸ்தவராக வளந்தார், தந்தையார் முஸ்லிமாக வளந்தார், ஆனால் திருமணம் செய்வதற்கு முன்பே நாத்திகர்களாக நம்பிக்கை மாற்றியுள்ளனர். இருபது வயதுகளில் இருக்கும் பொழுது ஆபிரிக்க அமெரிக்க தேவாலயங்களுடன் சமூக சேவை செய்து ஆபிரிக்க அமெரிக்க கிறிஸ்தவ மரபின் பெறுமதியை கண்டுப்பிடித்தார் என்று கூறுகிறார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜப்பான் புகழ் தோசிபா நிறுவனத்தின் மோசடிகள்!



2008 இல் முதலாளித்துவ சூதாட்டத்தால் விளைந்த உலகப்பெருமந்தத்தில் சந்தைகளும், சிறுமுதலீட்டாளர்களும், பலநாட்டின் அரசுகளும், லேமன் பிரதர்ஸ் போன்ற நிதி நிறுவனங்களும் கவிழ்ந்த பொழுது ஜப்பானைச் சேர்ந்த தோசிபா நிறுவனம் மட்டும் வாடாமல்லியாக காட்சிளித்தது!

காரணம் என்ன? தோசிபா கம்பெனியின் இலாபம் அபரிதமாக ஊதிப்பெருக்கியும், கம்பெனியின் நட்டக்கணக்கு இத்துணை ஆண்டுகளாக போலியாகவும் காட்டப்பட்டு வந்துள்ளது.

மிகச் சமீபத்தில் தோசிபாவில் நடைபெற்ற விசாரணைக் கமிட்டி, கிட்டத்தட்ட 120 கோடி அமெரிக்க டொலர் அளவிற்கு இலாபக் கணக்கு மோசடியாக உயர்த்தப்பட்டுள்ளதைக் கண்டறிந்துள்ளது.

தோசிபாவின் 140 வருட வரலாற்றில் கறைபடிந்துவிட்டதாக முதலாளித்துவ கண்ணியவான்கள் கதறுகிறார்கள்!

ஜப்பானின் நிதியமைச்சர் டாரோ அசோ, "தோசிபாவின் ஊழல் மிகவும் துரதிர்ஷ்ட வசமானது" என பேட்டியளிக்கிறார்.

முதலீட்டாளர்களின் நம்பிக்கையைக் காப்பாற்ற வேண்டுமானால் "கார்பரேட் கவர்னன்ஸ்" தீவிரமாக செயற்படுத்தப்பட வண்டுமென முதலாளித்துவ வெஞ்சுருட்டிகள் வெஞ்சினம் கொள்கிறார்கள்!

பங்குச் சந்தையில் தோசிபா போன்ற ஏக போக முதலாளி, ஏன் இலாபத்தைக் கூட்டிக் காட்ட வேண்டும்? இந்தியாவில் சத்யம் ராஜு இதே வேலையைத்தான் செய்தார் என்பதை நினைவில் கொள்க.

பங்குச் சந்தை என்பது முழுக்கவும் சூதாட்டம்தான். முதலாளிகள் ஒருதரப்பினர் இன்னொருவரிடமிருந்து மூலதனத்தை கொள்ளையிடுவதற்கான களம்தான். அதே போன்று பங்குகளை வாங்கி பணக்காரர்களாக மாறலாம் என்று நடுத்தர வர்க்கத்தை கொள்ளையிடும் இடமும்கூட.

உலகப்பெருமந்தத்தால் பங்குச் சந்தை வீழ்ச்சியடைந்த உலகவரலாற்றின் எந்தக் காலத்திலும் உலகப் பெருமுதலாளிகளின் மூலதனத்திற்கு எந்தபங்கமும் வந்ததில்லை. பொருளியலாளர் தோமஸ் பிக்கெட்டி, கடந்த 200 வருட வரலாற்றில் பணக்காரர்கள் மிகப் பெரும் பணக்காரர்களாகவும் ஏழைகள் மேலும் பஞ்சப்பராரிகளாகவும் இருக்கும்படி ஏற்றத் தாழ்வு பெருகிவருவதை அம்பலப்படுத்தியிருக்கிறார். 140 வருட வரலாற்றுப் பின்னணி கொண்ட தோசிபா மட்டும் தனது மூலதனத்தை எளிதில் விட்டுக்கொடுக்குமா என்ன?

இருக்கும் வாய்ப்புகளே இரண்டு இரண்டுதான். ஒன்று கூலியைக் குறைத்து தொழிலாளிகளை கசக்கிப் பிழிவது. இரண்டு- இலாபத்தை கைப்பற்றுவதில் பிற முதலாளிகளுடன் போட்டியிடுவது. இரண்டு பிரிவிலும் பல வாய்ப்புகளை முதலாளித்துவம் மேற்கொண்டு வருகிறது.

இலாபத்தை ஊதிப்பெருக்கிக் காட்டுகிற இந்த முதலாளித்துவ வித்தை பொருளியல் வரையறைப்படி முதலாளித்துவ கருப்புச் சந்தையின் ஒரு வகைதான். அறிவிக்கப் படாத பொருளாதாரம் அல்லது பதிவுசெய்யப் படாத பொருளாதாரம் என்பதற்கு நூலிழை வேறுபாடுதான் உண்டு. சான்றாக விபச்சாரம், ஆயுத பேரம் போன்றவற்றால் கிடைக்கும் பொருளாதாரத்தை அறிவிக்கப்படாத பொருளாதாரம் என அழைப்பர். சான்றாக டாடா, அம்பானி போன்றவர்கள் கஞ்சா விற்றுத்தான் பெரிய முதலாளிகளாக வந்தார்கள். உலகின் மிகப்பெரும் வங்கிகளுள் ஒன்றான HSBC யும் கஞ்சா விற்று மூலதனம் சேர்த்த வங்கிதான். இத்தகைய பண்டங்கள் வாங்கி விற்பது சட்டப்படி தடை செய்யப்பட்டுள்ளது. பதிவு செய்யப் படாத பொருளாதாரத்தைப் பொறுத்தவரை, வாங்கி விற்கும் பண்டம் சட்டப்படி அனுமதிக்கப்பட்ட ஒன்று. ஆனால் உற்பத்திச் செலவுகளில், இலாபங்களில், கூலியில் கணக்கு மோசடி செய்வதன் மூலம் பெரும் கொள்ளையடிக்க முடியும்.

பணவாட்டம் அதிகம் உள்ள காலங்களில் அதாவது மக்களிடம் பணம் புழங்காமல் நசிந்துபோயிருக்கும் பொழுது சந்தைகள் தோற்றுப்போயிருக்கும் பொழுது தோசிபாவின் குறியீட்டு எண் மட்டும் எல்யிடி டிஸ்பிளேயில் 2008-லிருந்து தற்பொழுது இந்த மோசடி கண்டுபிடிக்கப்பட்டது வரைக்கும் எகிறிக் கொண்டிருந்தது!

தோசிபா போன்ற திறமையான பெரு நிறுவனங்கள் இப்படி மோசடி செய்வதன் மூலம் முதலாளிகளின் நிலைமை என்னவாக இருந்திருக்கும் என்று யோசிக்க முடிகிறதா? அதாவது நியாயமாக பொருள் சம்பாதித்து முதலாளியாகி வெற்றி பெற வேண்டும் என நினைக்கிற முனைவர்களைக் கொல்வது வேறுயாரும் அல்ல முதலாளித்துவம்தான்.

தோசிபாவில் சோதனை மேற்கொண்ட விசாரணைக் கமிட்டியின்படியே தைவானின் உதிரி கம்யூட்டர் பாகம் வாங்கும் சிறு முதலீட்டாளர்களுக்கு வழக்கத்திற்கு மாறாக அதிக விலையில் பொருட்களை விற்றிருக்கின்றது தோசிபா நிர்வாகம்.

"முதலாளித்துவம் பல முதலாளிகளைக் கொல்கிறது" என்று மார்க்சிய ஆசான்கள் கூறுவதற்கு மற்றுமொரு இரத்த சாட்சியாக நிற்கிறது கால்குலேட்டரிலிருந்து கம்யூட்டர் ஈறாக அணு உலை வரை விற்பனை செய்யும் பன்னாட்டு கம்பெனி தோசிபா.

செயற்கையாக ஊதிப்பெருக்கிக் காட்டிய இலாபத்தை எப்படி சரிக்கட்டுவது? அதையும் தோசிபா இயக்குநர்களே சொல்லியிருக்கிறார்கள்.

அடுத்த செயற்பாட்டு காலத்தில் சாத்தியமேயில்லாத உற்பத்தி இலக்குகளை தொழிலாளிகளுக்கு நிர்ணயிப்பது, சம்பளத்தைக் குறைப்பது, வேலை நேரத்தை அதிகரிப்பது. இதன் மூலமாக மோசடி லாபத்தை நடைமுறையில் ஈட்டி விட முடியும் என்று நினைத்த முதலாளிகள் முதலாளித்துவத்தின் துலக்கமான முரண்பாட்டு நெருக்கடியில் கொண்டுவந்துவிட்டிருக்கிறார்கள்.

அதாவது தோசிபாவின் இந்த ஊழல் விவகாரம் தன்னை எப்படி பாதிக்கும் என்று கருதுபவர்கள் எங்கோ முகம் தெரியாத ஒரு தொழிலாளி முதலாளித்துவ ஊழலை வெள்ளையாக மாற்றுவதற்காக தன் பணத்தை பிய்த்துப்போட்டிருக்கிறார் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.


தோசிபா போன்ற பன்னாட்டு கம்பெனிகள் தாங்கள் அடைய வேண்டிய ஊதிப் பெருக்கப்பட்ட இலாபங்களுக்காக குறைந்த கூலிக்கு ஆட்கள் கிடைக்கும் நாடுகளை நோக்கி இரத்த வெறியுடன் படையெடுக்கின்றன.

வேலையிழப்பால் உள்நாட்டில் தொழிலாளிகள் செத்தால் ஜப்பானியர்கள் ரோசம் மிக்கவர்கள் என்று புகழ்பாடுகின்றனர் முதலாளித்துவ கூஜாக்கள்.

நாடுகளின் அரசுகள் வழங்கும் மானியங்கள் இவர்களின் அட்டூழியங்களை சரிகட்டுவதற்காக வெட்டப்பட்டிருக்கின்றன.

(தொடரும்)

-இணையம்-





# கருவாச்சி காவியம்

## வைரமுத்து-202

...என்னியப் பாக்காத! என்னியப் பாக்காத. கையெடுத்து மூஞ்சியிலடிச்சுக் கத்திக் குமிக்கிறான்.

அவன் மூஞ்சியில அடிச்சு அழுகிறபோது கண்டுபுட்டா அவன் பத்து வெரல்ல ஒத்தவெரலும் முழுசா இல்ல. அதுல ஒண்ணு ரெண்டு அழுகி ஒழுகுது. அவன் சின்ன மூக்கு இன்னும் சப்பட்டையாகி மூஞ்சியிலேயே தன்னத் தேய்ச்சுக்கிருச்சு. கட்டான மீச அங்கங்க சொட்ட விழுந்திருக்கு. மடங்கி மடங்கிக் காதுக பாதியா சூம்பிக் கெடக்குதுக. மண்டையில பாதி முடியக் காணோம்; மிச்ச முடியும் செம்பட்டைபூத்து நிக்குது.

கண்ணுக்குக் கீழ கறுப்புக் காயம் மாதிரி தழும்புக; தழும்பு மாதிரி காயங்க. திரேகம் கொறஞ்சு, தோலு சுருங்கி நாந்தானன் கட்டையன்னு சொன்னாலும் நம்ப முடியாதபடிக்கு ஆளு அடையாளம் மாறி, தொழு நோய் வந்து கூனிக்குறுகிக் கெடக்கானய்யா கட்டையன். பேயடிச்ச மாதிரி புத்தி மாறி உக்காந்த கருவாச் சிக்குப் பேச்சும் வரல; அழுகையும் வரல.



கனாக் கண்ட பிள்ள கையமட்டும் தூக்குற மாதிரி வலதுகைய நீட்டித் தொடப்போனா கட்டையன.

தொடாதடியாத்தா.. என்னியத் தொடாத. தொட்டா நான் செத்தே போயிருவேன்; தொடாத.

தொட்டுப்புட்டா... அவன் தலையில கவுந்தடிச்சுக் கூனிக் குறுகிப் படுத்துக்கிட்டான்; அவ தலையத் தடவி விட்டா.

உதுந்து போனது போக ஒட்டியிருக்கிற முடியக் கோதிவிட்டா. காச்சுப்போன தன் வெரலால காயங்கள நீவிவிட்டா.

உருத்துள்ள விருந்தாளி மாதிரி சொல்லாம வாரதுதான கண்ணீரு...? வந்திருச்சு.

அழுகிப்போன கையெடுத்துக் கும்புட்டுக்கிட்டே கட்டையன் பொலம்புறான்:

ரத்தத்துல திமிர் இருக்கிற வரைக்கும்தானடியாத்தா ஆட்டமும் பாட்டமும் அதிகாரமும். ஒடம்பு விழுந்தா மனசு விழுந்துருது; மனசு விழுந்தாத் திமிர் விழுந்திருது. ஒனக்கு நான் பண்ணுன பாவத்துக்கு இந்த வியாதி வரலடியாத்தா. எனக்கு நானே பண்ணுன பாவத்துக்குத் தான் இந்த வியாதி வந்திருக்கு. திமிரா இருக்கறப்ப மனுசன் தன்னப்பத்தியே நெனச்சுத் தலப்பெரட்டுப் பண்றான். மத்தவுகளயும் நெனச்சுப் பார்றா மகனேன்னுதான் காலம் அவன் இழுத்துக் கட்டில்ல போட்டுருது. கைகால் விழுந்த காலத்துல மனுசனுக்கு உண்டாகிற நல்ல புத்தி, கைகால் வெளங்குற காலத்துலயே வந்துட்டா யார் குடிக்கிற கஞ்சியிலயும் மண்ணு விழுந்திருக்காது. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் வியூகம்

## தமிழினத்தை அழிவிலிருந்து பாதுகாக்க தேச அங்கீகாரம்தான் தீர்வாக அமையும்

### இராசகுமாரன் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

**தமிழர் ஒரு தேசம் என்பதனை சிதைக்கும் செயற்பாடுகளையே சிங்கள பேரினவாத அரசுகள் காலம் காலமாக செய்து வருவதாக குற்றம் சாட்டியுள்ள அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் (தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி) வேட்பாளர் அ.இராசகுமாரன், அந்த அழிவிலிருந்து தமிழ் இனத்தை காப்பாற்றுவதற்கு தேசமே தீர்வு என்ற கொள்கையில் உள்ள அரசியல்கட்சி ஒன்று தமிழர் தரப்பிற்கு அவசியமானதாகும். இந்த மாற்றத்தினை அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸினால் மட்டுமே ஏற்படுத்த முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.**



வல்வெட்டித்துறையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் முதலாவது பிரசார கூட்டத்தில் அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

யாழ்.பல்கலைக்கழகத்தில் நான் ஆசிரியர் சங்க தலைவராக இருந்த காலத்தில் உயிரிழந்த மக்களுக்காக அவர்களினை நினைவு கூருவதற்காக பல நிகழ்வுகளினை ஏற்பாடு செய்து நடத்தியிருந்தோம்.

அவற்றுக்கு தென்னிலங்கை பேரினவாதிகள் பயங்கரவாத முத்திரை குத்தி அந் நினைவு கூரல்களினை தமது இரும்புக்கரம் கொண்டு அடக்கி வந்தனர்.

எனினும் எமது மண்ணுக்காக மடிந்த வீர மறவர்களினையும் நாம் தொடர்ந்து நினைவு கூர்ந்தே வந்தோம்.

எமது இலக்கு தமிழர் தேசியம், தாயகம், சுயநிர்ணயம் என்பதே. எம்மை எவராலும் விலைக்கு வாங்க முடியாது.

என்றும் நாம் தமிழ் மக்களுடன் இருப்போம் தமிழ்த் தேசத்தினை அழிவிலிருந்து காப்பாற்றுவதற்கு எதிர்வரும் 17ஆம் திகதியன்று சிந்தித்து வாக்களியுங்கள்.

இது எங்கள தேசம், அத் தேசத்தை காப்பாற்ற போராடியவர்கள் இன்று கல்லறைகளில் உறங்குகின்றார்கள். அவர்களின் கனவுகளினை நாம் சிதறடித்து விடக்கூடாது என மேலும் தெரிவித்தார். (இ-4)

## பிரபாகரன்தான் எனது தலைவர்

### ஐ.தே.க. வேட்பாளர் தெரிவிப்பு




தமிழர்களாகிய நாம் எதற்காகப் போராடினோம். தமிழ் த் தேசியத்திற்காகப் போராடினோம். மண்ணும் பிரதிநிதித்துவமே தமிழ்த் தேசியம் . எனது தலைவர் என்று தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரனைத் தான் சொல்வேன். எனக்கு வேறு எந்தத்தலைவரும் இல்லை. அவர் தான் எனக்கு ஒரேயொரு தலைவர். இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் வன்னி மாவட்ட வேட்பாளர் வி.ஜனகன் தெரிவித்துள்ளார்.


முல்லைத்தீவிலுள்ள முள்ளியவளை விநாயகர் மைதானத்தில் அண்மையில் மாபெரும் பிரசாரக் கூட்டம் நடை பெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

தமிழீழத் தேசியத் தலைவரின் வார்த்தையைக் கேட்டு 2005 ஆம் ஆண்டு எங்களுடைய மக்கள் எல்லோரும்90 வீதமான வாக்குகளைப் பதிவு செய்தோம். 5 பிரதிநிதித்துவத்தை எடுத்துக்கொடுத்தார்கள்.2010 ஆம் ஆண்டு மீண்டும் தேர்தல் வந்தது. அப்போது 90 வீதமான வாக்குப்பதிவு 55 வீதமான வாக்குப் பதிவாக பதிவு செய்யப்பட்டது. 55 வீதம் வாக்குப் பதிவினால் எங்களுக்கு 5 ஆசனம்3 ஆசனமாக மாற்றப்பட்டது. இரண்டு ஆசனம் அடுத்த பகுதிக்குச் சென்று விட்டது. இன்று நாம் ஒரு முக்கியமான சந்தர்ப்பத்தில் உள்ளோம். நாங்கள் இழந்த இரண்டு ஆசனங்களை மீண்டும் பெற்றுக் கொள்ள வேண்டும். உலகிற்கு நாம் ஒரு பதில் சொல்வோம். மத்தியாக இருக்கலாம், மாகாணமாக இருக்கலாம், தமிழன் தான் தமிழனை ஆள வேடும், அதற்காகக் குரல் கொடுக்க நாம் ஆயத்தமாக இருக்க வேண்டும்.

தமிழனை இன்று எல்லா இனங்களும் வதை முகாம்களாக ஆக்கிக் கொண்டிருக்கின்றார்கள். இந்த வதை முகாமாக மாறும் தமிழனைக் காக்க வேண்டிய கடப்பாடுண்டு. எல்லோரும் ஒருமித்து சுபீட்சத்தைக் கொண்டு வரவேண்டும் என மேலும் தெரிவித்தார். (இ)



## முதல்வர் விக்கி வெளியிட்டுள்ள கருத்தை தாம் வரவேற்பதாக விக்னராஜா அறிவிப்பு



பாராளுமன்றத் தேர்தலில் எவருக்கும் ஆதரவு வழங்கப்போவதில்லை என வடக்கு மாகாணசபை முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் வெளியிட்டுள்ள கருத்தை தாம் வரவேற்பதாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ். மாவட்ட பிரதம வேட்பாளர் இ.த.விக்னராஜா தெரிவித்துள்ளார். அச்செழு கிராம முன்னேற்றச் சங்க முன்றலில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே இதனைத் தெரிவித்தார்.

முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்ட போது அவருக்கு நாம் ஆதரவு வழங்கியிருந்தோம்.

தற்போது அவர்தான் நடுவு நிலை வகிப்பதாக அறிவித்துள்ளார். அவரின் இவ் அறிவிப்பை நாம் வரவேற்கின்றோம்.

யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயரச் செய்யப்பட்ட எமது சகோதர முஸ்லிம் மக்கள் பெருமளவில் மீளக் குடியேறியதாக கூறப்படுகின்ற போதிலும் அவர்களின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படாது அல்லற்படுவதனை நான் நன்கறிவேன்.

எனவே சகோதர முஸ்லிம் மக்கள் அனைவரையும் அவரவர் இடங்களில் மீளக் குடியேறவும் குடியேறும் மற்றும் குடியேற்றப்படும் சகோதர முஸ்லிம் மக்களின் அவசியத் தேவைகளை அடையாளம் கண்டு பூர்த்தியாக்கப்பட அர்ப்பணிப்புடன் செயலாற்ற உறுதி கூறுகிறேன்.

பெண்கள் தலைமைத்துவத்தின் கீழ் உள்ள குடும்பங்களின் வாழ்வாதாரத்தை ஸ்திரப்படுத்தி சமூகத்தின் உரிய அந்தஸ்துடன் வாழ வழி சமைத்தல்.

பெண்கள் சிறுவர்களுக்கெதிரான வன்முறைகளை துடைத்தெறிய சமுதாய விழுமியங்களைப் பேணும் பொறிமுறைகளை சமூகத்தில் உருவாக்குதல். பிராந்திய மட் த்தில் ஒரு உயர் நீதிமன்றம் அமைக்கப்படுதல்

பிராந்திய சபைகளுக்கு பொருளாதார ஒதுக்கீடு பற்றி தீர்மானம் செய்வதற்கு ஒரு நிதிக் குழு உருவாக்குதல் போன்றவற்றிற்கு செயல் வடிவம் கொடுக்கவும் அர்ப்பணிப்புடனும் இதய சுத்தியுடனும் செய லாற்றுவோம் என உறுதியளிக்கிறேன்.

தடுப்புக்காவலில் உள்ள கைதிகள் விடுதலை சம்பந்தமாக அவர்களின் உற்றார், உறவினர்கள் படும் துன்பம் மிகக் கூடுதலானது என்பதனையும் உற்றார், உறவினர்கள் பொருளாதார ரீதியில் பெரும் துன்பத்தில் வாழ்கின்றார்கள் என்பதனையும் அப்பாவிப் பெண்கள் மற்றும் அவர்களின் பிள்ளைகள் படும் துயரத்தையும் கவனத்தில் எடுத்து சிறையில் உள்ளவர்களை விடுதலை செய்யவோ அல்லது குறைந்த பட்சம் அவர்களுக்கு புனர்வாழ்வு அளித்து விடுதலை செய்யுமாறு அழுத்தம் கொடுக்கும் செயற்பாட்டிற்கு முன்னுரிமை வழங்க உறுதியளிக்கிறேன்.

மக்களினால் தமிழீழ விடுதலைப்புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த தங்க நகைகள் உரியவருக்கு திரும்பக் கொடுக்கும் பணியை அரசாங்கம் தொடரவேண்டும் என்றும் அவர்களிடமிருந்து கைப்பற்றிய பெரும் தொகை பணத்தையும் தங்கத்தை பணமாக மாற்றியும் போரினால் பல்வேறு வகையான பாதிப்புக்குள்ளானவர்களுக்கு நட்டஈடாக பகிர்ந்து கொடுக்க வேண்டும் என அரசை வலியுறுத்தி செயல் வடிவம் கொடுக்க தமிழர்விடுதலைக் கூட்டணிவேண்டுகோள்வைக்கும்.

எனவே தமிழர் விடுதலைக் கூட்டணியை வெற்றி பெறச் செய்து பாராளுமன்றுக்கு அனுப்பிவைக்க அனைத்து மக்களும் முன்வரவேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார். (இ)

## எந்த அரசாக இருந்தாலும் கூட்டமைப்புடன் பேசியே இனப்பிரச்சினையைத் தீர்க்க அழுத்தம் கொடுக்கின்றன

### சரவணபவன் சுட்டிக்காட்டு



தமிழர்களின் பிரதிநிதிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத்தான். எனவேதான் எந்த் அரசாக இருந்தாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேசியே இனப்பிரச்சினை யைத் தீர்க்க வேண்டும் என்று அழுத்தம் கொடுக்கின்றன என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட வேட்பாளர் ஈ.சரவணபவன் தெரிவித்துள்ளார்.

வட்டுக்கோட்டை தேர்தல் தொகுதயில் தொல்புரம் மேற்கு, துணவி, சுழிபுரம், பொன்னாலை ஆகிய பிரதேசங்களுக்கு நேரடியாகச் சென்று அண்மையில் மக்களைச் சந்தித்தார். அங்கு கருத்தத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

நாம் கடந்த பொதுத் தேர்தலில் 38 சதவீதமே வாக்களித்தோம். அதனால் சிங்களக் கட்சிகளிடம் நம்மை அடகு வைத்து வாழ்ந்த மூவர் நாடாளுமன்றம் செல்ல நேரிட்டது. அன்று இருந்த இராணுவ அடக்கு முறைகளும் கொலை மிரட்டல்களும் அடாவடித்தனங்களும் இப்போது இல்லை. இந்த அமைதிச் சூழலை ஏற்படுத்தியதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தான்.

அண்மையில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்கள் தான் என்னை தோற்கடித்து விட்டனர் என்று மகிந்த ராஜபக்ஷ வெளிப்படையாகவே கூறுகின்றனர்.

தமிழர்களை வாக்களிக்க விடாது தடுத்திருந்தால் மகிந்த ராஜபக்ஷவே இப்போதும் ஜனாதிபதியாக இருந்திருப்பார் என்று அவரது தம்பி கோத்தபாய கூறுகின்றார். ஆக, தமிழர்கள் ஒருபோதும் தம்மோடு சேரமாட்டார்கள் என்று அவர்களுக்குத் தெரிந்தே இருக்கிறது.

தமிழர்களின் பிரதிநிதிகள் தமிழ்த் தேசியக் 'கூட்டமைப்புதான். எனவே தான் எந்த அரசாக இருந்தாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேசியே இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என அழுத்தம் கொடுக்கின்றன.

எனவே நமது பேரம் பேசும் சக்தியையும் , பெரும்பான்மையையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்க வேண்டும். நாம் அனைவரும் ஒட்டுமொத்தமாக வாக்களிக்க வேண்டும்.

இந்த நல்ல சந்தர்ப்பத்தை நழுவ விட்டுவிடக் கூடாது பெரியவர்களும், தாய்மார்களும், இளைஞர், யுவதிகளும் தவறாமல் வாக்களிப்பு நிலையங்களுக்கு சென்று வாக்களிக்க வேண்டும். இவ்வாறு வாக்களித்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றி உறுதிப்படுத்தப்பட்டு விடும் என்றும் அவர் தெரிவித்தார். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுடன் அரசாங்கமும் மாற்றப்பட்டு மக்களும் ஏமாற்றப்பட்டுவிட்டனர்

## புதுக்கதையை அவிழ்த்து விடுகிறார் மகிந்த

**கடந்த ஜனவரி மாதம் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலின் போது மக்கள் ஜனாதிபதியை மாற்றவே வாக்களித்தனர். ஆனால் ஜனாதிபதியுடன் சேர்ந்து அரசாங்கமும் மாற்றப்பட்டு மக்கள் ஏமாற்றப்பட்டுவிட்டதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

மேலும் அரச சேவைகளில் சீர்திருத்தங்கள் செய்யப்படும் நாட்டின் சமஷ்டி வாத கோரிக்கைகள் முற்றாக நிராகரிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

காலி எல்பிட்டிய பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மக்கள் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 100 நாள் அரசாங்கம் தேர்தல் பிரசார மேடைகளில் மக்கள் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக 100 திட்டத்தை முன்வைத்திருந்த போதும் ஆட்சி அதிகாரம் கிடைத்தன. பின்னர் அதனை மறந்துவிட்டு பழி வாங்கும் படலத்தை தொடங்கியது.

அதன் பின்னர் விவசாயிகள் மற்றும் பெருந்தோட்ட துறையினர், சிறுதேயிலை தோட்ட உரிமையாளர்களுக்கும் தேயிலைக்கான நிர்ணய விலை அதிகரிக்கப்படும் என வழங்கிய வாக்குறுதிகளையும் ஐக்கிய தேசிய கட்சி மறந்து விட்டது. இறப்பர் நெல் உற்பத்தியாளர்களும் ஐக்கிய தேசிய கட்சி ஆட்சியில் ஏமாற்றப்பட்டுள்ளனர்.



ஆனால் ஐக்கிய தேசிய கட்சி மக்களுக்கு மிகப்பெரிய ஏமாற்றத்தையளித்தது. அதனால் நாட்டு மக்கள் அனைவரும் ஏமாற்றப்பட்டுள்ளனர். கடந்த ஜனாதிபதி தேர்தலின்போது நாட்டின் ஜனாதிபதியை மாற்ற வேண்டும் என்பதற்காகவே மக்கள் வாக்களித்தனர். ஆனால் ஜனாதிபதியுடன் சேர்ந்து அரசாங்கத்தையும் மாற்றிவிட்டனர். அதனால்தான் அது மாற்றம் அல்ல மக்களுக்கு கிடைத்த ஏமாற்றம் என்று கூறுகின்றோம்.

இதனால் இந்த அரசாங்கத்தை மாற்ற மக்கள் முன்வர வேண்டும். மக்கள் எமக்கு இம்முறை சந்தர்ப்பம் வழங்கினால் தேயிலைக்கான விலை 90 ரூபாவாகவும் பாலின் விலை 70 ரூபாவாகவும், நெல்லின் விலை 50 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்படும். அரச சேவைகளில் சீர்திருத்தங்கள் செய்யப்படும் நாட்டின் சமஷ்டி வாத கோரிக்கைகள் முற்றாக நிராகரிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மட்டக்களப்பில் பல்வேறு கொள்ளையுடன் தொடர்புடைய இரு மாணவர்கள் கைது

மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டு சந்தேகநபர்களை காத்தான்குடி பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

மேலும் இவர்கள் வசமிருந்து கொள்ளையிடப்பட்ட 30 பவுண் தங்க நகைகள், ஐந்து இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா பணம் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. அத்துடன் இவர்கள் கொள்ளையிட்ட இரண்டு கையடக்கத் தொலைபேசிகளையும் வாவியில் வீசிவிட்டதாக விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாகவும் காத்தான்குடி பொலிஸார் சுட்டிக்காட்டினர். கைது செய்யப்பட்ட இரு சந்தேகநபர்களும் காத்தான்குடி முதலாம் குறிச்சியைச் சேர்ந்த மாணவர்கள் எனவும் அதில் ஒரு சந்தேகநபர் இவ் வருடம் கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை எழுதவுள்ள மாணவர் எனவும் காத்தான்குடி பொலிஸார் மேலும் தெரிவித்தனர். இவர்களை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.


இது தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 60 | 70 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 90 | 100 | 80 |
| பச்சைமிளகாய் | 300 | 250 | 250 | 400 | 250 |
| தக்காளி | 120 | 120 | 120 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 60 | 60 | 60 |
| கோவா | 100 | 80 | 50 | 80 | 70 |
| கரட் | 100 | 160 | 110 | 200 | 140 |
| பூசணி | 60 | 40 | 40 | 60 | 40 |
| புடோல் | 40 | 30 | 50 | 60 | 40 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 40 | 60 |
| சின்ன வெங்காயம் | 120 | 100 | 100 | 120 | 80 |
| பெரிய வெங்காயம் | 140 | 100 | 90 | 120 | 120 |
| பாகற்காய் | 140 | 140 | 140 | 100 | 80 |
| வெண்டிக்காய் | 60 | 30 | 50 | 100 | 50 |
| கருணைக் கிழங்கு | 100 | 80 | 60 | 100 | 120 |
| பயற்றங்காய் | 40 | 30 | 90 | 40 | 30 |
| லீக்ஸ் | 100 | 140 | 100 | 120 | 120 |
| பீற்றூட் | 40 | 80 | 80 | 80 | 80 |
| கறிமிளகாய் | 160 | 150 | 160 | 120 | 140 |
| முருங்கைக்காய் | 60 | 120 | 170 | 120 | 150 |
| போஞ்சி | 180 | 140 | 180 | 200 | 160 |
| கத்தரிதம்புள்ள | 30 | 40 | 60 | 60 | 70 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 | 20 | 15 |
| தேசிக்காய் | 40 | 50 | 60 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 25-50 | 40 | 40 | 30-40 | 40 |
| இராசவள்ளி | 200 | 120 | 150 | - | 120 |
| வெங்காயப்பூ | 100 | 150 | 160 | 200 | 160 |
| முள்ளங்கி | 40 | 30 | 30 | 80 | 40 |
| பொன்னாங்காணி | 40 | 20 | 30 | 30 | 25 |
| வல்லாரை | 10 | 10 | 15 | 20 | 20 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 452


அனுசா அனு





பத்மா ராஜன்




நித்தி தேவகி




பிருந்தா தாஸ்




சீர்த் கெவின்



சிவம் சிவகுரு





நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்தவை மின்சாரக் கதிரைக்கு கொண்டுசெல்லும் முயற்சி தீவிரம்

## டிலான் பெரேரா அச்சம்



**யுத்த குற்றச்சாட்டுகள் மூலம் மகிந்த ராஜபக்ஷவை மின்சாரக் கதிரைக்கு கொண்டு செல்லும் முயற்சிகள் பலமடைந்து வருகின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அரசாங்கமும் சர்வதேச அமைப்புகளும் மகிந்தவை தண்டிக்க முயற்சிக்கின்றன என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தெரிவித்தது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மகிந்தவை காப்பாற்றுவார் என்ற நம்பிக்கை உள்ளது. ஆனால் ரணில் மீது துளியளவேனும் நம்பிக்கை இல்லை எனவும் அந்த முன்னணி குறிப்பிட்டது.**

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செய்தியாளர் சந்திப்பு நேற்று முன்தினம் கொழும்பிலுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டிருந்த ஐக்கிய மக்கள சுதந்திர முன்னணியின் உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான டிலான் பெரேரா கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

போர்க்குற்ற விசாரணைகளின் மூலம் குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதும், மின்சாரக் கதிரை கதைகளும் பொய்யான கூற்றுக்கள் என்றே நாம் நினைத்தோம். ஆனால் இப்போதிருக்கும் நிலைமைகளை பார்க்கும்போது மின்சாரக் கதிரை கதைகள் பொய்யானது அல்ல என்று தோன்றுகின்றது. யுத்தத்தில் இடம்பெற்றதாக கூறப்ப டும் போர்க் குற்றச்சாட்டுகளில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட முக்கிய நபர்களை தண்டிக்க வேண்டும் என சர்வதேச புலம்பெயர் அமைப்புகள் மற்றும் இங்குள்ள இனவாத தரப்புக்கள் தெரிவித்து வருகின்றன. அதனை உறுதிப்படுத்தும் வகையில் இலங்கையின் அண்மைக்கால செயற்பாடுகள் அமைந்துள்ளன.

குறிப்பாக யுத்த குற்றச்சாட்டுகள் தொடர்பில் சர்வதேச விசாரணையே அவசியம் என்றும், சர்வதேச விசாரணை அறிக்கையின் மூலம் குற்றங்கள் கண்டறியப்படுதல் அவசியம் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதன் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்துள்ளது.

எனினும் சர்வதேச விசாரணைக்கு அனுமதிப்பதில்லை என அரசாங்கம் குறிப்பிட்டாலும் உள்ளக பொறிமுறைகள் மூலம் போர்க்குற்ற விசாரல்ணகளை முன்னெடுப்பதாக கூறுகின்றது. அதேபோல் உள்ளக விசாரணைப் பொறிமுறையின் போது வடமாகாண சபைக்கு முக்கிய பங்கினை வழங்கப்போவதாக தெரிவித்துள்ளனர். மேலும் இலங்கை மீதான சர்வதேச விசாரணைகள் தொடர்பில் சனல் 4 இன் அறிக்கை கசிந்துள்ளது. இதிலும் போர்க்குற்றவாளிகளை தண்டிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகவும் கூறப்படுகின்றது.

மிகவும் முக்கியமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அண்மைக்கால செயற்பாடுகள் மோசமானதாகவே அமைந்துள்ளன. எமது ஆட்சியில் 13 ஆம் திருத்தச் சட்டத்தில் அதிகாரங்கள் போதுமென கூறியவர்கள் இப்போது 13க்கு அப்பால் சென்று சுயநிர்ணய கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர்.

ஆகவே மகிந்தவை மின்சாரக் கதிரைக்கு கொண்டுசெல்லும் தீவிர முயற்சிகளை இவர்கள் மேற்கொள்கின்றனர்.

**கேள்வி :-** மகிந்தவை தண்டிக்க அனுமதிக்கமாட்டோம் என பிரதமர் கூறியுள்ளாரே?

**பதில் :-** மகிந்த ராஜபக்ஷவை மின்சாரக் கதிரைக்கு கொண்டுசெல்ல ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த பல சந்தர்ப்பங்களில் தெரிவித்துள்ளார். யுத்த காலகட்டத்தில் எம்முடன் இணைந்து வெற்றிக்கு வித்திட்டவர்களில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பங்கும் உள்ளது. கடந்த ஜனாதிபத் தேர்தலின் போதும் அவர் மகிந்தவை மின்சாரக் கதிரைக்கு கொண்டுசெல்ல ஒருபோதும் அனுமதிக்க போவதில்லை என்பதை குறிப்பிட்டிருந்தார். ஆனால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை நாம் ஒருபோதும் நம்பப்போவதில்லை.

ரணில் விக்கிரமசிங்க அனைத்து சந்தர்ப்பங்களிலும் சர்வதேச பிரிவினைவாத அமைப்புகளுடனும் புலிகளுடனுமே செயற்பட்டவர். ஆகவே இப்போதும் அவர் சர்வதேச விசுவாசியாகவே செயற்பட்டு வருகின்றார். மகிந்தவை மின்சாரக் கதிரைக்கு அனுமதிக்க அவர் நினைத்தாலும் இந்த நாட்டின் சிங்கள மக்கள் ஒருபோதும் அனுமதிக்க மாட்டார்கள். அதை தெரிந்துகொண்டே ரணில் இவ்வாறு கூறுகின்றார் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மத்திய மாகாண அமைச்சர் பிரமித பண்டார கைது

மத்திய மாகாண அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார். தாக்குதல் சம்பவம் தொடர்பில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார். இந்த தாக்குதல் சம்பவம் நேற்று முன்தினம் நடந்துள்ளது.

கைது செய்யப்பட்டுள்ள அமைச்சர் தென்னகோன், தம்புள்ள நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட உள்ளதாகவும் ருவான் குணசேகர தெரிவித்தார்.

மத்திய மாகாண அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன், முன்னாள் அமைச்சர் ஜனக்க பண்டார தென்னகோனின் புதல்வர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வரவு செலவுத் திட்டத்திற்கு தயாராகும் ரவி கருணாநாயக்க

(கொழும்பு)

எதிர்வரும் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை தயாரிக்கும் பணிகளை நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆரம்பித்துள்ளார்.

2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை தயாரிப்பதற்கான திட்டமிடல் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதனை நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க, அமைச்சரவையிடம் அறிவித்துள்ளார்.

அரச செலவுகளை கிரமமான முறையில் செலவிடும் பொறிமுறைமை ஒன்றை உருவாக்கி அதன ஊடாக கல்வி மற்றும் சுகாதாரத்துறைக்கு கூடுதல் நிதியை ஒதுக்கீடு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

வரவு செலவுத் திட்ட பற்றாக்குறை 5.5 வீதமாக கட்டுப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. தனியார்துறை முதலீடுகளை அதிகரித்தல், மொத்த தேசிய உற்பத்தியில் 30 வீதமாக மொத்த முதலீடுகளை அதிகரித்தல், பொருளாதார வளர்ச்சியை 8 வீதமாக உயர்த்துதல் போன்றவற்றை இலக் காகக் கொண்டு வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டுக்கான வரவு



செலவுத் திட்டம் குறித்த சுற்று நிருபம் வெளியிடப்பட உள்ளதாகவும், வரவு செலவுத்திட்டம் குறித்து அமைச்சுக்களுடனான ஆரம்பக் கட்ட பேச்சுவார்த்தைகள் இம்மாத முதல் வாரங்களில் நடைபெறவுள்ளதாக [illegible] தெரிவித்துள்ளார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## இழப்பது எப்படி ?

ஒருவன் ராமகிருஷ்ணரைத் தேடி வந்தான். அவன் ஆயிரம் பொற்காசுகள் வைத்திருந்தான். அதை அவரிடம் கொடுத்து இதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று மிகவும் பணிவாகக் கேட்டுக்கொண்டான். அவர் பார்த்தார்.

“இது எனக்குத் தேவை இல்லை. ஆனாலும் உன் மனதைப் புண்படுத்த நான் விரும்பவில்லை. அதனால் நீ கொடுப்பதை வாங்கிக் கொள்கிறேன்” என்றார். வாங்கிக் கொண்டார். அதன் பின்னர் “இதோ பார் இனிமேல் இது எல்லாம் என்னுடையது தானே” என்றார்.

“ஆமாம் அதையெல்லாம் நான் உங்களுக்கே கொடுத்து விட்டேன்” என்றான்.

“சரி... இப்பொழுது நீ எனக்காக ஒரு காரியம் செய்ய வேண்டும்” என்றார்.

“என்ன செய்ய வேண்டும் சொல்லுங்கள்” என்றார். “இந்த நாணயங்களையெல்லாம் எடுத்துக் கொண்டு போய் கங்கை நதியில் எறிந்து விட்டுவா!” என்றார்.

இவனுக்கோ அதிர்ச்சி. என்ன செய்வது. இனிமேல் அது முடியாது என்றும் சொல்ல முடியாது. ஏனெனில், அந்த நாணயங்களையெல்லாம் அவருக்கே கொடுத்து விட்டான். இனிமேல் அதெல்லாம் இவனுடையது அல்ல.

பேசாமல் அவ்வளவையும் அள்ளிக்கொண்டு ஆற்றங்கரைக்குப் போனான். போனவன் திரும்பி வரவேயில்லை. ராமகிருஷ்ணருக்கு சந்தேகம் வந்துவிட்டது. அங்கிருந்த ஒருவரை அவன் எங்கே? அவனுக்கு என்ன நடந்தது? என்று போய் பார்த்துவிட்டு வா என்று அனுப்பினார். அவர் போய்ப் பார்த்துவிட்டு வந்து விபரத்தைக் கூறினார்.

“அவன் கங்கைக்கரையில் உட்கார்ந்து கொண்டு ஒவ்வொரு நாணயமாக ஒன்று இரண்டு என்று எண்ணி வீசிக்கொண்டிருக்கிறான். அவனைச் சுற்றி ஒரு கும்பல் நின்றுகொண்டு அவனைத் தடுத்துக் கொண்டிருக்கிறது” என்றார். இதைக் கேட்டதும் ராமகிருஷ்ணர் அங்கு புறப்பட்டுச் சென்றார்.

“என்ன இப்படி பண்ணிக் கொண்டிருக்கிறாய்? நான் உன்னை அந்த நாணயங்களை கங்கையில் வீசி எறியச் சொன்னேன். நீ ஏன் அதை எண்ணிக் கொண்டிருக்கிறாய்?” என்றார்.

பழக்கம்தான் காரணம். நான் ஒவ்வொரு நாளும் ஒவ்வொன்றாக சேமித்து வைத்தேன். இப்பொழுது என்னிடம் நிறையவே இருக்கிறது. உங்களுக்கு ஆயிரம் நாணயங்களை கொடுக்க வேண்டும் என்பதுதான் எனது ஆசை என்றான். அதற்கு ராமகிருஷ்ணர்,

“ஒரே நேரத்தில் எல்லாவற்றையும் சம்பாதித்திருந்தால் நீ எண்ணுவது பொருத்தமாக இருக்கும். எல்லாவற்றையும் இழக்கும்போது எண்ணிக் கொண்டு இருப்பது என்பது சரியான மூடத்தனம். ஒரே தடவையாக எல்லாவற்றையும் தூக்கி எறிந்து விடு” என்றார்.

இங்கு இழப்பது என்பது ஓர் உயர்ந்த நிலை . இதை நம்முடைய யதார்த்த வாழ்க்கையில் சம்பந்தப்படுத்தி பார்த்து குழம்பிக் கொண்டிருக்கக்கூடாது. இழக்கிறேன் என்று சொல்லிக்கொண்டு இருக்கும் காசையெல்லாம் ஆற்றிலும் குளத்திலும் எறிந்து கொண்டிருந்தால் பார்ப்பவர்கள் சந்தேகப்படுவார்கள்.

இதில் நாம் புரிந்து கொள்ள வேண்டியது என்னவெனில், எதையாவது ஒன்றை இன்னொருவருக்கு கொடுக்க வேண்டும் என்று விரும்பினால் அதை மனப்பூர்வமாக கொடுக்க வேண்டும். கொடுத்துவிட்டு அதையே நினைத்துக் கொண்டிருக்கக் கூடாது.

நம்ம ஆள் ஒருவர் ஒரு நூறு ரூபாய் தாளை எடுத்து தனது நண்பர் ஒருவரிடம் கொடுத்து “இது உனக்குத் தான் வைத்துக்கொள்” என்றார். அவர் பார்த்தார்.

“இது இனிமேல் எனக்குத்தானே சொந்தம்?” என்றார்.

“ஆமாம்” என்றார்.

“அப்படியானால் எனக்காக நீங்கள் ஒரு உதவி செய்ய வேண்டும்” என்றார்.

“சொல்லுங்கள் செய்கிறேன்” என்றார்.

“இந்த நூறு ரூபாய் நோட்டை தீ வைத்து கொளுத்திவிடு” என்றார்.


இவர் அதிர்ச்சியுடன் அவரைப் பார்த்தார்.

அதற்கு அவர், “நீ எனக்கு அன்பாக கொடுத்த இது கள்ள நோட்டு என்று எனக்குத் தெரியும். சீக்கிரம் கொளுத்து” என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாந்தோட்டை மீது மீண்டும் குறிவைக்கும் சீனா!




அம்பாந்தோட்டைத் துறைமுகத்தில் கப்பல் கட்டும் மற்றும் கப்பல்களைப் பழுது பார்க்கும் தளத்தை (டொக்யார்ட்) அமைப்பதற்கான சாத்தியவள ஆய்வை மேற்கொள்வதற்கு சீன நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ள அனுமதி, சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகள் மீண்டும் துளிர்விடத் தொடங்கியுள்ளன என்பதற்கு ஆதாரமாக அமைந்திருக்கின்றன. அமைச்சர் அர்ஜுன ரணதுங்கவினால் முன்வைக்கப்பட்ட, இந்த யோசனைக்கு, கடந்த 22 ஆம் திகதி நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில், அங்கீகாரம் அளிக்கப்பட்டிருந்தது.

ஏற்கனவே, அம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பான சர்ச்சைகள், சந்தேகங்கள் நீண்டு கொண்டிருக்கும் நிலையில், மீண்டும் சீனாவின் திட்டமொன்றுக்கு இலங்கை அரசாங்கம் அனுமதி அளித்திருக்கிறது.

அம்பாந்தோட்டை துறைமுகம் இரண்டு விதமான நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து நிற்கிறது. முதலாவது - இதன் மீதான சீனாவின் செல்வாக்கு, இந்தியா உள்ளிட்ட நாடுகளினதும், இந்தியப் பெருங்கடல் மற்றும் சர்வதேச கடல் போக்குவரத்து பாதையினதும், பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக மாறலாம் என்ற சர்ச்சை.

அம்பாந்தோட்டையில் துறைமுகத்தை அமைக்கும் வாய்ப்புக்காக இந்தியாவை நாடிய போது, அதனை உதறித் தள்ளியது புதுடில்லி. ஆனால், சீனா அதனைப் பயன்படுத்திக் கொண்டு, இலங்கைக்குள் வேகமாக ஊடுருவி ஆதிக்கம் செலுத்தியபோது இந்தியா கையைப் பிசைந்து கொண்டு நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

அம்பாந்தோட்டையில் அமைக்கப்படும் துறைமுகம் முற்றிலும் வணிக நோக்கம் கொண்டது என்று இலங்கையும், சீனாவும் அவ்வப்போது வலியுறுத்தி வந்தாலும், அது இராணுவ நோக்கத்துக்காக சீனாவினால் பயன்படுத்தப்படக் கூடுமோ என்ற கவலை இந்தியாவுக்கு இருக்கிறது.

அதனால், அம்பாந்தோட்டைத் துறைமுக விரிவாக்கத் திட்டங்களை முடக்குவதற்கு முயற்சித்து தோல்விகளைச் சந்தித்தது இந்தியா.

இரண்டாவது- அம்பாந்தோட்டையில், மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் சீனாவின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட மாகம்புர துறைமுகம், வர்த்தக ரீதியாக இலங்கை அரசாங்கத்துக்கு இன்று வரையில் இலாபமீட்டும் ஒன்றாக அமையவில்லை என்ற குற்றச்சாட்டு.

இந்த துறைமுகத்தை அமைப்பதற்காக அரசாங்கம் சீனாவிடம் பெற்ற கடனுக்காக ஆண்டுதோறும், 2,200 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான தொகையை செலுத்தி வருகிறது.

2, 208 மில்லியன் ரூபா, 2012 ஆம் ஆண்டிலும், 2,479 மில்லியன் ரூபா, 2013 ஆம் ஆண்டிலும், 2,233 மில்லியன் ரூபா, 2014 ஆம் ஆண்டிலும் திருப்பிச் செலுத்தப்பட்டுள்ளது.

அதனைக்கூட இந்த துறைமுகத்தினால் ஈடுகட்ட முடியாதிருக்கிறது. இருந்தாலும், இந்த துறைமுகத்தின் விரிவாக்கப் பணிகள் தொடர்ந்து வருகின்றன. இது நிறைவு பெற்றால் ஒரே நேரத்தில் 33 கப்பல்கள் தரித்து நின்று பொருட்களை ஏற்றி இறக்கும் செயற்பாடுகளை முன்னெடுக்கலாம்.

ஆனால், அதற்கு அந்தளவு கப்பல்கள் வரவேண்டுமே என்பதுதான் பிரச்சினை.

இத்தகைய சர்ச்சைக்குரிய அம்பாந்தோட்டைத் துறைமுகத்தில்தான் கப்பல்களை கட்டும், பழுதுபார்க்கும் தளத்தை அமைக்கும் யோசனையை முன்வைத்திருக்கிறது சீனாவின் துறைமுக பொறியியல் நிறுவனம்.

இது சீன அரசத்துறை நிறுவனமான சீன தொடர்பாடல் கட்டுமான நிறுவனத்தின் ஓர் அங்கமாகும். அது உலகெங்கும் 80 நாடுகளில் கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டுள்ள, உலகின் மிகப்பெரிய நிறுவனங்களில் ஒன்று.

சீன அரச நிறுவனமான இது, சீனாவின் பொருளாதார நலன்களுக்கு அப்பால், பாதுகாப்பு நலன்களை அடைவதற்கான ஒரு கருவியாகவும் பீஜிங்கினால் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இந்தியப் பெருங்கடல் வழியாக பயணம் செய்யும் கப்பல்கள், இலகுவாக எரிபொருள் நிரப்பிக் கொள்ளத்தக்க இடத்தில், கிழக்கு மேற்கு கப்பல் பாதைக்கு மிக அருகாக அமைந்திருப்பதால், அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு அதிகளவு கப்பல்கள் வரும் என்றும், அவற்றுக்கு எரிபொருள் விநியோகம் செய்தே, அதிக இலாபமீட்டலாம் என்றும், சீன நிறுவனம் இலங்கைக்கு ஆசை காட்டியிருந்தது. ஆனால், இலங்கை அரசாங்கம் எதிர் பார்த்தது போன்று அம்பாந்தோட்டை துறை முகத்தினால், சர்வதேச கடற்பாதையில் பயணிக்கும் கப்பல்களை ஈர்க்க முடியவில்லை.

இந்தநிலையிலேயே, கப்பல்களைக் கட்டும், பழுதுபார்க்கும் தளத்தை அமைத்தால், இங்கு வரும் கப்பல்களின் எண்ணிக்கையை அதிகரிக்கலாம் என்ற திட்டத்தை முன்வைத்திருக்கிறது சீனா.

ஏற்கனவே அம்பாந்தோட்டையிலும், இலங்கையின் பல பகுதிகளிலும் திட்டங்களை நிறைவேற்றும் ஆணை பெற்ற, சீனாவின் பொறியியல் கட்டுமான நிறுவனமே, இந்த யோசனையை முன்வைத்திருந்தது. இந்த நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட்ட, கொழும்புத் துறைமுக நகரத் திட்டத்தின் கட்டுமானப் பணிகளை இலங்கை அரசாங்கம், இடைநிறுத்தி வைத்து நான்கு மாதங்களாகியுள்ள நிலையில்தான், அதே நிறுவனத்தின் புதிய திட்டம் குறித்து சாத்திய ஆய்வை மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இந்த சாத்திய ஆய்வுக்கு 12 மாதகால அவகாசம் கோரியிருக்கிறது சீன நிறுவனம். அந்த சாத்திய [illegible] இந்தக் கப்பல் கட்டும் தளத்[illegible] செலவாகும், அதனை எவ்வாறு ஈடுகட்டலாம், அந்த தளத்தை எப்படி முகாமைத்துவம் செய்யலாம் என்பன போன்ற விபரங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

எவ்வாறாயினும், சீன நிறுவனம் இந்த கப்பல் கட்டும் தளத்தை, தாமே நிர்வகிக்கும் ஒரு திட்டத்தையே அரசாங்கத்திடம் முன்வைத்திருக்கிறது.

சீனாவின் திட்டங்கள் தொடர்பாக கடும் போக்கை வெளிப்படுத்தி வந்த, இலங்கை அரசாங்கம் இப்போது, தனது நிலைப்பாட்டில் மாற்றம் செய்திருக்கிறது.

அண்மையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்ககூட இதனைச் சுட்டிக்காட்டியிருந்தார். சீனாவின் புதிய முதலீடுகளுக்கு கதவு திறக்கப்பட்டுள்ளதாக அவரது உரை அமைந்திருந்தது. அதுமட்டுமன்றி, ஏற்கனவே சீன நிறுவனத்துடன் இணைந்து தெற்கு அதிவேக நெடுஞ்சாலைத் திட்டமும், ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்புத் துறைமுக நகரத் திட்டமும் கூட, பாராளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர் மீளத் தொடங்கப்படும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

இத்தகைய கட்டத்தில்தான், அம்பாந்தோட்டைத் துறைமுகம் மீதான சீனாவின் கவனம் இன்னமும் கலையவில்லை என்பதை உணர்த்தும் வகையில், அங்கு கப்பல் கட்டும் தளத்தை அமைப்பதற்கான திட்டம் முன்வைக்கப்பட்டிருக்கிறது. இது குறித்து இந்தியாவிடமிருந்து எந்தக் கருத்தும் வெளியாகவில்லை. ஆனால், அம்பாந்தோட்டையில், இலங்கை கடற்படைத் தளத்தை அமைக்கவுள்ளதாக இந்திய ஆங்கில ஊடகங்கள் பலவும் தவறாக செய்திகளை வெளியிட்டிருந்தன.

அமைச்சரவைப் பத்திரத்தில் Naval Dockyard என்ற குறிப்பிடப்பட்டிருந்ததை, இந்திய ஆங்கில ஊடகங்கள் சில, கடற்படைத தளங்கள் என்ற தவறாக அர்த்தம் கொண்டு செய்தி வெளியிட்டன. எனினும், அது கப்பல் கட்டும் தளம் என்பதையும், அதனை சீனாவே கட்டி நிர்வகிக்கப் போகிறது என்ற செய்தியும் இந்தியாவுக்கு இனிப்பான செய்தியாக இருக்காது என்பது உண்மை.

ஏற்கனவே அம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் மீது சீனாவுக்கு அளிக்கப்பட்டுள்ள உரிமைகள் விடயத்தில் இந்தியாவுக்கு அதிருப்தி உள்ளது.

அதைவிட, சீனாவின் முதலீட்டில் கொழு[illegible] நகரத் திட்டத்தை கைவிடு[illegible] அது இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் என்றும், இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் புதுடில்லியில் வைத்து தன்னிடம் கூறியதாக அண்மையில், தகவல் வெளியிட்டிருந்தார் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச. அந்தளவுக்கு சீனாவின் திட்டங்கள் குறித்து இந்தியா விழிப்புடன் இருக்கிறது.

தனது பாதுகாப்புக்கான அச்சுறுத்தல் இலங்கை வழியாக வந்து விடக் கூடாது என்பதில் இந்தியா கவனமாக இருக்கிறது.

ஏற்கனவே, திருகோணமலைத் துறைமுகத்தை அண்டிய, சீனக்குடாவில், சீனாவின் வான் பொறியியல் நிறுவனம், விமானப் பராமரிப்பு மற்றும் பழுதுபார்க்கும் நிலையம் ஒன்றை அமைக்க முயற்சித்தமை நினைவில் இருக்கலாம்.

மஹிந்த ராஜபக்ச அரசாங்கம் அதற்கு கிட்டத்தட்ட ஒப்புதல் அளித்திருந்த நிலையில் தான், புதுடில்லியில் ஆட்சிமாற்றம் ஏற்பட்டது. அப்போது புதுடில்லி சென்ற வெளிவிவ கார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸிடம், இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ், சீனக்குடாவில் சீன நிறுவனம் கால் வைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார்.

மஹிந்த ராஜபக்ச ஆட்சிக்காலத்தில் இந்திய - இலங்கை உறவுகளில் சீரற்ற நிலை தோன்ற அதுவும் ஒரு காரணம்.

கடைசியில், வேறு வழியின்றி, சீனக்குடாவில் விமானங்களைப் பழுதுபார்க்கும், விமானப் பராமரிப்பு நிலையத்தை அமைப்பதற்கு சீன நிறுவனத்துக்கு அனுமதி அளிப்பதில்லை என்ற முடிவு மஹிந்த ராஜபக்ச அரசினால் எடுக்கப்பட்டது.

அந்த திட்டத்தை, ஹிங்குராங்கொட விமானப்படைத் தளத்தில் செயற்படுத்துமாறு சீனாவிடம் கேட்டது இலங்கை அரசாங்கம். அதற்குப் பின்னர், அந்த திட்டம் பற்றியே சீனா வாய் திறக்கவில்லை.

இந்தநிலையில்தான், சீனா அம்பாந்தோட்டையில் கப்பல்களைப் பழுதுபார்க்கும் திட்டத்துடன் வந்து நிற்கிறது.


இதற்கு மைத்திரிபால சிறிசேன அரசாங்கமும் பச்சைக்கொடி காண்பித்திருக்கிறது.

சீன நிறுவனம் சமர்ப்பிக்கப் போகும் சாத்திய ஆய்வு அறிக்கை மட்டுமே, இந்த கப்பல் கட்டும் தளத்தின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் ஒன்றாக இருக்கும் என எதிர்பார்க்க ஒன்றாக இருக்கும் என எதிர்பார்க்க முடியாது. ஏனென்றால், இந்தியாவின் கண்ணசைப்பும் அதற்குத் தேவைப்படும்.

-ஹரிகரன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமைக்கு எதிரானதா இத்தண்டனை?



தூக்குத் தண்டனையானது இந்தியாவில் மீண்டும் விவாத மாகியிருக்கிறது. 1993 மும்பை வெடிகுண்டு வழக்கில் கைது செய்யப்பட்டு, தூக்கிலிடப்பட்ட யாகூப் மேமன் விவகாரத்துக்கு பின்னர் இந்தத் தண்டனை இந்தியாவில் தேவையா என்ற கேள்வி பலமாக எழுந்திருக்கி றது. 2004 முதல் 2013 வரை இந்தியாவில் தூக்குத் தண்ட னைகள் நிறைவேற்றப்படாமல் ஒரு "சுய கட்டுப்பாடு" நிலவியது என்றே சொல்ல வேண்டும்.

ஆனால், இந்திய நாடாளு மன்றத் தாக்குதலில் ஈடுபட்ட அப்சல் குரு, மும்பை தாஜ் ஹோட டல் தாக்குதலில் ஈடுபட்ட அஜ்மல் கசாப் ஆகியோர் தூக்கிலிடப்பட்ட பின்னர், தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டது குறித்த சர்ச்சைகள் எழுந்தன. இந்த முன்ற யாகூப் அப்துல் ரஜாக் மேமன் தூக்கிலிடப்பட்ட பிறகு "தூக்குத் தண்டனை இந்தியா வில் ஒழிக்கப்பட வேண்டும்" என்ற குரல் மாநிலக் கட்சிகளி லிருந்து அகில இந்தியக் கட்சி கள் வரை எதிரொலிக்கத் தொட ங்கியிருக்கிறது.

யாகூப் மேமனுக்கு கருணை காட்ட வேண்டும் என்பது மும்பை குண்டு வெடிப்பு வழக்கு விசா ரணையில் தொடர்புடைய இந்திய முன்னாள் உளவுத்துறை அதி காரி ராமன் (தற்போது மறைந்து விட்டார்) முன் வைத்த வாதம். யாகூப் மேமனுக்கு மும்பை தாடா நீதிமன்றம் நவம்பர் 2006 இல் தூக்குத் தண்டனை விதித் தது. அதன்பிறகு இந்திய உச்ச நீதிமன்றம் 2011 இல் அதை உறுதி செய்தது. இதன் பின்னர், 2013 இலிருந்து 30.7.2015 அதிகாலை 4.50 மணி வரை க்கும் யாகூப் மேமனின் வழக் கறிஞர்கள், அவரது தூக்குத் தண்டனையை எதிர்த்து மிகப் பெரிய சட்டப் போராட்டம் நடத்தி இறுதியில் தோல்வி கண்டார்கள்.

இந்திய உச்சநீதிமன்ற வர லாற்றில், நள்ளிரவில் விசா ரணை தொடங்கி, அதிகாலை வரை நடைபெற்ற தூக்குத்தண் டனை வழக்கு யாகூப் மேமனின் வழக்கு என்று வரலாறு பதிவு செய்து விட்டது. சுருக்கமாகச் சொல்லப் போனால், ஒரு தூக்குத் தண்டனைக் கைதி, தான் தூக்கி லிடப்படுவதற்கு இரண்டு மணி நேரத்துக்கு முன்பு வரை நாட்டின் முதல் நீதிமன்றமான உச்சநீதி மன்றத்தை அணுக முடியும் என்ற அளவுக்கு சட்ட வழிமுறைகள் கொடுக்கப்பட்டுள்ளன. அதுதான் இந்திய ஜனநாயகத்தின் சிறப் பம்சம்!

தூக்குத் தண்டனை கைதி கள், தங்கள் மீதான தண்டனை உறுதி செய்யப்பட்ட பின்னர் இரு வழிகளை கையாள்வார்கள். ஒன்று மறுபடியும் நீதிமன்ற வழி முறைகளை கடைப்பிடித்து

"தூக்குத் தண்டனையை" ரத்து செய்ய முயற்சிப்பது. இல்லை யெனில் "கருணை மனு" என்ற வாய்ப்பைப் பயன்படுத்தி அரசாங் கத்திடம் உயிர்ப்பிச்சை பெறுவது. கருணை மனு விவகாரத்தில் அரசின் முடிவைத்தான் ஆளுநரோ, குடியரசுத் தலைவரோ உறுதி செய்ய முடியும். யாகூப் மேமன் விடயத்தில், உச்சநீதிமன்றம் தூக்குத் தண்டனையை உறுதி செய்த பின்னர் இரு முறை உச்ச நீதிமன்றத்தில் "ரிவீயூவ்" பெட்டி ஷன் போட்டார். அதை "மறு ஆய்வு" மனு என்று கூறுவார்கள். இந்த இரு மனுக்களும் தள்ளுபடி செய் யப்பட்டன. மூன்றாவதாக இரு முறை "சீராய்வு மனு" போட்டார். அதை Curative Petition என்பார்கள். முதல் மனு தள்ளு படி செய்யப்பட்டது. இரண்டாவது மனு, உச்சநீதிமன்ற நீதியரசர் கள் குரியன் ஜோசப், அனில் தவே ஆகியோர் முன்பு ஜூலை 28 ஆம் திகதி விசாரணைக்கு வந் தது. அன்றைய தினத்துக்கும், யாகூப் மேமனை தூக்கிலிடுவ தற்கும் இரண்டு நாட்கள் மட் டுமே கால அவகாசம் இருந்தது.

இந்த "சீராய்வு மனு" ஆனால், தீர்ப்பு "Split verdict" ஆக வந்து விட்டது. ஜூலை 28 ஆம் திகதி வழங்கப்பட்ட அந்த தீர்ப்பில் "யாகூப் மேமன் சொல்லும் கார ணங்கள் ஏதும் ஏற்கும் படியாக இல்லை" என்று உச்சநீதின்ற நீதிபதி அனில் தவே, தள்ளுபடி செய்தார். ஆனால், இன்னொரு நீதிபதியான குரியன் ஜோசப், "யாகூப் மேமனின் முதல் "சீராய்வு மனு" உச்சநீதிமன்ற விதிகளின் படி விசாரிக்கப்படவில்லை.

அரசியல் சட்டப் பிரிவு 21 இல் ஒருவருடைய உயிரை சட்டப்படி யான நடைமுறைகள் படிதான் எடுக்க முடியும். இந்த விடயத்தில் உச்சநீதிமன்ற விதிமுறைகளே கடைப்பிடிக்கப்படவில்லை என்ப தால், சீராய்வு மனுவை முறைப் படி விசாரித்து முடிவு அறிவிக்கும் வரை தடா நீதிமன்றம் வழங்கிய தூக்கில் போடும் உத்தரவுக்கு தடை விதிக்கிறேன்" என்றார். ஒரே அமர்வில் உள்ள இரு நீதிபதி களும் வெவ்வேறு தீர்ப்புகளை வழங்கியதால் யாகூப் மேமன் தூக்கிலிடப்படுவாரா என்ற கேள்வி எழுந்தது.

இந்நிலையில், உடனே உச்ச நீதிமன்ற நீதிபதி தீபக் மிஷ்ரா தலைமையில் மூன்று நீதிபதி கள் முன்பு கொண்ட அமர்வின் முன்பு யாகூப் மேமன் வழக்கு மறு நாளே விசாரணைக்கு வந்தது. ஜூலை 29 ஆம் திகதி "யாகூப் மேமனுக்கு அனைத்து வாய்ப்பு களும் வழங்கப்பட்டுவிட்டன. ஆகவே, தடா நீதிமன்றம் பிறப்பி த்த தூக்கிலிடும் உத்தரவுக்கு தடை யில்லை" என்று கூறி யாகூப் மேமன் வழக்கு தள்ளுபடி செய்ய ப்பட்டது.

தூக்குத்தண்டனை நிறைவே ற்றப்படுவதற்கு முதல் நாள் இந் தத் தீர்ப்பு வழங்கப்பட்டது. அதே தினத்தில் மஹாராஷ்டிரா ஆளு நருக்கு கொடுக்கப்பட்ட இரண்டா வது "கருணை மனுவை" நிராக ரித்தார். உச்சநீதிமன்ற தீர்ப்பு வழங்கப்பட்ட பிறகு உடனே இந்தியக் குடியரசுத் தலைவரு க்கு மறுபடியும் யாகூப் மேமன் தரப்பிலிருந்து கருணை மனு கொடுக்கப்பட்டது.

இந்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்குடன் அவசர ஆலோ சனை நடத்திய குடியரசுத் தலை வர் பிரணாப் முகர்ஜி அந்தக் கருணை மனுவை இரவு பத்து மணிக்கு நிராகரித்தார். உடனே தலைமை நீதிபதி தத்து முன்பு யாகூப் வழக்கறிஞர்கள் மீண்டும் ஒரு மனுவை தாக்கல் செய்தார் கள். அந்த மனுதான் நள்ளிரவு வரை அதே உச்சநீதிமன்ற நீதிபதி தீபக் மிஷ்ரா தலைமையிலான அமர்வு முன்பு விசாரிக்கப்பட்டு, யாகூப் மேமன் தூக்கிலிடுவதற் கான தடை நீக்கப்பட்டது. ஜூலை 30 ஆம் திகதி அதிகாலை யாகூப் மேமன் தூக்கிலிடப்பட்டார்.

நீதித்துறை, ஆட்சித்துறை இரண்டும் ஒருங்கிணைந்து செயற பட்ட மும்பை தொடர் குண்டு வெடிப்பு வழக்கில் சம்பந்தப்பட்ட யாகூப் மேமன் தூக்குத் தண் டனையை நிறைவேற்றியுள் ளது. அந்த விதத்தில் இந்த தூக் குத் தண்டனை உச்சநீதிமன்ற வரலாற்றிலும் சரி, ஆட்சித்துறை வரலாற்றிலும் சரி முக்கிய நிகழ் வாக அமைந்து விட்டது. தொடர் மும்பை குண்டு வெடிப்பில் பலி யான 250 இற்கும் மேற்பட்டவர் களுக்கு நீதி கிடைத்து விட்டது போன்ற மகிழ்ச்சி மஹாராஷ்டிர மாநிலத்தில் பாதிக்கப்பட்டவர்கள் மத்தியில் எதிரொலித்ததையும் மறுப்பதற்கில்லை.

இந்தத் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்ட பின்னர்தான் பிரதமர் நரேந்திர மோடி தமிழ கத்தில் உள்ள இராமேஸ்வரம் வந்தார். முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாமுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினார். அங்கு ஒரு மணி நேரத்துக்கும் மேலாக அமர்ந்திருந்த பிரதமர் மோடி, மறைந்த அணு விஞ் ஞானி அப்துல் கலாமுக்கு சோக மயமாக நின்று வணங்கி, அஞ்சலி செலுத்தி விட்டுப் புறப்பட்டார். "யாகூப் மேமன்" தூக்குத் தண் டனை கடும் விவாதத்தை கிளப்பி விட்டிருக்கிறது. இதற்கு முன்பு இந்தியாவில் இதே விவாதம் தலை தூக்கியிருக்கிறது.

இந்திய சட்டக் கமிஷன் கூட "தூக்குத் தண்டனை வேண்டுமா" என்பது பற்றி விரிவான ஆலோ சனை நடத்தி வருகிறது. அந்தக் கலந்துரையாடல் தொடங்கியத ற்கு வேறு காரணங்கள் உள்ளன. இதே இந்திய உச்ச நீதிமன்றத் தின் தலைமை நீதிபதியாக இரு ந்தார் சதாசிவம்.

தமிழகத்தைச் சேர்ந்தவ ரான அவர் 2014 ஜனவரி மாதம் 21 ஆம் திகதி "கருணை மனுக் களை தாமதமாக பரிசீலித்தார் கள்" என்பதை காரணமாகக் காட்டி ஒரே தீர்ப்பில் 15 பேரின் தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்றினார். இதன் அடிப்படையில் பிறகு ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப் பட்ட முருகன், சாந்தன், பேரறி வாளன் ஆகியோருக்கும் ஆயுள் தண்டனையாக குறைத்தார். அதைத் தொடர்ந்து பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த தேவந்தர் பால் சிங் புல்லருக்கு தூக்குத் தண்டனையை ஆயுள் தண் டனையாக குறைத்தார். இது எல்லாமே உச்சநீதிமன்றம் தூக் குத் தண்டனை விடயத்தில் வழங்கிய அதிரடித் தீர்ப்புகள். இப்படி 19 பேரின் தூக்குத் தண் டனை உச்சநீதிமன்றத்தாலேயே ஆயுள் தண்டனையாக குறைக் கப்பட்டதும் வரலாறு.

இப்போது தூக்குத் தண்ட னையை நிறைவேற்ற நள்ளிர வில் உச்சநீதிமன்றம் யாகூப் மேமனின் மனுவை விசாரித்து முடிவை அறிவித்ததும் வரலாறு. முன்பு உச்சநீதிமன்றமே 19 பேரின் தூக்குத் தண்டனையை ஆயுள்தண்டனையாக குறை த்தது என்பதால் தூக்குத் தண் டனை ஒழிப்புக்கு மக்கள் மத்தி யில் தனி மகத்துவம் கிடைத் தது. அதற்காகத்தான் இந்திய சட்ட ஆணையம் "தூக்குத் தண் டனையை தக்க வைக்க வேண் டுமா" என்று தீவிர ஆலோசனை யில் இறங்கியிருக்கிறது. இது போன்ற சந்தர்ப்பத்தில் நிறை வேற்றப்பட்ட யாகூப் மேமன் தூக்குத்தண்டனை இந்தியா வல் அந்த விவாதத்துக்கு மேலும் வலுச் சேர்த்திருக்கிறது. 1967 களில் "தூக்குத் தண்டனையை தக்க வைத்துக் கொள்ளலாம்" என்று அறிக்கை கொடுத்த இந் திய சட்டக் கமிஷன், இந்த முறை எந்த மாதிரி பரிந்துரைகளை வழங்கப் போகிறது என்பதைப் பொறுத்தே, தூக்குத் தண்டனை ஒழிக்கப்படுமா அல்லது தொட ருமா என்பது தெரிய வரும்.

ஆனால், உலக நாடுகளில் தூக்குத் தண்டனையை தக்க வைத்திருக்கும் 59 நாடுகளில் ஒன்றாக இருக்கும் இந்தியாவில் இந்த தண்டனை மனித உரி மைகளுக்கு எதிரானது என்ற எண்ணம்தான் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது என்பதே கள நிலைமை!

-இணையம்-

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெள்ளப்பெருக்கில் சிக்கி 100க்கு மேற்பட்டோர் பலி!

## 23 இலட்சம் பேர் பரிதவிப்பு





(கொல்கத்தா)

**இந்தியாவின் மேற்கு வங்காளம், ஒடிசா மற் றும் மணிப்பூர் மாநிலங்களில் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கில் சிக்கி 23 இலட்சம் மக்கள் தவித்து வரு கின்றனர். மழை, வெள்ளத்துக்கு 100 இற்கு மேற் பட்டோர் பலியாகியிருப்பதாக அஞ்சப்படுகிறது.**

அண்மையில் ஆந்திரா அருகே வங்கக்கடலில் உருவான 'கோமென்' புயலால் ஏற்பட்ட காற்றழுத்த தாழ்வுநிலை காரணமாக மேற்கு வங்காளம், ஒடிசா, மணிப்பூர், ஆந்திரா மாநிலங்களில் கடந்த வெள்ளிக்கிழமை முதல் தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது.

ஒடிசாவில் புவனேசுவரம், பலாசூர் மாவட்ட நதிகளில் வெள்ளம் கரை புரண்டு ஓடுகிறது. 10 கிராமங்கள் நீரில் அடியோடு மூழ்கி விட்டன. 600 கிராமங்களை வெள்ளம் சூழ்ந்துள்ளது. 5 லட்சம் மக்கள் வெள்ளத்தில் சிக்கி தவித்து வருகின்றனர். இவர்களை மீட்டு பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பி வைக்கும் பணியை மாநில அரசு முடுக்கிவிட்டு உள்ளது.

மேற்கு வங்காள மாநிலத்தில் இடைவிடாமல் பெய்து வரும் பலத்த மழையால் அவுரா, ஹூக்ளி, பர்த்வான், பன்குரா, தெற்கு 24 பர்கானா, முர்சிதாபாத் மற்றும் கிழக்கு மிட்னாபூர் உட்பட 12 மாவட்டங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. நேற்று முன்தினம் ஒரே நாளில் மட்டும் இந்த மாவட்டங்களில் 13 செ.மீ. மழை பெய்தது. மாநிலத்தில் பெரும்பாலான நதிகள் அபாய அளவைக் கடந்து வெள்ளம் ஓடுகிறது.

வெள்ளநீர் அதிகம் வருவதால் துர்காபூர் அணைக்கட்டில் இருந்து விநாடிக்கு 53 ஆயிரம் கன அடி நீர் திறந்து விடப்படுகிறது. இதனால் ஹூக்ளி மாவட்டத்தின் கனாகல், ஆரம்பாக் ஆகிய பகுதிகளில் ஏராளமான கிராமங்கள் வெள்ளத்தில் மிதக்கின்றன.

மாநிலத்தில் 6 ஆயிரம் கிராமங்கள் வெள்ளத்தால் சூழப்பட்டு 18 இலட்சம் பேர் வெள்ளத்தால் சிக்கி பரிதவித்து வருகின்றனர். தெற்கு கொல்கத்தா நகரின் பெரும் பகுதிகளையும் வெள்ளம் சூழ்ந்து இருக்கிறது.

12 மாவட்டங்களில் சாலைகள் துண்டிக்கப்பட்டு இருப்பதாலும், தண்டவாளங்கள் வெள்ளத்தில் மிதப்பதாலும் போக்குவரத்து முற்றிலுமாக பாதிக்கப்பட்டு இருக்கிறது.

வெள்ளத்தில் தவிப்பவர்களில் இதுவரை ஒரு லட்சத்து 20 ஆயிரம் பேர் மீட்கப்பட்டு நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கென மாநில அரசு 946 நிவாரண முகாம்களை அமைத்து இருக்கிறது. வெள்ளத்தில் சிக்கியவர்களை மீட்க இராணுவம் வரவழைக்கப்பட்டு இருக்கிறது.

மாநிலம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளதை அறிந்த முதலமைச்சர் மம்தா பானர்ஜி தனது இங்கிலாந்து பயணத்தை உடனடியாக முடித்துக் கொண்டு கொல்கத்தா திரும்பினார். பின்னர் நபன்னா நகரில் அவசர ஆலோசனையும் நடத்தினார். கனமழை, வெள்ளம் ஆகியவற்றுக்கு இதுவரை 75 பேர் பலியாகியமை உறுதிப் படுத்தப்பட்டுள்ளதாக மம்தா பான்ர்ஜி தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் வடக்கு 24 பர்கானா மாவட்டத்தில் மின்னல் தாக்கி 4 சிறுவர்கள் பலியாகினர். 4 பேர் படுகாயம் அடைந்தனர்.

மணிப்பூர் மாநிலத்தில் கனத்த மழைக்கு சாண்டெல் மாவட்டம், சவுமோல் கிராமத்தில் நிலச்சரிவில் சிக்கி 21 பேர் பலியானார்கள். இன்னும் ஏராளமானோரை காணவில்லை. இதனால் பலி எண்ணிக்கை அதிகரிக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. (3-7)

# அறிவித்தல்

## தேர்தல்கள் திணைக்களம்

**பாராளுமன்றத் தேர்தல் - 2015.08.17**

**தனியார் பிரிவுகளில் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு, தேசிய மட்டத்திலான தேர்தல்களின் போது சம்பளம் அல்லது சொந்த லீவுகள் இழப்பொன்றின்றி தமது வாக்கை அளிப்பதற்கு வசதியாக விடுமுறை வழங்குதல்.**

தமது வாக்கை அளிப்பதற்காக தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு விடுமுறை வழங்குவதற்காக தொழில்தருநர்கள் நடவடிக்கையெடுத்தல் வேண்டுமென 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 122 ஆம் பிரிவில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன் 2015.08.17 ஆம் திகதி நடாத்தப்படவுள்ள பாராளுமன்றத் தேர்தலின் போதும் அதை உரியவாறு நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது.

அரச பிரிவின் அலுவலர்களின் விஷேட விடுமுறைகள் தொடர்பான தாபன விதிக்கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் 12.3 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ளவாறு பாராளுமன்றத் தேர்தலுக்காக ஆகக் குறைந்தது 4 மணித்தியாலங்களெனவும், வாக்களிக்க செல்வதற்கு தேவைப்படுமெனக் கருதக்கூடிய தொடர்ச்சியான காலப்பகுதியொன்றுக்கு சம்பள இழப்பற்ற விஷேட விடுமுறை வழங்க வேண்டுமெனவும், குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆயினும், தனியார் பிரிவுகளில் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு எழுத்து மூலமான அத்தகைய விஷேட விடுமுறை வழங்குவது தொடர்பான விதிமுறையொன்று இல்லாததன் காரணமாக பெரும்பாலான தொழில்தருநர்கள் தனது தொழிலாளர்களுக்கு வாக்களிக்கச் செல்ல லீவு வழங்குவதில்லையென கடந்த கால பல தேர்தல்களின் போது முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளமையால் மேற்குறித்த விடயம் தொடர்பாக 2014.12.22 ஆம் திகதி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் தொழில், தொழில் உறவுகள் அமைச்சின் செயலாளர், தொழில் ஆணையாளர் நாயகம், தேர்தல்கள் ஆணையாளர் ஆகியோர் அழைக்கப்பட்டு ஆணைக்குழுவின் கௌரவத் தலைவர், கௌரவ ஆணையாளர்கள் மற்றும் சட்டச் செயலாளர் உள்ளிட்ட ஏனைய அலுவலர்களுடன் மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டிற்கிணங்க தனியார் பிரிவுகளில் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்குத் தேசிய மட்டத்திலான தேர்தலொன்றின் போது வாக்களிக்கச் செல்வதற்கும் திரும்பி வருவதற்கும் விடுமுறை வழங்குவதற்காக தூரம் மற்றும் காலம் ஆகியனவற்றுக்கிடையில் தொடர்புபடுத்தலொன்றைத் தயாரிக்குமாறு கௌரவ ஆணைக்குழுவின் அறிவித்தலுக்கிணங்க, கீழ்காணும் அட்டவணைக்கு இசைவாக தனியார் பிரிவுகளில் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு தமது வாக்கை அளிப்பதற்காக விடுமுறை வழங்க தொழில்தருநர்கள் நடவடிக்கையெடுத்தல் பொருத்தமாகுமெனத் தேர்தல்கள் திணைக்களத்தினால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

| வாக்களிப்பதற்காக கடமை நிலையத்திலிருந்து தனது வாக்கெடுப்பு நிலையத்திற்கு செல்ல வேண்டியுள்ள தூரளவு | வழங்க வேண்டிய ஆகக் குறைந்த விடுமுறைக் காலம் |
|---|---|
| கி.மீ. 40 அல்லது அதற்குக் குறைவாயின் | அரை நாள் |
| கி.மீ 40 க்கும் 100 க்கும் இடைப்பட்டதெனில் | ஒரு நாள் |
| கி.மீ 100 க்கும் 150 க்கும் இடைப்பட்டதெனில் | 1 ½ நாட்கள் |
| கி.மீ 150 க்கு அதிகமாயின் | 2 நாட்கள் |

மேலேயுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டிருப்பது வழங்க வேண்டிய ஆகக் குறைந்த காலமென்பதுடன் நாட்டிலுள்ள ஒரு சில வாக்காளர்கள் வாக்கெடுப்பு நிலையத்திற்குச் சென்று திரும்பி வருவதற்கு 3 நாட்கள் தேவைப்படக்கூடிய கணிசமானளவு இடங்களும் இருக்கின்றமையால் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு மூன்று நாட்கள் விடுமுறை வழங்க வேண்டியுள்ளதையும் கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

**இருப்பினும், இத்தேர்தலுக்கு முந்திய தினம் பெரும்பாலான தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு விடுமுறை தினமொன்றான ஞாயிற்றுக் கிழமை என்பதால், வாக்களிப்பதற்காக செல்வதற்கும் மற்றும் திரும்பி வருவதற்கும் தேவைப்படும் வேலை நாட்களின் எண்ணிக்கை வழமையான சந்தர்ப்பமொன்றைவிட குறைவானதென்பதால், வழமையான நிலைமையொன்றின் கீழ் இதற்காக மூன்று தினங்கள் தேவைப்படும் தொழிலிலீடுபட்டுள்ளவர்களுக்கு ஞாயிற்றுக் கிழமை ஓய்வு தினமொன்றெனில், இச்சந்தர்ப்பத்தின் போது அவர்கள் மூன்று வேலை நாட்கள் விடுமுறை பெறுவதிலிருந்து தவிர்ந்திருப்பார்களென தயவன்புடன் எதிர்பார்க்கப்படுகின்றது.**


இதன்போது, தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் எழுத்து மூலமாக விடுமுறை கோர வேண்டுமென்பதுடன், அனைத்து தொழில்தருநர்களும் விஷேட விடுமுறைக்காக விண்ணப்பிக்கின்றவர்களது விடுமுறை வழங்கப்படும் கால எல்லை தொடர்பானதுமான ஆவணமொன்றைத் தயாரித்து அதைக் கடமை நிலையத்தில் காட்சிப்படுத்தி வைக்கவும் வேண்டும்.

மேற்கூறப்பட்ட பரிந்துரைகளுக்கிணங்கியொழுகி தமது நிறுவனத்தில் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு வாக்களிக்கச் சென்று திரும்பி வருவதற்குப் போதுமானளவு விடுமுறையை வழங்குமாறு அனைத்து தொழில்தருநர்களிடமும் தயவன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

**தேர்தல்கள் செயலகம்,**
**சரண மாவத்தை, இராஜகிரிய.**
**2015.08.04**

**மஹிந்த தேசப்பிரிய,**
**தேர்தல் ஆணையாளர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் அப்பட்டமான பொய்கள் அம்பலம்

## எரான் விக்ரமரத்ன தெரிவிப்பு

(கொழும்பு)

நாடு பூராகவும் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படும் ராஜபக்ஷர்களின் அபிவிருத்திகள் சாதாரண மக்களுக்கு நன்மைகள் ஏற்படுத்தவில்லை என பிரதி அமைச்சர் எரான் விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

பிரசார நடவடிக்கைகளின் போது புளுமெண்டல் பகுதியில் துப்பாக்கி பிரயோகத்திற்கு இலக்காகி உயிரிழந்த சித்தி நசீமாவின் கணவரின் கருத்தில் நாடு பூராகவும் ராஜபக்ஷக்கள் செயற்படுத்திய அபிவிருத்தி திட்டங்கள் சாதாரண மக்களுக்கு நன்மை ஏற்படுத்தவில்லை என்பது உறுதியாகியுள்ளது.

சித்தி நசீமாவின் கணவர் பிரதமரை சந்தித்து வெளியிட்ட கருத்துக்களின் மூலம் இவை உறுதியாகின.

தாங்கள் வாழ்வது மற்றவர்களின் வீட்டில், அங்கும் குறைந்த அளவிலான வசதிகள் மாத்திரமே காணப்படுவதாகவும் இந்நபர் பிரதமரிடம் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, கடந்த காலத்தினுள் கொழும்பு - சொர்க்கம் என மகிந்த ராஜபக்ஷ மற்றும் கோத்தபாய ராஜபக்ஷ வெளியிட்ட கருத்துக்கள் அப்பட்டமான பொய்கள் இதன் மூலம் அம்பலமாகியுள்ளதென பிரதி அமைச்சர் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்தார். (இ-7)

# க.பொ.த. உயர்தர தேர்வினை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கான சில வழிமுறைகள்

க.பொ.த.உயர்தர மாணவ, மாணவிகளுக்கு தேர்வு இன்று ஆரம்பமாக விருக்கின்றது. பலருக்கு தேர்வு என்றாலே ஒருவித பய உணர்வு தொற்றிக்கொள்ளும். அப்படி ஏதும் அச்சப்பட தேவையில்லை. ஏனெனில் நீங்கள் எழுதும் முதல் தேர்வு இதுவல்ல. ஏற்கனவே க.பொ.த. சாதரணதர தேர்வை சந்தித்து இருக்கிறீர்கள். மேலும் இந்த ஆண்டு ஆரம்பம் முதலே தேர்வை எதிர்நோக்கி பல பயிற்சிகளை எடுத்து இருப்பீர்கள். இனி நீங்கள் தேர்வுக்கு தயாராக வேண்டுமே தவிர சந்தேகத்துக்கும், தயக்கத்துக்கும் இடம் கொடுக்கக் கூடாது.

பொதுவாக தேர்வுகள் மாணவர்களின் கல்வி அறிவை, பாடங்களை புரிந்து கொள்ளும் திறனை அறிந்து கொள்ளவே நடத்தப்படுகிறது. இது உங்கள் ஆளுமையின் ஒருவகையான அளவுகோலாகும். ஏனைய தேர்வுகளை விட இறுதித் தேர்வு என்பது எதிர்காலத்தை பிரகாசமாக்குவது. ஆகவே அந்த தேர்வை கசப்புணர்வோடு அணுகவும் கூடாது. தேர்வு வரை ஒவ்வொரு நாளும் என்ன படிக்க வேண்டும் என்பதை திட்டமிட்டு அதன்படியே படித்து முடிக்க வேண்டும். மேலும் தேர்வுக்கு முதல்நாள், தேர்வு நாள், தேர்வுக்கு பின் நாள் ஆகிய மூன்று நாட்களிலும் சுய மேலாண்மை (Self management) மிக அவசியம்.

தேர்வு எழுதும் மாணவர்கள் கடுமையாக படித்து தங்களை தயார்ப்படுத்தி வருகின்றனர். எவ்வளவு படித்தாலும் தேர்வின் போது ஏற்படும் பதற்றம், திடீர் ஞாபகமறதி போன்றவற்றால் மனதளவில் பாதிக்கப்படுகின்றனர். இதனால் பெறுபேறு குறைந்து விடுகிறது. தேர்வு நேரத்தில் ஏற்படும் இதுபோன்ற பிரச்சினைகளை கவனத்தில் கொண்டு, தீர்வு கண்டு படித்தால் கூடுதல் புள்ளிகளை பெறலாம். நன்றாக படித்து, அதிக புள்ளிகள் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் தேர்வு எழுதிய மாணவர்கள் கூட எதிர்பாராத வகையில் குறைந்த புள்ளிகளை பெறுகின்றனர். இதற்கு முக்கியகாரணம், ஒரு பாடத்தில் படித்த விடயங்கள் இன்னொரு பாடத்தில் குறுக்கீடு செய்வதே ஆகும். உதாரணமாக முதல் பாடத்தை பற்றிய கேள்விக்கு விடையளிக்கும் போது வேறு ஒரு பாடத்தின் பதிலை கலந்து எழுதி விடுகின்றனர். 'இதையே "குறுக்கீடு" என்கிறோம்.

குறிப்பிட்ட கேள்விக்கு சரியான விடை தெரிந்திருந்தும், பல விடைகளை கலந்து எழுதும் போது மதிப்பெண் குறைந்து விடுகிறது. மனப்பாடம் செய்து தேர்வு எழுதும் மாணவர்களுக்கு, இத்தகைய குறுக்கீடுகள் அதிகமாக ஏற்படுகிறது. பாடத்தை மனப்பாடம் செய்து, அப்படியே தேர்வின் போது வெளிப்படுத்துவதை காட்டிலும், பொருள் புரிந்து படிக்க வேண்டும். இவ்வாறு படிக்கும்போது எத்தகைய குறுக்கீடுகளும் மனதில் எழ வாய்ப்பில்லை. பதற்றத்துடன் படிக்காமல், மனதை அமைதி நிலையில் வைத்து படிக்க வேண்டும். தேர்வினை நன்றாக எழுதி முடிக்க சில வழிமுறைகள்

1. ஒவ்வொரு பாடத்தையும் படித்து முடித்ததும் சிறிது நேரம் ஓய்வெடுத்துக் கொண்டு பின், அடுத்த பாடத்தைப் படிக்க வேண்டும்.

2. ஒவ்வொரு கேள்விக்கான விடைகளையும் படிக்க ஆரம்பிக்கும்போது, இது எந்த பாடத்தின் கேள்வி, எத்தனையாவது கேள்வி என மனதுக்குள் ஒன்று அல்லது இரண்டு முறை கேட்டுக்கொள்ள வேண்டும். இதனால் கேள்வி பற்றிய விழிப்புணர்வு அதிகரிக்கிறது,

3. குறுக்கீடு எதுவும் மனதில் தோன்றாது. சிலருக்கு ஒரு வார்த்தையில் விடை அளித்தல், சரியான விடையை தேர்வு செய்தல் ஆகியவற்றுக்கான விடைகள் நன்றாக தெரிந்திருக்கும். ஆனால் தேர்வின் போது உடனடியாக ஞாபகத்துக்கு வராது, இந்த பாதிப்பு "நுனிநாக்கு தடை" என்றழைக்கப்படுகிறது. இவ்வாறான தடை ஏற்படும்போது, இந்த கேள்விக்கான விடை எனக்கு நன்றாக தெரியும். இதை எங்கு அமர்ந்து படித்தேன் என்று மனதுக்குள் திரும்பத் திரும்ப கேட்டுக் கொள்ள வேண்டும். எந்த இடத்தில் அமர்ந்து படித்தோம் என்பது ஞாபகத்துக்கு வரும்போது, விடையும் தானாக தெரிந்து விடும். இதற்கு "இடம் சார்ந்த நினைவு" என உளவியலில் கூறப்படுகிறது.

4. எண்ண அலைகளை சிதற விடக்கூடாது. எண்ண ஓட்டத்தை சிதற விடாமல் பாடங்களை பற்றியே அதிகளவில் சிந்திக்க வேண்டும். படித்ததை திரும்ப, திரும்ப மனதுக்குள் கூறி பார்த்துக் கொள்ள வேண்டும்.

5.ஞாபகதடங்கல் ஏற்படும் போது, உடனுக்குடன் புத்தகத்தை திறந்து பார்த்துக் கொள்ள வேண்டும். சந்தேகத்துடன் படிக்கக்கூடாது

6. ஆரோக்கியமான உணவு எடுத்துக் கொள்ளல் அவசியம். நாம் உண்ணும் உணவானது உடல் நிலையிலும், மன நிலையிலும் செல்வாக்குச் செலுத்துகின்றது.

7. தேர்வுக்கு முந்தைய நாட்களில் மட்டும் படிப்பது என்பது சில மாணவர்களிடையே பரவலாய் உள்ள ஒரு வழக்கம். கடைசி நேரத்தில் பதற்றப்பட்டு படிப்பது பயனற்றது. சிலர் இரவு முழுவதும் கண் விழித்து விடியும்வரை படிக்கின்றனர். இதுவும் பயனற்றது. இதனால் மூளைக்கு ஓய்வு இல்லாததால் அறிகை திறனை பாதித்து (Cognitive process) படித்தவற்றை மீண்டும் நினைவிற்கு அழைக்க முடியாமல் போகும்.




8. ஏற்கனவே படித்தவற்றை மீண்டும் படிப்பதற்கும் குறிப்புகளைப் பார்த்து உணர்வதற்கும் தேர்வுக்கு முந்தைய நாளை பயன்படுத்த வேண்டும்.

9. ஆரம்பத்தில் இருந்தே குறிப்புகள் எடுத்து படித்திருந்தால் அது இப்போது எளிமையாக இருக்கும். மீண்டும், எளிதில் நினைவுக்கு கொண்டுவரப் பயன்படும்.

10. தேர்வுக்கு முன்தினம் நீண்ட நேரம் கண்விழித்துப் படிக்கக்கூடாது. இது மறுநாள் தேர்வு எழுதும்போது சோர்வை ஏற்படுத்தலாம்.தேர்வுக்கு முன் தினம் வழக்கத்துக்கு முன்னதாக உறங்கச்சென்றுவிடுவது நல்லது. உடலிற்கும், மனதிற்கும் நல்ல ஓய்வு அவசியம், அப்போது தான் தேர்வின்போது மனம் சுறுசுறுப்பாக செயற்படும். உடலும், உடற்பாகங்களும் ஒத்துழைக்கும். இல்லாவிடில் தேர்வு மண்டபத்தில் வயிற்றை புரட்டுதல், மயக்கம், வியர்த்தல்,கண்எரிச்சல், உடல் சூடு, கைநடுக்கம் என்பன ஏற்பட வாய்ப்புண்டு.

11. தேர்வுக்கு தேவைப்படும் அனுமதி அட்டை, அடையாள அட்டை, பேனா, பென்சில், அளவுகோல் போன்றவற்றை மறவாமல் தயார்நிலையில் எடுத்து வைத்துக்கொள்ள வேண்டும்.

12. தேர்வு நாளன்று கவனம் முழுவதும் தேர்வு பாடத்தை ஒட்டியே இருக்க வேண்டும். கடினமான பாடத்தைப்பற்றிய எண்ணம், ஏனைய நடவடிக்கைகள், பொழுதுபோக்குகள் ஆகியவற்றை தவிர்க்க வேண்டும். நண்பர்களுடன் தேவையின்றி உரையாடுவதையும் தவிர்க்க வேண்டும்.

13. தேர்வு தொடங்கும் முன் கடைசி சில நிமிடம் நின்று கொண்டு புத்தகங்களை வேகமாக புரட்டிப்பார்ப்பது, வேகமாகப் படிப்பது, பரபரப்புடன் இருப்பது போன்றவற்றை தவிர்க்க வேண்டும். அப்படி நடந்து கொண்டால் உங்கள் கவனத்தில் சலனம் ஏற்பட்டு படித்தவை கூட மறந்துவிட நேரும். எனவே அமைதியாக இருப்பதுடன் கற்றவற்றை மனதிற்குள் நினைவுபடுத்திக் கொள்வதே நல்ல பயன் தரும்.

14. தேர்வின் போது நேரத்தை சரியாகக் கணக்கிட்டு அனைத்து வினாக்களுக்கும் விடை எழுத வேண்டும். தேர்வு நடைபெறும் நாளன்று தேர்வு நடைபெறும் இடத்துக்கு உரிய நேரத்துக்கு முன்னதாகவே சென்றுவிட வேண்டும். கால தாமதம் தேர்வு எழுதும் மாணவர்களுக்கு வீண் பதற்றத்தை ஏற்படுத்திவிடும்.



கலாநிதி.க.கஜவிந்தன்.
சிரேஷ்ட உளவியல் விரிவுரையாளர்
மெய்யியல் - உளவியல் துறை
யாழ்.பல்கலைக்கழகம்

15. தேர்வு முடிந்தபிறகு நடந்து முடிந்த தேர்வு பற்றி அதிக கவனம் செலுத்தக்கூடாது.நண்பர்களுடன் அதுபற்றி உரையாடக் கூடாது. இதனால் வீண் குழப்பம் ஏற்பட்டுவிடும். விடுபட்ட கேள்விகள் பற்றி மீண்டும் சிந்தித்து குழம்புவதால் ஒன்றும் பயன் இல்லை. முடிந்து போன ஒன்றைப் பற்றி பேசுவது பயனற்றது என்பதை உணர வேண்டும். எனவே அடுத்த தேர்வுக்கான பாடத்தை படிப்பதில் முழு கவனத்தையும் செலுத்த வேண்டும்.

இறுதியாக நீங்கள் எவ்வளவு தான் படித்தாலும் பரீட்சை மண்டபத்தில் உள்ள உங்கள் மனநிலையே உங்கள் பெறுபேற்றினை தீர்மானிக்கின்றன. குறிப்பாக நீங்கள் வினாக்கள் பற்றி எடுக்கும் முடிவுகள், நம்பிக்கையுடன் எழுதி முடித்தல், மனதை ஒருமுகப்படுத்துதல், ஏனையவர்கள் என்ன செய்கிறார்கள் என்ற மனப்போக்கை கட்டுப்படுத்தல், உங்கள் ஆக்கத்திறன், உடல்-உள நலத்தைப் பற்றிய நேர்முகமான எண்ணம் முக்கிய இடம் வகிக்கிறது. நீங்கள் உங்கள் தன்நம்பிக்கையை தவறவிட்டால் அது தேர்வு எழுதுவதைப் பாதித்து பெறுபேறுகளை குறைக்கும்.தேர்வினை தன்நம்பிக்கையுடன் எதிர் கொள்ளுங்கள் உங்கள் வாழ்க்கை பிரகாசமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெற்பயிரில் தத்திநோய்த்தாக்கம்

## நெல்மணிகள் மடிந்து போவதாக விவசாயிகள் கவலை

(கண்டாவளை)

**சிறுபோக நெற்செய்கை அறுவடை மேற்கொள்கின்ற நிலையில் காணப்படுகின்ற போதிலும் அவற்றில் தத்தி எனும் நோய்த்தாக்கம் மிகமோசமாக பரவி நெற்பயிர்களை பாதிப்படையச் செய்வதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.**

இந்தத் தத்திநோய்த்தாக்கம் முரசுமோட்டை, கல்மடுநகர் ஆகிய கிராமங்களில் காணப்படுகின்றநெற்செய்கைபண்ணப்பட்டவயல்களில் பெருமளவு தாக்கத்தை ஏற்படுத்தி யுள்ளதாக விவசாயிகளால் சுட்டிக்காட்டப் படுகின்றது.

இந்நோய்த் தாக்கத்தை கட்டுப் படுத்துவதற்காக விவசாயிகளால் விவசாயத் திணைக்களத்தினால் சிபார்சு செய்யப்பட்ட கிருமிநாசினிகள் விசிறப்பட்டபோதிலும் அத னைக் கட்டுப்படுத்த முடியாமல் போகின் றமையால் நெல்மணிகள் பூரணமாக முதிர்ச்சி அடைய முன்பே அறுவடைசெய்ய வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் உள்ளனர்.

இம்முறை சிறுபோக நெற்செய்கை மேற்கொள்வதற்கு சீரான காலநிலை,போதியளவு நீர் வசதி என்பன கிடைக்கப்பெற்றும் அறுவடைக் காலத்தில் இந்நோய்த்தாக்கத்தினால் மேற்படி கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் தாம் எதிர்பார்த்த விளைச்சலைப் பெற முடியாமல் இருப்பதாக தெரிவிக்கின்றனர்.

விவசாயத் திணைக்களத்தினால் கட்டுப் படுத்துவதற்கு சிபார்சு செய்யப்பட்ட மருந்தினை விசிறியும் இந்நோயைப் பூரண கட்டுப் பாட்டினுள் கொண்டுவர முடியவில்லையென அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இம்முறை தாம் எதிர்பார்த்த விளைச்சலைப் பெற்றுள்ள போதிலும் இந்நோய்த் தாக்கத்தினால் நெல்மணிகள் மடிந்து போவதால் கூடிய இலாபத்தை பெறமுடியாமல் போகும் என அவர்கள் கவலை தெரி விக்கின் றனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ் விடயத்தில் கூடிய கவனமெடுத்து விவசாயிகளின் நலனில் அக்கறை கொள்ளவேண்டுமென பாதிக்கப்பட்ட விவசாயிகளால் கோரிக்கை விடப்படுகின்றது. (2-263)




## சிறந்த விவசாயிகள் தெரிவிற்கான போட்டிகளுக்கு விண்ணப்பம் கோரல்

(வவுனியா)

விவசாயத்திணைக்கள வருடாந்த நிதியொதுக்கீட்டின் கீழ் மாகாண விவசாய திணைக் களத்தின் வழிகாட்டலிற்கமைய சிறந்த விவசாயிகள் தெரிவிற்கான போட்டிக்கு வவுனியா பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் தெ.யோகேஸ்வரனினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.


இப்போட்டியானது இரு தலைப்பின் கீழ் நடைபெறும்.

அதாவது பப்பாசி ஏற்றுமதியில் சிறந்த பப்பாசி செய்கையாளர்களுக்கும் வயல் நிலங்களில் மாற்றீட்டு பயிர்ச்செய்கையாளர் களுக்கும் எனும் தொனிப்பொருளில் இடம் பெறவுள்ளது. இப்போட்டியில் வெற்றியீட்டும் விவசாயிகள் விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

இப் போட்டிக்கான விண்ணப்பப்படிவங்களை வவுனியா பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் (விரிவாக்கம்) அலுவலகத்திலும் பிரதேச விவசாயப் போதனாசிரியர் காரியாலயத்திலும் பெற்றுக்கொள்ள முடியும்.

விண்ணப்ப முடிவுத்திகதி எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமையாகும்.

விண்ணப்பப் படிவங்களைப் பெற்று பூரணப்படுத்த எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக் கிழமைக்கு முன்னர் பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் (விரிவாக்கம்)அலுவலகம், வவுனியா எனும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும் என வவுனியா மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் (விரிவாக்கம்) அறிவித்துள்ளார். (2)




இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தினால் உயர்த்தும் கரங்கள் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி பிரதேசத்தில் தந்தையை இழந்த தேவையுடைய குடும்பம் ஒன்றிற்கு 15 ஆயிரம் ரூபா பெறுமதியான புதிய துவிச்சக்கரவண்டி ஒன்று அண்மையில் வழங்கி வைக்கப்பட்டதை படத்தில் காணலாம்.

## தாரகை முத்தமிழ் மன்ற நிர்வாகத் தெரிவு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் 1964 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஸ்ரார் நாடக மன்றம் ஆரம்பிக்கப்பட்டது.

முத்தமிழ் கலை, கலாசார பண்பாட்டு விழுமியங்களை கட்டிக்காத்து கலைத்துறைகளில் பல சாதனைகளையும் விருதுகளையும் பெற்றிருந்தது.

வன்னியில் இடம்பெற்று முடிந்த சூழ்நிலையால் இம்மன்றம் பெறுமதியான சொத்துக்களையும் இழந்து இடம்பெயர்ந்திருந்தது.

மக்களின் மீள்குடியமர்வின் பின்னர் இக் கலாமன்றத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு கடந்த முதலாம் திகதி முற்பகல் 10 மணியளவில் கிளிநொச்சி திருநகரில் அமைந்துள்ள மன்றத்தின் பணிமனையில் கிளிநொச்சி முத்துமாரி அம்மன் நாடக மன்றத் தலைவர் அப்பச்சி வல்லிபுரம் தலைமையில் புதிய நிர்வாகத் தெரிவு நடத்தப்பட்டது.

இதன் தலைவராக அலோசியஸ் ஞானப் பிரகாசம், செயலாளராக நாராயணப் பிள்ளை வேலாயுதம், பொருளாளராக தேவராசா, தியாகராசா, உப-தலைவராக மாணிக்கம் சிவபாலன், துணைச் செயலாளராக வேதநாயகம் மேரிஜோசப் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

அத்துடன் நான்கு உறுப்பினர்களும் தெரிவாகினர். இதன் இறுதியில் ஸ்ரார் நாடக மன்றம் என்ற பெயரினை கிளிநொச்சி தாரகை முத்தமிழ் கலாமன்றம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக ஏகமனதாக அனைவராலும் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-254)

## சந்தைகளில் மீன்களின் விலை திடீர் அதிகரிப்பு

(முள்ளியவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் பொதுச் சந்தைகளில் மீன்களின் விலைகள் அதிகரிக் கப்பட்டு வியாபாரிகளால் விற்பனை செய்யப் பட்டு வருவதாக மக்கள் கவலை தெரிவிக் கின்றனர்.

குறிப்பாக கடற்கரைகளில் கடற்தொழிலாளர்களிடமிருந்து குறைந்த விலைகளில் மீன் களை கொள்வனவு செய்து குறைந்தது ஒரு கிலோவிற்கு நூறு ரூபா முதல் இருநூறு ரூபா வரை இலாபம் வைத்து விற்பனை செய்யப்படுவதாக மக்கள் சுட்டிக்காட்டு கின்றனர்.

இதனை தவிர்ப்பதற்கு முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங் கங்களின் சமாசத்தினர் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் அமைந்துள்ள பொதுச் சந்தைகளில் நியாய விலை மீன் விற்பனை நிலையங்கள் அமைக்கப்பட வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுக் கின்றனர்.

அத்துடன் வியாபாரிகளினால் பொதுச் சந்தைகளில் உடன் மீன்கள் எனக்கூறி இரண்டு மூன்று நாட்களாக ஐஸ்சில் இடப் பட்ட மீன்கள் விற்பனை செய்யப்படுவதாக மக்கள் குறை கூறுகின்றனர். (2-302)

# கல்லாறு சுனாமி குடியிருப்பு திட்ட மக்கள் குடிநீரைப் பெறுவதற்கு அலைகின்றனர்

## முரசுமோட்டை பிரதேச சபை நடவடிக்கை எடுக்குமா?

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட கரைச்சி பிரதேச சபையின் முரசுமோட்டை பிரதேச சபை உப அலுவலகத்திற்குட்பட்ட கல்லாறு சுனாமி குடியிருப்பு திட்டத்தில் வாழ்கின்ற கிராம மக்கள் தமக்கு வேண்டிய குடிநீரினை அன்றாடம் பெற்றுக் கொள்வதில் பாரிய பிரச்சினையை எதிர்நோக்கி வருகின்றனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

நாட்டில் இடம்பெற்று முடிந்த யுத்தத்தின் பின்னர் இக்குடியிருப்பில் 250 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீள்குடியேறியதை தொடர்ந்து இம்மக்களுக்கான குடிநீர் வசதியினை கரைச்சி பிரதேச சபையின் உப-அலுவலகமாகிய முரசுமோட்டை பிரதேச சபை மேற்கொண்டது.

இதேவேளை முரசுமோட்டை பிரதேச சபையினால் அக் குடியிருப்பு பகுதியின் பொது இடங்களில் தண்ணீர்த்தாங்கி வைக் கப்பட்டு பவுசர் மூலம் குடிநீர் நிரப்பப்பட்டு வந்தது.

இந்த குடிநீரினையே அக் குடியிருப்பு மக்கள் குடிப்பதற்கு பயன்படுத்தி வந்தனர்.

இதேவேளை தற்போது 2 வருடங்களாக பிரதேச சபையினால் அக்குடியிருப்பு மக்களுக்கான குடிநீர் வழங்கப்படாது இடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இதனால் அக்குடியிருப்பு மக்கள் குடிநீரினை பெற்றுக்கொள்வதில் மிகுந்த சிரமத்தினை எதிர்நோக்கி வந்தனர்.

இதன் காரணமாக அக்குடியிருப்பு மக்கள் தமக்கு வேண்டிய குடிநீரினை பெற்றுக்கொள்வதற்கு 150 ரூபா தொடக்கம் 200 ரூபா பணத்தினை செலுத்தி 210 லீற்றர் கொள்ளவுடைய தண்ணீர்ப் போத்தல்களை 3 நாளைக்கு ஒருமுறை பெற்று பயன்படுத்தி வந்தனர்.

ஏனெனில் அக் குடியிருப்பு நிலத்தடி நீர் இயற்கையிலேயே உவர் நீர் என்பதால் குழாய் க் கிணறுகள் அமைத்தும் எந்தவித பயன்பாடும் இல்லை.

இதனால் குடிநீருக்காக குழாய்க் கிணறுகளை கூட அம்மக்கள் அமைக்க முடியாது காணப்படுகின்றனர். இருப்பினும் ஒரு சில மக்களால் அமைக்கப்பட்ட குழாய்க்கிணறுகள் ஊடாக உவர்நீர் மட்டுமே வெளியேறுகின்றது.

இக் குடியிருப்பில் வசிக்கின்ற மக்கள் பொருளாதார ரீதியில் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்ந்து வருவதால் தமக்கு வேண்டிய குடிநீரினை பணம் செலுத்தி பெற்றுக் கொள்வதில் மிகுந்த சிரமத்தினை எதிர்நோக்கி வருகின்றனர்.

எனவே இம்மக்களுக்கான தேவையான குடிநீரினை வழங்குவதற்கு கரைச்சி பிரதேச சபையின் உப அலுவலமாகிய முரசுமோட்டை பிரதேச சபை உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென அக் குடியிருப்பு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (2-5-64)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டைமானாறு வி.கழக பெண்களுக்கான உதைபந்து

## சென்.ஜோசப் வெற்றி

யாழ்.மாவட்ட ரீதியாக மகளிர் அணிகளை ஒருங்கிணைத்து முதல் முறையாக தொண்டைமானாறு கலைவாணி விளையாட்டுக்கழகம் நடத்தும் பெண்களுக்கான மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி கடந்த சனிக்கிழமை ஆரம்பமானது.

இதில் நவிண்டில் கலைமதி வி.க. எதிர்த்து மாதகல் சென்.ஜோசப் வி.க. மோதியது.

இவ்விரு அணிகளும் ஆட்டத்தை மிகவும் சிறந்த முறையில் தொடர்ந்தன. ஆட்டத்தின் பாதி நேரத்திற்குள் சென்.ஜோசப் வி.க.2 கோல்களைப் பெற்று முன்னிலையில் இருந்தன. பாதி நேரத்திற்குப் பின்மீண்டும் ஆட்டத்தைத் தொடர்ந்த சென்.ஜோசப் வி.க. மீண்டும்2 கோல் களைப் பெற்று வெற்றி கொண்டது.

இப்போட்டியின் சிறந்த வீராங்கனையாக சென்.ஜோசப் விளையாட்டுக்கழகத்தின் அன்யசிந்தா தெரிவானார். (கு)





## வேலணை மகளிரை வீழ்த்தியது நக்கீரன் மகளிர் அணி



தொண்டைமானாறு கலைவாணி விளையாட்டுக்கழகத்தின் மகளிருக்கான உதைபந்தாட்டப் போட்டி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதில் வேலணை மகளிர் அணியை (சன் ஸ்ரார்) எதிர்த்து நக்கீரன் மகளிர் அணி மோதியது.

இவ் ஆட்டத்தை மிகவும் சிறந்த முறையில் இரு அணிகளும் தொடர்ந்தன. பாதி நேர ஆட்டத்திற்குள் நக்கீரன் வி.க. ஒரு கோல்களைப் பெற்று நக்கீரன் மகளிர் அணி வெற்றி பெற்றுக்கொண்டது.

போட்டியின் சிறந்த வீராங்கனையாக நக்கீரன் வி.கழக வீராங்கனை தெரிவு செய்யப்பட்டு அவருக்கான கௌரவ விருது வழங்கப்பட்டது. அதனை கலைவாணி சன சமூக நிலைய உறுப்பினர் அருந்தவராசா வழங்கிவைத்தார்.

போட்டியில் தமது திறமையை வெளிக்காட்டிய வேலணை சன்ஸ்ரார் மகளிர் அணியினரை ஊக்குவிக்கும் முகமாக அவர்களும் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். அதனை கலைவாணி சனசமூக நிர்வாக உறுப்பினர் பிறேமதாஸ் வழங்கி வைத்தார். (கு)











## ஜே.பி.எல்.வெற்றிக்கிண்ணம் கே.சீ.சீ.சீ.அணி வெற்றி

யாழ்.பிறீமியர் வெற்றிக் கிண்ணத்திற்கான சுற்றுப்போட்டியின் பிரிவு 1 இல் நடைபெற்ற போட்டியில் கே.சீ.சீ.சீ. அணி யாழ். ஜொனியன்ஸ் அணியை 2 இலக்குகளால் வெற்றிபெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். ஜொனியன்ஸ் அணி 18.3 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 92 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

அன்புஜன்-12, காண்டீபன்-32 ஓட்டங்களைப் பெற்றனர். பவிதரன்-01, பார்த்தீபன்-02, சாம்பவன்-05, பிரதீஸ்-01 இலக்கினைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கே.சீ.சீ.சீ. அணி 18.3 ஓவர்களில் 8 இலக்குகளை இழந்து 93 ஓட்ட ங்களைப் பெற்றது. சத்யன்-10, யனுதாஸ்-31, வல்லவன் ஆட்டமிழக்காது 10 ஓட்டங்களைப் பெற்றனர். லவேந்திரா-03, லோகதீஸ்வரன்-02, அகிலன்-03 இலக்குகளைக் கைப்பற்றினர்.

இப்போட்டியின் மூலம் கே.சீ.சீ.சீ. அணி 4.12 புள்ளிகளையும் யாழ்.ஜொனியன்ஸ் அணி [illegible] றுக்கொண்டனர். (கு)

## யங்கம்பன்ஸ் வெற்றி

பொலிகை பாரதி விளையாட்டுக் கழகம் நடத்திவரும் யாழ். மாவட்ட ரீதியிலான 7 நபர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பாரதி மைதானத்தில் இடம்பெற்றது.

இவ் ஆட்டத்தில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மோதிய கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. யங்கம்பன்ஸ் சார்பாக தர்சன்-2, பிரகாஸ்-2 [illegible] கோல்களையும் போட்டனர். (கு)

## இன்றைய போட்டிகள்

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அனுமதியுடன் நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண ரீதியிலான உதைபந்தாட்டப் போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ள முதலாவது போட்டியில் பாடுமீன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து குரோஸ்டார் (மன்னார்) விளையாட்டுக்கழகமும் மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ள இரண்டாவது போட்டியில் புனித அந்தோனியார் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சென். தோமஸ் யூத் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன. (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டு செய்யும் அடிமை!
உனக்கு சுதந்திர நினைவோடா?
- பாரதியார்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தேர்தல் பிரசாரத்தில் தொடரும் இனவாத உசுப்பேற்றல்

தேர்தல் பிரசாரங்களின் போது அரசியல்வாதிகள் பல்வேறுபட்ட தந்திரோபாயங்களை பயன்படுத்துவர். சில தந்திரோபாயங்களை முறியடிக்க முடியாமல் மறுதரப்புகள் தவிக்கும். சிலருக்கு தேர்தல் பிரசாரம் கைவந்த கலை. தேர்தல் பிரசாரங்களின் போது உண்மைக்குப் புறம்பான கருத்துக்களையும் சில அரசியல்வாதிகள் முன்வைப்பர். வாக்களிப்பு நேரத்தில் கூட மக்கள் தங்கள் முடிவுகளை மாற்றிக் கொண்ட சம்பவங்களும் நிறையவே நடந்துள்ளன.

தமிழகத்தில் கடந்த முறை நடந்த சட்டமன்ற தேர்தலில்போது நடிகர் ரஜனிகாந் வாக்களித்து விட்டு வெளியே வருகிறார். அந்தக் கணப்பொழுதில் ரஜனிகாந்தை சூழ்ந்து கொண்ட ஊடகவியலாளர்கள் யாருக்கு வாக்களித்தீர்கள் என்று நடிகர் ரஜனிகாந்திடம் கேட்க, ஊழலுக்கு எதிராக வாக்களித்தேன் என்றார்.

கலைஞர் கருணாநிதியின் ஆட்சி இருந்தபோது, ரஜனிகாந் இப்படிக் கூறியதுதான் செல்வி ஜெயலலிதாவுக்கு எதிரான ஊடகங்கள் தவிர்ந்த அனைத்து ஊடகங்களும் ரஜனிகாந் கூறியதை திரும்பத் திரும்ப ஒளிபரப்ப நிலைமை அடியோடு மாறியது.

செல்வி ஜெயலலிதாவின் அ.தி.மு.க அமோக வெற்றி பெற ஜெயலலிதா முதலமைச்சரானார்.

தேர்தல் தினத்தன்று ரஜனிகாந் கூறிய ஒரு வார்த்தை சூழ்நிலையை அடியோடு மாற்றி விட்டது. இப்படியாக தேர்தலின் முடிவுகள் பற்றி எதிர்வு கூற முடியாது. எதுவும் எந்நேரமும் நடக்கலாம்.

இருந்தும் இலங்கையைப் பொறுத்தவரை தேர்தல் பிரசாரங்களில் தெற்கிலும் வடக்கிலும் ஒரு பொதுவான பிரசாரம் கடைப்பிடிக்கப்படுவதைக் காணமுடியும்.

தென்பகுதியில் அரசியல்வாதிகளின் பிரதான பிரசார கோஷம் தமிழர்களுக்கு அதிகமான உரிமை கொடுக்கமாட்டோம் என்பதாக இருக்கும்.

13க்கு அப்பால் எந்தத் தீர்வும் கிடையாது என்பது தமிழர்களுக்கு எதிராகவும்-சிங்களவர்களுக்கு ஆதரவானதுமான ஒரு விடயப் பொருளாகக் காட்டப்படும்.

இலங்கையில் எத்தனையோ அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படவேண்டி இருந்த போதிலும் தமிழர்களின் விடயத்தை முதன்மைப்படுத்தி பிரசாரம் செய்யாவிட்டால் சிங்களக் கட்சிகளுக்குப் பத்தியப்பட மாட்டாது.

இதேபோல் வடக்குக் கிழக்கு உள்ளிட்ட தமிழர் தாயகத்திலும் இனப்பிரச்சினைக்கான தீர்வு முதன்மை பெற்றிருக்கும். அவர்கள் 13இற்கு அப்பால் எதுவும் தரமுடியாது என்று கூறினால் நம்மவர்கள் 13ஐ ஏற்க மாட்டோம்; அதற்கும் அப்பால்... அதற்கும் அப்பால்... 2016இல் தீர்வை அடைந்தே தீருவோம் என்பர்.

ஆக, தேர்தல் பிரசாரம் என்பது தெற்கிலும் வடக்கிலும் சிங்களவர்-தமிழர் என்ற பகுப்பு நிலையிலேயே பிரசாரம் இடம்பெறுகிறது.

என்ன செய்வது? இனவாதத்தைத் தூண்டி, மக்களை இனவாதத்தினூடாக உசுப்பேத்தி வாக்குகளைப் பெற்றுக் கொள்ளுகின்ற கொடுமைகள் நீங்கி, இலங்கையை கல்வியில், முதலீடுகளில், விவ சாய உற்பத்திகளில் அபிவிருத்தி அடையச் செய்வோம் என்ற பிரசாரம் என்றைக்கு இந்த நாட்டில் ஒலிக்கிறதோ அன்றைக்குத்தான் இலங்கைத் திருநாட்டில் அமைதியும் சமாதானமும் ஏற்படும்.

# எங்கள் உரிமையை தட்டிப் பறிக்க முயற்சி

## மனோ கணேசன் குற்றச்சாட்டு

கொழும்பு மாவட்டத்தில் இரண்டு தமிழ் எம்பிக்களை தெரிவு செய்து கொள்ளும் எங்கள் உரிமையை தட்டி பறிக்க ஒருசிலர் முயல்கின்றனர் என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் பட்டியலில் போட்டியிடும் ஒரு பெரும்பான்மையின அரசியல்வாதி, எனது இலக்கத்தையும், தனது இலக்கத்தையும், பிரதமர் ரணிலின் இலக்கத்தையும் ஒன்றாக போட்டு, ஒரு துண்டு பிரசுரத்தை, "வட கொழும்பு தமிழ் இளைஞர் சங்கம்" என்ற பெயரில் அச்சிட்டு வெளியிட்டு உள்ளார்.

என் அனுமதி இல்லாமல், என் படத்தையும், என் விருப்பு வாக்கு இலக்கத்தையும் குறிப்பிட்டு, வெளியிடப்பட்டுள்ள இந்த பிரசுரம் தொடர்பில் நாம் தேர்தல் ஆணையாளரிடமும், தேர்தல்கள் தொடர்பான பொலிஸ் அலுவலகத்திலும் முறையீடு செய்ய உள்ளோம்.

ஒரு இலட்சம் பேருக்கு ஒரு எம்பி என்பதே ஒரு அண்ணளவான கணக்கு. கொழும்பு மாவட்டத்தில் சுமார் மூன்று இலட்சம் தமிழ் மக்கள் வாழ்கிறோம்.

எனவே எங்களுக்கு இங்கே மூன்று தமிழ் எம்பிக்களை பெற்றுக்கொள்ள உரிமை உண்டு.

எனினும், பல இனங்கள்சேர்ந்து வாழும் கொழும்பில் சிறுபான்மையாக வாழும் எமது நல்லெண்ணத்தை வெளிப்படுத்தும் முகமாக, நாம் இரண்டு தமிழ் வேட்பாளர்களையே களமிறக்கி உள்ளோம்.

அத்துடன் தேசிய இன ஐக்கியத்தை எடுத்துக்காட்டும் முகமாக எமது மூன்றாம் விருப்பு வாக்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் 15ஆம் இலக்கத்துக்கு வழங்கவும் கோருகிறோம்.

எங்கள் தமிழின உரிமையை உறுதிப்படுத்தும்முகமாக எங்கள்முதல்இரண்டு விருப்பு வாக்குகளையும் 8ஆம், 9 ஆம் இலக்கங்களுக்கு வழங்க கோருகிறோம்.

மிகவும் நியாயமான எங்கள் இந்த நிலைப்பாட்டை, புரிந்து கொள்ளாத பேராசை கொண்ட ஒரு பேரினவாத சக்தி, போலி மோசடி பிரசுரங்களை, போலி மோசடி பெயரில் வெளியிட்டு, அதில் என் பெயரையும் பயன்படுத்தி தமிழ் வாக்காளர்களை தவறாக வழி நடத்த முயல்கிறது.

இவர்களின் நோக்கம் எமது இரண்டாம் விருப்பு வாக்கில் கைவைப்பதாகும். அதாவது, கொழும்பில் இரண்டு தமிழ் எம்பிக்களை பெற்றுக் கொள்ளும் எங்கள் உரிமையை தட்டி பறிப்பதாகும்.

இதை தமிழ் மக்கள் புரிந்து கொண்டு திடமான மனதுடன் எமது பொது சின்னமான யானை சின்னத்துக்கும், 8, 9, 15 ஆகிய விருப்புவாக்கு இலக்கங்களுக்கும் வாக்களித்து, இந்த பேரினவாத சதியாளர்களை முறியடிக்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நானும், குகவரதனும், நுவரெலியாவில் திகாம்பரமும், ராதாகிருஷ்ணனும், திலகரும், கண்டியில் வேலுகுமாரும், பதுளையில் அரவிந்த குமாரும், இரத்தினபுரியில் சந்திர குமாரும், கம்பஹாவில் சசிகுமாரும் வெற்றி பெற வேண்டும்.

இதுதான் யானை சின்னத்தில் போட்டியிடும் தமிழ் முற்போக்கு கூட்டணி வேட்பாளர் பட்டியல். ஆறு மாவட்டம், ஒன்பது வேட்பாளர்கள்.

நாம் ஒரு பலமிக்க அணியாக அடுத்த பாராளுமன்றத்தில் பணியாற்ற விளைகிறோம். இதை குழப்ப எவருக்கும் இடம் கொடுக்க முடியாது.

கொழும்பிலே, மூன்று தமிழ் வேட்பாளர்களை களமிறக்கி இருக்கலாம். அதை நாம் செய்யவில்லை. அதற்கு பல காரணங்கள் உள்ளன.

தமிழின உரிமை கோரிக்கைகளை எவருக்கும் தலைவணங்காமல் முன்வைக்கும் அதேவேளை எமது சகோதர இனங்களையும் அரவணைத்து அரசியல் செய்வது எனது தலைமைத்துவ அடையாளமாகும்.

இது வடக்கு கிழக்கு அல்ல. இங்கே நாங்கள் சிறுபான்மையாக வாழ்கிறோம்.

எனவேதான் எமது மக்கள் தொடர்பாக, குறிப்பாக கொழும்பில் வாழும் தமிழ் மக்கள் தொடர்பில், நான் மிகவும் பொறுப்புடன் செயற்படுகிறேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## ஒன்றுகூடுமாறு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் 1987-1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பாதுகாப்பற்ற புகையிரதக் கடவைக் காவலாளிகளாக தொழில்புரிந்த புகையிரதக் கடவை தொழிலாளர்கள் அனைவரையும் நாளை புதன்கிழமை காலை 8 மணிக்கு புங்கன்குளம் புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் ஒன்றுகூடுமாறு வடமாகாண புகையிரதக் கடவை காப்பாளர் சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

நாட்டில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக மேற்படி தொழிலை இழந்த வடமாகாணத்திற்குட்பட்ட புகையிரதக் கடவை தொழிலாளர்கள் அனைவரும் இவ் ஒன்றுகூடலில் கலந்து கொள்வதால் இழந்த தொழிலை மீண்டும் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

எனவே மேற்படி ஒன்றுகூடலுக்கு தகுதியான புகையிரதக் கடவைத் தொழிலாளர்கள் அனைவரும் தொழில் சம்பந்தமாக தங்களிடம் உள்ள அனைத்து ஆவணங்களுடனும் சமுகமளிக்க வேண்டுமென மேற்படி சங்கத்தினர் அறிவித்துள்ளனர். (இ-5)

## பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு வாசுதேவ குருக்கள் ஆசிகள்

(யாழ்ப்பாணம்)



தமிழர் தம் பெரும் சொத்தாக என்றுமே உள்ளது கல்வியாகும். எவராலும் அபகரிக்க முடியாத பெரும் சொத்தாகவும் ஈழத்தமிழினத்தை உலகச் செய்வதுமாக எமது கல்விப் பாரம்பரியம் உள்ளது.

அதற்கு அடித்தளமிடுவதாக அமைந்தது உயர்தரப் பரீட்சை. இப் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கு ஆசி கூறி வாழ்த்துக்கள் தெரிவிப்பதுடன் இறைவன் துணை நிற்கவும் பிரார்த்திக்கின்றேன்.


இம் மாணவர்கள் எதிர்காலத்தில் பெரும் கல்வியியலாளர்களாகவும் வெற்றியாளர்களாகவும் உயர்ந்து எமது தாய் மண்ணையும் இனத்தையும் பெருமைப்படுத்த வேண்டும். அதற்கு பெற்றோர்கள், சமூகத்தினர், ஆதரவு கொடுக்க வேண்டும்.

ஆலயத்தின் ஒலிபெருக்கிகளை கட்டுப்படுத்தியும் தேர்தல் மற்றும் மரண அறிவித்தல்கள் போன்றவற்றை அகால நேரங்களில் அறிவிப்புச் செய்து மாணவர்களை பரீட்சைக்கு தோற்றும் மனநிலையில் இருந்து குழப்பாமல் பரீட்சை நிலையங்களுக்கு அருகில் அமைதியை ஏற்படுத்தும் வண்ணம் நாம் ஒத்துழைக்க வேண்டும்.

எமது பிள்ளைகளின் கல்விப் பணி சிறப்பாக அமைய இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

சுவாமி சிவஸ்ரீ சபா.வாசுதேவ குருக்கள்
அமைப்பாளர் வீணாகான குருபீடம்
குரு மஹா சன்னிதானம்

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள்



எண்ணங்களுக்கு ஏற்ப நாம் உருவாகிறோம். ஆகவே என்ன நினைக்கிறாய் என்பதில் எச்சரிக்கையாக இரு.

நான் அளிக்கவேண்டிய செய்தியொன்று உள்ளது. அதை நான் எனது பாணியிலேயே கொடுப்பேன். எனது செய்தியை இந்துமயமாக்கவும் ஆக்கமாட்டேன். கிறிஸ்தவமயமாகவும் ஆக்கமாட்டேன். உலகிலுள்ள வேறு எந்த மதத்தின் மயமாகவும் ஆக்கமாட்டேன். என் மயம் மட்டுமே ஆக்குவேன். அவ்வளவுதான். சுதந்திரம், முக்தி -இதுதான் என் மதம்.

ஒவ்வொருவரிடமும் எல்லையற்ற ஆற்றல் பொதிந்திருக்கிறது. பராசக்தியிடம் பிரார்த்தனை செய். அந்த ஆற்றல் உன்னிடம் வெளிப்படும்.

இளமையும் அழகும் மறைந்து போகும். ஆயுளும் செல்வமும் மறைந்து போகும். மலைகளுங்கூட உடைந்து தூளாகிவிடும். நட்பும் அன்பும் மறைந்து போகும். உண்மை ஒன்றே நிலைத்து நிற்கும். உண்மை வடிவான இறைவா, நீயே, நீ மட்டுமே எனக்கு வழிகாட்டியாக இருந்தருள்வாய்!

அம்மா காளி! இடியோசையைக் குரலாகக் கொண்டவளே, முடிவற்ற கால ரூபினியே, எதிர்க்க இயலாத ஆற்றலின் வடிவமே. நீயே சக்தி. என்னில் எழுந்தருள்வாய்.

கல்வி, அறிவு, செல்வம்,ஆட்பலம், வலிமை, தைரியம் என்று இயற்கை நமக்குக் கொடுக்கின்ற எல்லாமே பிறருக்குக் கொடுப்பதற்காகத்தான். நாம் இதை அடிக்கடி மறக்கிறோம்.

இதுதான் பேராபத்து. மேலைநாட்டு மோகம் என்னை எந்த அளவிற்குப் பிடித்திருக்கிறது தெரியுமா? ஒரு காரியம் நல்லதா கெட்டதா, என்பது அறிவாலோ விவேகத்தாலோ சாஸ்திரங்களைக்கொண்டோ தீர்மானிக்கப்படவில்லை. என்னென்ன கருத்துக்களை, என்னென்ன பழக்கங்களை வெள்ளைக்காரன் புகழ்கிறானோ அவை நல்லவை. அவன் எதைக் குறைகூறுகிறானோ அது கெட்டது. அந்தோ! இதைவிட மடத்தனம் வேறென்ன இருக்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மாற்றுவலுவுடையவர் என்பதற்காக

# போதைப்பொருள் குற்றவாளிக்கு பிணை வழங்க முடியாது-நீதிபதி

### குற்றம் புரிவதற்கு லைசன்ஸ் வழங்கியதாகிவிடும் எனவும் சுட்டிக்காட்டு

**கிளிநொச்சியில் போதைப் பொருளாகிய கஞ்சா விற்பனை செய்தார் மற்றும் உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் உள்ள மாற்று வலுவுடைய ஒருவருக்கு, அவருடைய இயலாமைக்காகப் பிணை வழங்கினால், அது அவர்களுக்கு மேலும் குற்றம் புரிவதற்கு லைசன்ஸ் வழங்கியதாகிவிடும் என கூறி நீதிபதி இளஞ்செழியன் பிணை வழங்க மறுத்துள்ளார்.**

போதைப் பொருள் கட்டளைச் சட்டத்தின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்ட மாற்று வலுவுடைய ஒருவர் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தின் கட்டளைக்கமைவாக விளக்கமறியலில் இருந்த வருகின்றார்.

இவரைப் பிணையில் வெளியில் எடுப்பதற்கான பிணை மனுவொன்று யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுவைத் தாக்கல் செய்த சட்டத்தரணி, நீதிமன்றத்தில் முன்வைத்த விண்ணப்பத்தின்போது தெரிவித்ததாவது, போதைப் பொருள் சட்டமானது, விதிவிலக்கான சந்தர்ப்பத்தில் மட்டும், போதைப் பொருள் சம்பந்தப்பட்ட வழக்கொன்றில் மேல் நீதிமன்றம் பிணை வழங்கலாம் என்று பரிந்துரை செய்கின்றது.

இதற்கு அமைவாக இந்தப் பிணை மனுத்தாக்கல் செய்யப்படுகின்றது. இந்த வழக்கில் சம்பந்தப்பட்டவர் மாற்றுவலுவுடைய ஒரு நபர். அதனால், அவர் இயலாதவராக இருக்கின்றார். அவருடைய இயலாமை காரணமாக அநுராதபுரம் சிறைச்சாலையில் சொல்லொணாத சிரமங்களுக்கும் கஷ்டங்களுக்கும் ஆளாகியிருக்கின்றார். அவருடைய மனைவி, குழந்தைகள் உணவுக்கு வழியின்றி சிரமப்படுகின்றார்கள். எனவே, அவர்களின் கஷ்ட நிலைமையைக் கருத்திற்கொண்டு, போதைப் பொருள் சட்டத்தின் 83 ஆம் பிரிவின் கீழ் பரிந்துரைக்கப்பட்டவாறு, மாற்று வலுவுடையவர் என்ற ரீதியில் அவருடைய இயலாமையை விதிவிலக்கான காரணமாகக் கொண்டு அவருக்குப் பிணை வழங்க வேண்டும் என கோரினார்.

நீதிமன்றத்தில் அப்போது முன்னிலையாகியிருந்த அரச சட்டத்தரணி, போதைப் பொருள் குற்றச்சாட்டில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அந்த நபருக்குப் பிணை வழங்கக் கூடாது என ஆட்சேபனை தெரிவித்தார். அத்துடன், தனது ஆட்சேபனையை எழுத்து வடிவில் ஒரு மனுவாக நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான கால அவகாசத்தையும் தவணையையும் கோரினார்.

இதனையடுத்து, நீதிபதி இளஞ்செழியன் பிணை மனுத் தாக்கல் செய்த சட்டத்தரணியை நோக்கி சில வினாக்களை வினவினார்.

போதைப் பொருள் குற்றம் புரிபவர்களுக்கு அங்கவீனம் என்பது பிணை விடுவதற்கு ஒரு சலுகையா? அல்லது தகைமையா? விதிவிலக்கான காரணம் என இதனை ஒரு தகுதியாகக் கொள்ள முடியுமா? அங்கவீனமுடைய ஒருவர் போதைப்பொருள் குற்றம் புரிந்து இன்னுமொரு நபரை அங்கவீனராக ஆக்கலாமா? ஏனென்றால், போதைப் பொருளினால் கண்கள் தெரியாமல் போகின்றன. உடற் பாகங்கள் வலுவிழக்கின்றன. மூளை செயலிழக்கின்றது. இறுதியில் மரணம் சம்பவிக்கின்றது. எனவே, அங்கவீனர் என்ற காரணத்திற்காக போதைப் பொருள் உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ள இந்த நபருக்கு சட்டப்படி பிணை வழங்க முடியுமா? இதைத்தானா விதிவிலக்கான சந்தர்ப்பம் அல்லது விதிவிலக்கான காரணம் என்று சட்டம் பரிந்துரை செய்கின்றது? என நீதிபதி வினவினார்.

அத்துடன், கிளிநொச்சியில் போதைப் பொருள் மற்றும் கசிப்பு விற்பனை, கசிப்பு உற்பத்தி, சமூக விரோதக் குற்றச் செயல்கள் அதிகரித்திருக்கின்றன. அவற்றை அடியோடு ஒழிக்கும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டிருக்கின்றனர். அதற்காக அத்தகைய குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களை அவர்கள் கைது செய்து சட்டரீதியாக நடவடிக்கை எடுத்து வருகின்றார்கள். இத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில், விளக்கமறியலில் உள்ள ஒருவருக்கு, பிணை வழங்குவதற்கு அவருடைய அங்கவீனத்தை ஒரு சலுகையா அல்லது தகைமையாக எவ்வாறு கொள்ள முடியும்? என நீதிபதி இளஞ்செழியன் வினவினார்.

அப்போது அந்த அங்கவீன நபருக்காக ஆஜராகயிருந்த சட்டத்தரணி, அங்கவீனம் காரணமாக அவரால் சிறை வாழ்க்கை வாழ முடியாதுள்ளது. அவர் பல வேதனைகளை அங்கு அனுபவித்து வருகின்றார். அவருடைய மனைவியும் குழந்தைகளும் நீதிமன்றத்திற்கு வந்துள்ளார்கள். நாளாந்த சீவியத்திற்கு வழியின்றி அவர்கள் கஷ்டப்படுகின்றார்கள். எனவே, அங்கவீனம் காரணமாக அந்த நபர் சிறையில் படும் கஷ்டங்கள் அதேபோன்று அவருடைய மனைவி, பிள்ளைகளின் நிலைமை என்பவற்றைக் கருத்திற் கொண்டு பிணை வழங்க வேண்டும் என்று மீண்டும் நீதிபதியிடம் விண்ணப்பம் செய்தார்.

சந்தேக நபருக்காக நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்ட விண்ணப்பத்தையும், அரச சட்டத்தரணி முன்வைத்த கால அவகாச கோரிக்கையையும் பரிசீலனை செய்த நீதிபதி இளஞ்செழியன், இந்த பிணை மனுத தொடர்பான விசாரணைகள் செப்டெம்பர் மாதம் 16 ஆம் திகதி நடைபெறும் எனக் கூறி வழக்கை ஒத்திவைத்தார். (இ-7)

# பொதுத் தேர்தலில் நம்பிக்கையில்லை

### ருத்திரகுமாரன் தெரிவிப்பு



அடுத்த மாதம் நடைபெறவுள்ள இலங்கையின் பொதுத்தேர்தலில் தமக்கு நம்பிக்கையில்லை என்று நாடு கடந்த தமிழீழ பிரதமர் வி.ருத்திரகுமாரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ருத்திரகுமாரன் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

இலங்கையின் நாடாளுமன்றத்துக்குள் தமிழர்கள் செல்வதனால், சிங்கள பௌத்த இனவாத சிந்தனைகளை மாற்றமுடியாது என்று ருத்திரகுமாரன் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் நாடாளுமன்றமே தொடர்ந்தும் சிங்கள இனவாதத்தை முன்கொண்டு செல்வதை தமிழர்கள் அறிவார்கள்.

நாடாளுமன்றத்தில் 6 ஆவது அரசியல் அமைப்பை ஏற்றுக்கொண்டு சத்தியப் பிரமாணம் செய்வதன் மூலம் தமிழர்களின் கருத்து சுதந்திரத்துக்கு தடை விதிக்கப்படுகிறது.

நாடாளுமன்றத்தின் மூலம் சிங்கள அரசாங்கங்கள், சிங்கள பௌத்த பெரும்பான்மையினரை பாதுகாக்கின்றன.

இந்தநிலையில் தமிழர்கள் மத்தியில் நம்பிக்கையூட்டலை ஏற்படுத்துவதன் அடிப்படையில் 2016இற்கு முன்னர் இனப்பிரச்சினைக்கு தீர்வைக் காண தமிழ்த்தலைவர்கள் முயலவேண்டும் என்றும் ருத்திரகுமாரன் தெரிவித்துள்ளார். (இ-7)


## பாராளுமன்றத் தேர்தல் 2015

வன்னி தேர்தல் தொகுதி



ஈழமக்களின் இயல்பான வாழ்விற்காய்...

(சி-339)



திரு. இ.சாள்ஸ் நிர்மலநாதன்

தொழிலதிபர் , பிரஜைகள் குழு உபதலைவர்

இலங்கை தமிழரசுக் கட்சி

(தமிழ் தேசிய கூட்டமைப்பு)

வன்னி தேர்தல் தொகுதி மக்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிள்ளைகளுக்கு...

க்குவது பெற்றோர்களின் கைகளில் உள்ளது. முன்னைய காலங்களில் பெற்றோர்கள் பிள்ளைகளின் வாழ்க்கைக்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள். ஆனால் இன்றைய காலத்தில் அவ்வாறான நிலை அருகி வருகின்றது.

சமயம் என்பது எங்கள் எல்லோரையும் நல்வழிப்படுத்துகின்றது. ஆனால் எமது சைவ சமயத்தை எமது பிள்ளைகளுக்கு கற்பிப்பதில் கூடிய அக்கறை செலுத்துவதில்லை. சைவ சமயத்தை கற்பிக்கின்றோம். ஆனால் எந்த வகையில் அதை பயன்படுத்த வேண்டும் என்பது பற்றி நாம் கற்பிக்க தவறியுள்ளோம்.

எனவே அறநெறி பாடசாலைகளை அமைத்து சைவ சமயத்தை எமது பிள்ளைகள் ஒழுங்காக கற்று பயன்பெறுவதற்கு இந்து மாமன்றம், இந்துசமய பெரியோர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன் எமது பல்கலைக்கழகத்தில் எமது பாரம்பரிய கலைகளை கற்பதற்குரிய பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

## ஆசிரியர் என்னை...

புதிய அரசாங்கம் இலவச கல்வியை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கும். இலவச கல்வி முறையை மேலும் வலுப்படுத்தி, நாட்டின் பிள்ளைகளை புதிய தொழில்நுட்பத்துடன் மேலும் முன்னோக்கிச் செல்ல அரசாங்கம் என்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

நல்லவை, சிறப்பானவை மாணவர்களுக்கு கிடைப்பது போல வர்த்தக சமூகத்தில் கெட்டவைகளையும் பெற்றுக்கொள்ள பிள்ளைகள் முயற்சிக்கின்றனர். அது தவறாகும். எனவே கெட்டவைகளை பிள்ளைகள் தவிர்த்துக் கொள்ளவேண்டும்.

நான் படித்த தோப்பாவெவ பாடசாலையின் ஆசிரியர்கள் என்னை எந்தளவுக்கு பிரம்புகளால் அடித்துள்ளனர் என்பது எனக்கு நினைவில் உள்ளது. அடிக்கும் போது வகுப்பில் பிள்ளைகள் சத்தமிடுவார்கள்.

அப்போது அதனை பார்த்து கொண்டிருந்த பாட சாலை அதிபர் கூட என்னை பிரம்பு உடையும் வரை அடித்திருக்கிறார். ஆனால் வீட்டுக்கு சென்று நான் ஒருவார்த்தை கூட சொல்லவில்லை. கூறினால், அதனை விட அதிகமாக அடி வாங்க வேண்டி வரும் என்று நான் அறிந்திருந்தேன்.

என்மீது எந்த தவறும் இல்லையென்றாலும் ஆசிரியர் அடித்தார் என்பதற்காக எனது பெற்றோர் பொலிஸ் நிலையத்திற்கு செல்ல மாட்டார்கள். வேறு சட்டத்தையும் நாடமாட்டார்கள் என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## அச்சுறுத்தப்பட்டால்...

ற்பாடுகள் தேர்தல் சட்ட விதிகளை மீறும் செயலாகும் என தெரிவித்துள்ள தேர்தல்கள் ஆணையாளர், வாக்களிப்பு சுமுகமாக நடைபெறுவதற்கு கட்சிகள், ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்களை ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

வாக்காளர்கள் எவ்வித அச்சமும் சிரமும் இன்றி சுதந்திரமாக தமது வாக்குகளை அளிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு நேற்றைய தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## தேசிய அரசாங்கத்தை...

ளார்.

மேலும் எதிர்வரும் 17-ம் திகதி தேர்தலில் தோல்வியைத் தழுவுவது உறுதியாகியுள்ள காரணத்தினால் எதிர்க்கட்சிகள் போலிப் பிரசாரத்தில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவித்துள்ள கிரியெல்ல, இதன் ஓர் கட்டமாகவே அண்மையில் புளுமெண்டலில் தாக்குதல் நடத்தப்பட்டது என தெரிவித்துள்ளார். (செ-12)

## பிரிவினை...

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் 61 சிவில் அமைப்புக்கள் நேற்றைய தினம புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றை கைச்சாத்திட்டபோது இத்னைத் தெரிவித்துள்ளார். ஐந்து நிபந்தனைகளின் அடிப்படையில் இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

19-ம் திருத்தச் சட்டத்தின் குறைபாடுகளை களைதல், தேசிய பாதுகாப்பை வலுப்படுத்தல், மெய்யான பொருளாதார நிவாரணத்தை மக்களுக்கு அளித்தல், பௌத்த வழிபாட்டுத் தலங்களை பாதுகாத்தல், உள்நாட்டு உற்பத்தியை மையமாகக் கொண்ட பொருளாதாரத்தை உருவாக்குதல் ஆகியனவே இந்த நிபந்தனைகளாகும்.

ஹலால் பிரச்சினை, அலுத்கம சம்பவம் போன்ற பிரச்சினைகள் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டுமென சிவில் அமைப்புக்கள் கோரியுள்ளன.

சிங்கள-முஸ்லிம் மக்களுக்கு இடையில் முரண்பாடு ஏற்படக் காரணமாக இருந்த இந்த சம்பவத்துடன் தொடர்புடைய நபர்கள் தண்டிக்கப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கு தவிர்ந்த புதிய நாடு ஒன்றை ரணில் விக்கிரமசிங்க உருவாக்குவார் எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சமஷ்டி ஆட்சி முறைமைக்கு ரணில் இணங்கியுள்ளதாகவும் மகிந்த குற்றஞ்சாட்டியுள்ளார்.

வடக்கு கிழக்கில் சமஷ்டி முறைமை ஆட்சி நிறுவப்பட்டால் அந்தப் பகுதிகளை மீளவும் பெற்றுக்கொள்ள முடியாத நிலைமை ஏற்படும் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மேலும் நாட்டை விரும்பாத டொலர்களுக்கு வேலை செய்யும் சிவில் அமைப்புகளுக்கு மத்தியில் உண்மையில் நாட்டை நேசிக்கும் தேசிய அமைப்பு இருப்பது மகிழ்ச்சி என முன்னாள் ஜனாதிபதியும் குருநாகல் மாவட்ட வேட்பாளருமாகிய மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (செ-11)

## சகோதரியை...

வரைக் காட்டி, அவர் தனது மூத்த சகோதரன் என்றும், அவர் தன்னை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியதாகவும், அதனைக் கண்ட தனது தந்தையார், தன்னை வன்புணர்வுக்கு உட்படுத்தியதற்காக, தனது சகோதரனை அடித்ததாகவும் தனது சாட்சியத்தில் அந்தப் பெண் தெரிவித்தார்.

இதனையடுத்து எதிரி, தான் பாலியல் வன்புணர்வு குற்றம் செய்ததை நீதிமன்றத்தில் ஒப்புக்கொண்டார்.

அப்போது எதிரி தரப்பில் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த சட்டத்தரணி, குற்றச் செயல் இடம்பெற்றபோது, எதிரிக்கு 16 வயது. இந்த வழக்கின் விசாரணை காலத்தில் அவர் 3 வருடங்கள் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். அத்துடன், பதினாறு வயதுக்கும் 18 வயதுக்கும் இடைப்பட்ட பதின்பாராயமுடைய ஆண் மகன் ஒருவர் பாலியல் வன்புணர்வில் ஈடுபட்டால், அவருக்கு தண்டனை குறைப்பு உள்ளது என்று சுட்டிக் காட்டி, எதிரிக்கு குறைந்த பட்ச தண்டனை வழங்க வேண்டும் என விண்ணப்பம் செய்தார்.

ஆனால் அரச சட்டத்தரணி திருமதி நளினி சுபாகரன், சொந்த சகோதரி மீது பாலியல் குற்றம் புரிந்த எதிரிக்கு அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டும் என நீதிபதியிடம் கோரினார்.

அத்துடன். பாதிக்கப்பட்ட பெண் சத்தியப் பிரமாணத்தின் அடிப்படையிலேயே, தனக்கு நேர்ந்த குற்றச்செயல் குறித்து, சாட்சியமளித்துள்ளார். கூடப்பிறந்த சகோதரன் தன்னை வன்புணர்வுக்கு உட்படுத்தியதாகவும் அவர் தெளிவாக சாட்சியமளித்துள்ளார். இதனையடுத்தே, எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளார். இந்த குற்றத்திற்கு பத்து ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்க வேண்டும் என்று சட்டம் பரிந்துரைக்கின்றது. குறைந்தபட்ச தண்டனை பரிந்துரைக்கப்படவில்லை. எனவே, எதிரிக்கு அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டும் என்று நீதிமன்றத்தில் சமர்ப்பணம் செய்தார்.

இதனையடுத்து இந்த வழக்கில் தீர்ப்பு வழங்கிய நீதிபதி இளஞ்செழியன் தனது தீர்ப்பில் தெரிவித்ததாவது:

இந்த வழக்கில் பாதிக்கப்பட்டவரும், குற்றம் சுமத்தப்பட்டவரும் கூடப் பிறந்த சகோதரர்கள். எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளார். பாதிக்கப்பட்ட [illegible] தரன் தன்னை [illegible] டுத்தினார் என்று நீதிமன்றத்தில் அளித்த சாட்சியத்தில் தெரிவித்துள்ளார்.

விசாரணை நடைபெற்ற போது, எதிரி தடுத்து வைக்கப்பட்டிருந்த 3 ஆண்டுகள் விளக்கமறியல் காலமும் கவனத்திற் கொள்ளப்படுகின்றது. எதிரி 16 வயதிலேயே குற்றம் புரிந்தார் என்பதும் கவனத்தில் எடுக்கப்படுகின்றது. இருப்பினும் கூடப் பிறந்த சகோதரியை காட்டுமிராண்டித்தனமாக வன்புணர்வு செய்ததைக் குற்றச் செயலாகவே மன்று கருதுகின்றது. குற்றம் புரிந்தபோத எதிரி 16 வயது சிறுவன் என்பதால் அவருக்கு 5 ஆண்டுகள் கடூழியச்சிறைத்தண்டனை விதிக்கப்படுகின்றது என்றார் நீதிபதி இளஞ்செழியன்.

அத்துடன் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு, எதிரி 25 ஆயிரம் ரூபாய் நட்டஈடு செலுத்த வேண்டும் என்றும், தண்டப்பணமாக, அவர் ஐயாயிரம் ரூபா செலுத்த வேண்டும் என்றும் நீதிபதி இளஞ்செழியன் தீர்ப்பளித்துள்ளார். (செ-4)

## ஜனநாயக....

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச எழுதிய போர் இல்லாத நாடு என்ற புத்தக வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

வெள்ளை வான் உள்ளிட்ட நல்லாட்சியின பொய்கள் இன்று வெளியாவதை காணக் கூடியதாக இருக்கிறது. மேலும் பாதாள உலகக் கோஷ்டிகள் எங்களுடையது எனக் கூறினார்கள் இன்று அந்த உண்மையும் வெளியாகியுள்ளது. அன்று இது தொடர்பில் பேசிய சிவில் சமூகத்தினர் மற்றும் சமயத் தலைவர்கள் இன்று வாய் திறக்காமல் இருப்பதை அவதானிக்க முடிகிறது. விமல் வீரவனசவை இனவாதி எனவும், மதவாதி எனவும் கூறினார்கள். கடந்த 30 வருடங்களாக யுத்தம் ஒன்று நீடித்தது. சரியான காரணம் அல்லது தெளிவில்லாமல் இந்த யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. மகிந்த ராஜபக்ஷவின் தலைமையின் கீழ் யுத்தத்தை வெற்றிகொள்வோம் என இராணுவத்தினருக்கும், ஊடகங்கள் ஊடாக மக்களுக்கும் தெளிவுபடுத்தினோம். இறுதியில் வெற்றியும் பெற்றோம். அதன் பின்னர் யாழ்ப்பாணம் முழுமையாக இராணுவத்தினரின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. மேலும் தேவையில்லாமல் பாதுகாப்பு படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த காணிகளை தமிழ் மக்களுக்கு வழங்கினோம்.

மேலும் நாட்டின் பாதுகாப்பு கருதி சில காணிகளில் முப்படையினர் நிலைநிறுத்தப்பட்டனர். ஆனால் இன்று அரசியல் நோக்கம் கருதி அனைத்து காணிகளும் விடுவிக்கப்படுகின்றன. நாங்கள் இந்த நாட்டில் சுதந்திரத்தை அனைத்து மக்களுக்கும் பகிர்ந்தளித்தோம். குறிப்பாக வடக்கு மக்களுக்கும் இது சென்றடைந்தது. வடக்கு மக்களுக்கு மகிந்த ராஜபக்ஷவை போல் ஜனநாயக உரிமைகளை வழங்கிய வேறு ஒரு தலைவர் இருக்க முடியாது. அதனோடு இணைந்ததாக நாட்டின் பாதுகாப்பு குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது. ஆகவேதான் கடந்த ஐந்து வருடங்களில் எவ்வித அசம்பாவிதங்களும் நடைபெறவில்லை. என அவர் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## தபால் மூலமாக...

மான வாக்குப்பதிவு நேற்றைய தினம் சுமுகமான முறையில் நடைபெற்றது.

9 கோட்ட கல்வி அலுவலகங்களிலும் 5 வலயக்கல்வி அலுவலகங்களிலும் வாக்குப் பதிவு நடைபெற்றது.

பொலிஸார் மற்றும் ஆசிரியர்கள் நேற்றைய தினம் தமது வாக்குகளை பதிவு செய்துள்ளனர்.

நாளை 5 ஆம் திகதியும் நாளை மறுதினம் 6 ஆம் திகதியும் தபால் மூலவாக்களிப்பு நடைபெறவுள்ளது.

தபால் மூலம் வாக்களிப்பதற்கு யாழ். மாவட்ட தேர்தல் தொகுதியில் 15 ஆயிரத்து 13 பேர் தகுதி பெற்றுள்ளார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)






**காரைநகர் வியாவில்பதி ஆதிஷேத்திரம்**
**திருவருள்மிகு பூரணா புஷ்கலா சமேத ஹரிஹரபுத்ர**
**ஐயப்ப சுவாமி தேவஸ்தானம்**
**திவ்ய மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2015**

**கிரியாகால நிகழ்வுகள்**

| | |
|---|---|
| ஆடி 19ஆம்நாள் 04.08.2015 செவ்வாய்க்கிழமை | மாலை 6.00 மணிக்கு கணபதி பூஜை, மாலை 7.00 மணிக்கு அனுக்ஞை, கிராமசாந்தி, வாஸ்து சாந்தி, மிருத்சங்கிரணம் |
| ஆடி 20 ம் நாள் 05.08.2015 புதன்கிழமை | காலை 7.00 மணிக்கு அபிஷேகம், விசேடபூஜை, 10.00 மணிக்கு வசந்தமண்டப பூஜை, 11.00 மணிக்கு கொடியேற்றம், நவசக்தி ஆவாகனம், மாலை 6.00 மணிக்கு மஹா சாஸ்தா யாகாரம்பம் |
| ஆடி 27 ம் நாள் 12.08.2015 புதன்கிழமை | மாலை 5.00 மணிக்கு வேட்டைத்திருவிழா, இரவு 8.00 மணிக்கு வசந்தமண்டப பூஜை, சகோபுர உற்சவம் |
| ஆடி 28 ம் நாள் 13.08.2015 வியாழக்கிழமை | காலை 6.00 மணிக்கு அபிஷேகம், விசேட பூஜை, 8.00 மணிக்கு வசந்த மண்டப பூஜை, 10.00 மணிக்கு இரதோற்சவம், 12.00 மணிக்கு பச்சை சாற்றி இரத அவரோகணம், பிராயச்சித்த அபிஷேகம். |
| ஆடி 29 ம் நாள் 14.08.2015 வெள்ளிக்கிழமை | ஆடி அமாவாசை விரதம், காலை 6.00 மணிக்கு அபிஷேகம், விசேட பூஜை, 8.00 மணிக்கு வசந்த மண்டபப் பூஜை , தீர்த்தோற்சவம், மகாயாக அபிஷேகம், பூஜை, மாலை கொடியிறக்கம், சந்தி விசர்சனம், மௌன உற்சவம், ஆச்சார்ய உற்சவம், அருளுரை. |
| ஆடி 30 ம் நாள் 15.08.2015 சனிக்கிழமை | மாலை 7.00 மணிக்கு ஊஞ்சல், உள் வீதி உற்சவம், திருக்கல்யாணம், வெளி வீதி உற்சவம் |
| ஆடி 31 ம் நாள் 16.08.2015 ஞாயிற்றுக்கிழமை | காலை10.00 மணிக்கு பிராயச்சித்த அபிஷேகம், மாலை 5.00 மணிக்கு வைரவர் பொங்கல், பூஜை வழிபாடு. |

ஆலய குரு
பிரம்மஸ்ரீ சு.சுஜீவசர்மா
பிரம்மஸ்ரீ சு.ராஜிதசர்மா
(காரைநகர்)

தேவஸ்தான பிரதம குரு
சிவாகமரத்னகர சிவாகம கிரியாகலாநிதி
ஸ்ரீ விஸ்ணுஸ்ரீ.க.ச.சோமாஸ்கந்தக் குருக்கள்
(வரதராஜப் பெருமாள் கோவில்,பொன்னாலை)

சர்வபோதகம்
சக்தி உபாசகர்
சிவஸ்ரீ.நா.ஞானசம்பந்தக்குருக்கள்
(மணற்காடு)

சர்வாசாதகம்
மகாதேவாக் குருக்கள்
இணுவில் குருகுல அதிபர்

சர்வாலங்காரம்
சிவஸ்ரீ சு.ப. கணேசராஜக் குருக்கள்
(நல்லூர், சிவன் கோவில்)

ஒலி ஒளி அமைப்பு
மகேஸ் குழுவினர்
(காரைநகர்)

மங்கள வாத்தியம்
காரை கணேஸ்
புதல்வர்கள் (காரைநகர்)

விளம்பர அனுசரணை-கஜமுகன் ஹாட்வெயர்
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2833, 021 222 7144

இங்ஙனம்
ஆலய நிர்வாக சபை

(சீ-1739)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சங்கக்கார போன்ற ஒரு கிரிக்கெட் வீரரை இலங்கை அணி பெற்றிருப்பது அதிர்ஷ்டமே

## வி.வி.எஸ்.லக்ஷ்மன்



இலங்கையின் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும், நட்சத்திர துடுப்பாட்டக்காரருமான குமார் சங்கக்கார பற்றி வி.வி.எஸ்.லக்ஷ்மன் மனம் திறந்து பேசியுள்ளார்.

ஹோலி தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது.

இந்தியாவுக்கு எதிரான இந்த டெஸ்ட் தொடர் சங்கக்காரவிற்கு கடைசி தொடராக அமையும்.

அவர் ஏற்கெனவே இந்த தொடரோடு டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறப் போவதாக தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் சங்கக்கார பற்றி இந்திய அணியின் முன்னாள் துடுப்பாட்டக்காரரான வி.வி.எஸ்.லக்ஷ்மன் ஒரு நிகழ்ச்சியில் கூறுகையில், இலங்கை மண்ணில் மட்டுமல்ல, உலகில் எந்தவொரு பகுதிக்கும் சென்று அதிக ஓட்டங்கள் குவிக்கும் திறமை வாய்ந்தவர் சங்கக்காரா.

அவரது ஆட்டம் தொழில்நுட்ப ரீதியாக மிகவும் நேர்த்தியானது. அவர் வேகப்பந்து வீச்சாளர்களை துல்லியமாக கணித்து ஆடும் திறமையும் ஒருங்கே பெற்றவர்.

சுழற்பந்திலும் அவர் தமது திறமையை வெளிப்படுத்தியவர். என்னை பொறுத்தவரையில் அவர் திறமையான சகலதுறை வீரராக திகழ்ந்து வருவதாக லக்ஷ்மன் குறிப்பிட்டார்.

மேலும், தமது கிரிக்கெட் வாழ்க்கையில் பெரும்பாலும் விக்கெட் கீப்பராகவே செயல்பட்டு வந்துள்ள சங்கக்கார மட்டைப்பந்தாளராக களமிறங்கி 100, 200 என ஓட்டங்கள் குவிப்பதற்கு பெருமளவு முயற்சி மேற்கொண்டிருக்க வேண்டும் என தமது வியப்பையும் அவர் வெளிப்படுத்தினார்.

சங்கக்கார போன்ற ஒரு கிரிக்கெட் வீரரை இலங்கை அணி பெற்றிருந்தது அதிர்ஷ்டமே. அதே போன்று உலகில் திறமையான கிரிக்கெட் வீரர்களுக்கு இணையாக சங்கக்காரவும் கருதப்படுவார் எனத் தெரிவித்துள்ளார். (க)

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.08.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.